வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வீர மலர்

Email : news@eelanadu.lk மலர் : 06 04.05.2025 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 125 பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# பஹல்காம் தாக்குதல் தீவிரவாதிகள் கொழும்புக்குத் தப்பி வந்தார்களா?

## கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வந்த விமானத்தில் தீவிர சோதனை

கொழும்பு, மே 04

**பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலில் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருப்பதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்ததை அடுத்து, சென்னையில் இருந்து வந்த சிறீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் நேற்று பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சிறப்பு பாதுகாப்பு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டது.**

இந்தியாவிலிருந்து எச்சரிக்கை வந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உறுதிப்படுத்தினார். இதனால் இலங்கை பாதுகாப்புப் படையினர் விமானம் வந்தடைந்தவுடன் சோதனை நடத்தினர். விமானம் முற்பகல் 11:59 மணிக்கு கொழும்பில் தரையிறங்கியதை தொடர்ந்து உள்ளூர் அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்த விரிவான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது என்று சிறீலங்கன் எயார்லைன்ஸ் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது. விமானத்தில் இருந்ததாக நம்பப்படும் ஒரு சந்தேக நபர் குறித்து சென்னை கட்டுப்பாட்டு மையத்தால் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

ஆய்வுக்குப் 15

# இலங்கை தமிழரசுக் கட்சிக்கு மக்கள் வாக்களிக்கவேண்டும்

## கோருகின்றார் ஆனந்தசங்கரி

கிளிநொச்சி, மே. 04

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் எனவும், வேறுபாடுகளை மறந்து தேர்தலின் பின்னர் அனைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைய வேண்டும் எனவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

கிளிநொச்சியில் உள்ள அலுவலகத்தில் 15

# அரச மற்றும் தனியார் துறையினருக்கு மே 6 வேதனக் குறைப்பின்றி விடுமுறை

கொழும்பு, மே. 04

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு, எதிர்வரும் 6ஆம் திகதி அரச மற்றும் தனியார் துறையினருக்கு வேதன குறைப்பின்றி விடுமுறை வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதேநேரம், பல்கலைக்கழகங்களின் பணிக்குழாமினருக்கும் மாணவர்களுக்கும் விடுமுறை வழங்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரிடம் தேர்தல்கள் ஆணைக்குழு கோரியுள்ளது.

அத்துடன், தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் பணிக்குழாமினருக்கும் மாணவர்களுக்கும் குறித்த தினத்தில் விடுமுறை வழங்குமாறும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.(அ)

# படுகொலை செய்யப்பட்ட ஊடகர்களுக்கு நீதி தேவை

## யாழ்ப்பாணத்தில் நேற்று போராட்டம்



யாழ்ப்பாணம், மே 04

சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு , படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி யாழ்ப்பாணத்தில் ஊடகவியாலாளர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் ஊடக அமையத்துக்கு முன்பாக நேற்று 15

# “6 மாதங்களில் திணறுகிறது அரசு”

கொழும்பு, மே. 04

“ஊழலை ஒழிக்கிறோம்” என அநுர கூறுவதை, நான் வரவேற்கிறேன். எனினும், இதை மட்டும் சொல்லி, நாள் தோறும் புது, புது பொய்களையும் சொல்லி, இனியும் நாட்டை நடத்த முடியாது.” 15

# ஐ.தே.க., பெரமுன மீண்டெழுகின்றன

## சொல்கிறார் ராஜித

கொழும்பு, மே. 04

ஐக்கிய தேசியக் கட்சியும், பொதுஜன பெரமுன கட்சியும் மீண்டெழுந்து வருகின்றன என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இவ்வாறு 15

# ரணிலுடன் திரிந்த செல்லப்பிள்ளை யாழ்ப்பாணத்தில் கால் வைப்பாரா?

## கேட்கிறார் அமைச்சர் சந்திரசேகர்

கொழும்பு, மே 04

கொழும்பில் கோட்சூட்டுடனும், யாழ்ப்பாணத்தில் வேட்டியுடனும் வலம் வருகின்ற - ரணிலின் கோப்புகளைத் தூக்கித் திரிந்த செல்லப்பிள்ளை, அநுரவை யாழ்ப்பாணத்தில் கால் வைக்கவிடமாட்டோம் எனக் கூறுகின்றது. முதலில் தனக்கு கால் வைக்க முடியுமா என்பதை யாழ்ப்பாணத்து மக்களால் நிராகரிக்கப்பட்ட அந்நபர் தேடி பார்க்கவேண்டும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் 15

# ஜனாதிபதி வியட்நாம் பயணமானார்

கொழும்பு, மே 04

வியட்நாம் ஜனாதிபதி லுவோங் குவாங்கின் அழைப்பின் பேரில், ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க வியட்நாமுக்கு அரச விஜயம் மேற்கொள்கிறார். அதற்காக ஜனாதிபதி நேற்று இரவு நாட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றார்.

வியட்நாம் மற்றும் இலங்கைக்கு இடையிலான இராஜதந்திர உறவுகளின் 55 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இடம்பெறும் ஜனாதிபதியின் 15

# இம்முறை தேர்தல் அவதானிப்பில் வெளிநாட்டுக் குழுக்கள் இல்லை!

கொழும்பு, மே 04

இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டுத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் கலந்துகொள்ளமாட்டார்கள் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சர்வதேச ரீதியில் மிகவும் முக்கியமானது என கருதாமையின் காரணமாக வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் கலந்து கொள்ளமாட்டார்கள் என ஆணையாளர் 15

39 ஆவது ஆண்டு நினைவுகள்
தமிழ் தேசிய ஒற்றுமை வாரம் ( சித்திரை 29 - வைகாசி 06 )


தலைவர் சிறி சபாரத்தினம்
தூய சிந்தனைகளையும்
நல்ல எண்ணங்களையும்
விடுதலைக்காக விட்டுச்சென்ற
வரலாற்று நாயகன்
இலட்சியக் கனவுகளுடன்
இறுதிவரை போராடி
ஈழ விடுதலையை உரமூட்டி நேசித்த
ஒப்பற்ற எம் தலைவன் !!
1986 சித்திரைத் திங்கள் 29 தொடக்கம் வைகாசித் திங்கள் 06 வரை விடுதலைக் களத்தில் காவியமான எமது தலைவர் சிறி சபாரத்தினம் அவர்களுக்கும் ஏனைய ரெலோ போராளிகளுக்கும், ஆதரவாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் மீண்டும் மீண்டும் எமது வீர வணக்கங்களை செலுத்துகின்றோம்.
தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (TELO)
இணையம் : www.telo.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள பேரினவாதம் தமிழர்களுக்காக ஒருபோதும் எதுவும் செய்ய தயாரில்லை

### சேர்ந்து பயணிப்பதால் என்ன பலன் - சிறீதரன் எம். பி. கேள்வி

மன்னார், மே 04

சிங்கள பேரினவாதம் ஒரு காலமும் தமிழர்களுக்காக எதுவும் செய்யத் தயார் இல்லை. எனவே, நாங்கள் அவர்களுடன் சேர்ந்து பயணிப்பதால் என்ன பலன் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாங்கள் ஒற்றுமையாகவும் பலமாகவும் இருக்கிறோம் என்பதை உலகம் புரிந்துகொள்ளும் வரைக்கும்தான் எங்களுக்கு விடிவு சாத்தியமாக இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மன்னார் அடம்பனில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழர்களாக நாங்கள் வாழ வேண்டும் என்றால் தமிழர்கள் தம்மை தேசிய இனமாக அடையாளப்படுத்த வேண்டும் என்றால் நாங்கள் இந்த மண்ணின் மைந்தர்களாக வாழ வேண்டும் என்றால் எம்மீதான அடக்குமுறைகள் நிறுத்தப்பட வேண்டும்.

இந்த அரசாங்கத்துக்கு தமிழர் தரப்பால் இரு பிரச்னைகள் உள்ளன. ஒன்று ஜெனிவாவில் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானம். தமிழர்கள்மீது இனப்படுகொலை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமிழர்கள் போர் குற்றங்களுக்கு உள்ளாக்கப்பட்டு உள்ளார்கள். அவர்களுக்கு உணவு அனுப்பாமல் கொல்லப்பட்டார்கள்.

நான்கு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இருந்த போது 70 ஆயிரம் பேருக்குத்தான் உணவு அனுப்பப்பட்டது. குழந்தைகள் குண்டுத்தாக்குதல்களில் அழிக்கப்பட்டனர். இதனை உலக நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளது. இதனை அறிக்கை மூலம் ஆவணப்படுத்தி ஜெனிவாவுக்கும் ஏனைய உலக நாடுகளுக்கும் கொடுத்தவர் வேறு யாரும் இல்லை, மன்னார் மறை மாவட்டத்தின் மறைந்த ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகைதான்.

எந்த அரசியல் கட்சிகளும் அதனை வழங்கவில்லை. நாங்கள் சாட்சியம் அளிக்கவில்லை. அதை வழங்கியது ஒரு மதத் தலைவர். அவர் அரசியல்வாதி இல்லை.

அவர் வழங்கிய ஆவணத்தை அழிக்க முடியாத நிலை காணப்படுகிறது. இலங்கைக்கு இந்த ஆவணம் ஒரு பெரும் தலையிடி"- என்றார். (எ)

# தேசிய தலைவருக்கு சிலை

### அமைச்சர் சந்திரசேகர் உறுதியளிப்பாரா? முன்னாள் எம். பி. சிவாஜிலிங்கம் கேள்வி

யாழ்ப்பாணம், மே 04

வல்வெட்டித்துறையில் தமிழீழ தேசிய தலைவருக்கு வெண்கல சிலை வைப்போம். இறங்குதுறைக்கு தேசிய தலைவரின் பெற்றோரின் பெயர் வைப்போம் என கடற்றொழில் அமைச்சர் இரா. சந்திரசேகர் உறுதியளிப்பாரா ? என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.



தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசார பாடல் ஒன்றில் தேசிய தலைவருக்கு சிலை வைப்போம். இறங்குதுறைக்கு தேசிய தலைவரின் பெற்றோரின் பெயர்களை பதிப்போம் எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

குறித்த பாடல் சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ள நிலையில் பாடலில் குறிப்பிட்டுள்ளமை போன்று செய்வார்கள் எனில், அதனை அமைச்சர் சந்திரசேகர், ஊடகங்கள் வாயிலாக வெளிப்படுத்தட்டும். அதனை விடுத்து, ஆதரவு பாடலில் யார் குறிப்பிட்டார்கள் எனக் குறிப்பிடாமல் மக்களை குழப்பும் செயலில் ஈடுபட வேண்டாம் என சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்தார். (எ)

# எதிர்க்கட்சியினரின் வெற்றிக்கும் ஆலோசனை வழங்க அரசு தயார்

வவுனியா, மே 04

எதிர்க்கட்சியினர் தேர்தலில் வெற்றி பெற எவ்வாறான உத்திகளை பயன்படுத்த வேண்டும் என்று தேவையான ஆலோசனைகளை வழங்கத் தயார் என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மே தினத்துக்கு காலிமுகத்திடலில் திரண்டவர்களை பார்க்கின்ற போது தேசிய மக்கள் சக்தியை மக்கள் விரும்புகிறார்கள். அது அபிமானம் மிக்க கட்சியாக மக்கள் மத்தியில் காணப்படுகின்றது என்பது தெளிவாகின்றது.

இந்த நிலையில் வட மாகாணத்திலும் தேசிய மக்கள் சக்தியின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

இதற்குக் காரணம் என்னவென்றால் எதிர்க்கட்சிகள் தேசிய மக்கள் சக்திக்கு சேறுபூசும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமையேயாகும்.

உண்மையில் அவர்கள் இவ்வாறான செயல்பாட்டை மாற்றி இதுவரை காலமும் என்ன செய்தார்கள், இனி என்ன செய்யப் போகின்றார்கள் என்பதனை கூறுவார்களாக இருந்தால் அது ஆக்கபூர்வமானதாக இருக்கும். அது அவர்கள் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பாகக்கூட இருக்கலாம்.

எனவே, அவர்கள் தேர்தல் யுக்திகளை மாற்றி அமைப்பது தான் சிறப்பு. எனவே அவர்கள் எதிர்வரும் தேர்தல்களிலாவது தேர்தல் உத்திகளை மாற்றி வெற்றி பெறுவதற்கு முயற்சிக்கலாம்.

தேவை ஏற்பட்டால் எதிர்க்கட்சியினர் தேர்தலில் எப்படி உத்திகளை பயன்படுத்த வேண்டும். எவ்வாறு ஆக்கபூர்வமான செயல்பாட்டை முன்னெடுக்கலாம் என்பது தொடர்பான ஆலோசனைகளை தேவைப்பட்டால் வழங்குவதற்கு நான் தயாராகவே இருக்கிறேன்"-என்றார்.

நல்லை ஆதீன குரு முதல்வரை நினைவுகூர்ந்து

# இவ்வாரத்தை பிரார்த்தனை வாரமாக அனுஷ்டிக்க சைவமகா சபை கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 04

சிவபெருமான் திருவடி நிழலை அடைந்த நல்லை ஆதீன குருமகா சந்நிதானத்தை நினைவுகூர்ந்து இவ்வாரத்தை பிரார்த்தனை வாரமாக அனுஷ்டிக்குமாறு ஈழத்து சைவசமயிகளை அகில இலங்கை சைவ மகா சபை வேண்டுகின்றது -

இவ்வாறு அகில இலங்கை சைவ மகா சபை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அந்த அறிக்கையில், குறிப்பாக இன்று ஞாயிற்றுக் கிழமை அனைத்து அறநெறிப் பாடசாலைகளிலும் சமய நிறுவனங்களிலும் சுவாமிகளின் நினைவுப்பிரார்த்தனைகளை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்குமாறு வேண்டுகின்றோம்.

ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலம் ஈழத்து சைவ சமயத்தின் அடையாளமாக உலகளாவிய ரீதியிலும் நாடளாவிய ரீதியிலும் அனைத்து நிகழ்வுகளையும் பிரதிநிதிப்படுத்திய உயரிய குருமுதல்வருக்கு நாம் செய்யும் கைமாறாக அது இருக்கும்

இளமைக்கால வாழ்வை சைவ சமய மேன்மைக்காக துறந்து யுத்த கால நெருக்கடிகளை எல்லாம் தன்னந்தனியாக கடந்து சைவர்களின் அடையாளத்தை பேணிய மகத்தான ஆத்மா அவர்.

எளிமையான எவரும் அணுகக்கூடிய சமயத் தலைவரான ஆதீனம் மிக எளிமையாகவே தன் விருப்பப்படி இறுதி வணக்க நிகழ்வையும் கண்டார்.

அந்த மகத்தான குருமுதல்வருக்கு உயரிய கௌரவத்தையும் வணக்க வழிபாடுகளையும் செய்வது மட்டுமன்றி சுவாமிகள் கட்டிக்காத்த உயரிய ஆதீன பாரம்பரியத்தை சைவ சமய பீடங்கள், அமைப்புகளின் தலைவர்கள் கூடி அவர் விட்டுச் சென்ற பணியைத் தொடர குருமகா சந்நிதானம் ஒருவரை உடனடியாக தேர்ந்தெடுத்து அருளாட்சி பொறுப்பை ஒப்படைத்தல் சைவ சமயிகள் யாவர் முன்னும் தற்போது உள்ள கடமையாகும் என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# பகிடிவதையை எதிர்த்த மற்றொரு மாணவன் மீது கொடூர தாக்குதல்

கொழும்பு, மே 04

சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தில் மூன்றாம் ஆண்டு மாணவர் ஒருவர் பகிடிவதைக்கு எதிர்ப்பு தெரிவித்ததால், அதே ஆண்டு மற்றும் நான்காம் ஆண்டு மாணவர்கள் குழுவால் தாக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளான மாணவர் தற்போது வெலிகம பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர் ஒருவர் பகிடிவதை காரணமாக ஏற்பட்ட மன அழுத்தத்தால் உயிரிழந்த சம்பவம் நாட்டில் இன்னும் பேசுபொருளாக இருக்கும் நிலையில், இந்தத் தாக்குதல் நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

தாக்கப்பட்ட மாணவர் பல்கலைக்கழகத்தில் பகிடிவதைக்கு எதிராக குரல் கொடுத்தவர் என தெரிவிக்கப்பட்டது.

சுமார் 20 மாணவர்கள் அவரது விடுதிக்கு சென்று தலைக்கவசத்தால் தலையிலும் முதுகுப் பகுதியிலும் மனிதாபிமானமற்ற வகையில் தாக்கியுள்ளனர் என அந்த மாணவர் தெரிவித்துள்ளார். (எ)

# ரூ. 1,500 இலஞ்சம் பெற்றவர் கைது!

கொழும்பு, மே 04

1,500 ரூபாய் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் ரயில்வே திணைக்களத்தை சேர்ந்த சுற்றுலா பயணச்சீட்டு பரிசோதகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

களனியை சேர்ந்த நபரின் முறைப்பாட்டின் பேரில் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு சந்தேக நபரை கைது செய்தது.

கடந்த ஏப்ரல் 28 ஆம் திகதியன்று, செல்லுபடியாகும் பயணச்சீட்டு இல்லாமல் கொம்பனித்தெரு ரயில் நிலையம் வழியாக பயணித்ததாகக் குற்றஞ்சாட்டி, முறைப்பாட்டாளரின் தேசிய அடையாள அட்டையை பரிசோதகர் பறித்து வைத்திருந்தார். அத்துடன், அடையாள அட்டையை திருப்பி வழங்க 3,000 ரூபாயை இலஞ்சமாகக் கோரியுள்ளார்.

எனினும், நேற்று முன்தினம் அவர் அந்தத் தொகையை 1,500 ரூபாயாகக் குறைத்து, இலஞ்சமாகப் பெறும்போது கைது செய்யப்பட்டார். (எ)

# அரசியல் கட்சிகளின் முகவர்களுடன் யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 04

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் தொடர்பாக அரசியல் கட்சிகளின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், சுயேச்சை குழுத் தலைவர்களுடனான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்றுமுன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த தெரிவத்தாட்சி அலுவலர், நாளை மறுதினம் 6ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் இம்முறை யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 17 உள்ளூராட்சி சபைகளுக்குமாக 243 வட்டாரங்களில் 3519 வேட்பாளர்கள் போட்டியிடுவதாகவும் வேட்பாளர்கள் சட்டங்கள் மற்றும் சுற்று நிருபத்துக்கு அமைய ஜனநாயக ரீதியில் பிரசார நடவடிக்கைகளை எந்தவிதமான முரண்பாடுகளுமின்றி ஆரோக்கியமாக மேற்கொள்வதனை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். மேலும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 517 வாக்களிப்பு நிலையங்களுக்கும் வட்டாரங்களில் நடைபெறும் வாக்கெண்ணும் நிலையங்களுக்கும் மற்றும் மாவட்ட செயலகத்தில் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்கள் பெற்றுக்கொண்ட இறுதி ஆசனங்களின் எண்ணிக்கையை வெளியிடும் நிலையத்துக்கும் வேட்பாளர்களின் முகவர்களை சரியான பொறிமுறையூடாக நியமித்து நீதியாகவும் சுதந்திரமாகவும் தேர்தல் நடைபெறுவதனை உறுதிப்படுத்துவதற்கு அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலில் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் இ. சசீலனும் தெளிவூட்டல்களை வழங்கினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப் பிரச்னைக்கு தீர்வுகாண அரசு கவனம் செலுத்தவேண்டும்

## அநுர அரசிடம் செல்வம் எம். பி. வலியுறுத்தல்

மன்னார், மே 04

அநுர அரசாங்கம் எமது இனப்பிரச்னைக்கு தீர்வுகாண கவனம் செலுத்த வேண்டும் என்று ரெலோவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியோ அல்லது ஜே. வி. பி. அரசாங்கமோ இனவாதத்தை அழிப்பதாக கருதினால் அல்லது பயங்கரவாதமாக இதனைக் கருதினால் அது அவர்களின் தவறு என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இனப்பிரச்னை இருக்கின்றது. அதனை தீர்க்கும் கடமையும், பொறுப்பும் இந்த அரசாங்கத்திடம் இருக்கின்றது.

இனவாதத்தை ஒழிப்போம் என்று மீண்டும் எங்கள் மீது எமது மக்களின் வாக்குகளையும் பெற்றுக்கொண்டு இந்த அரசாங்கம் எங்கள்மீது அடக்குமுறையை திணிக்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்குமாக இருந்தால் இந்த அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுக்கும் ஒரு சூழ்நிலை ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மன்னாரில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், "ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மன்னார் மாவட்டத்தில் நிர்ணயிக்கக் கூடிய ஒரு சக்தியாக திகழும். மன்னார் நகர சபை உள்ளடங்கலாக அனைத்து சபைகளிலும் யாருடன் கூட்டு சேர்ந்து ஆட்சி அமைப்பது என்பது குறித்து உரிய நேரத்தில் முடிவெடுப்போம்.

குறிப்பாக, தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் கட்சிகளுடன் எமது கலந்துரையாடல்கள் இடம் பெறும். அவர்களுடன் இணைந்து உள்ளூராட்சி சபைகளை அலங்கரிக்கும் நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுப்போம்.

தேசியத்துடன் இருக்கின்ற தமிழ்க் கட்சிகள் ஓரணியில் திரளக்கூடிய அத்திபாரமாக இந்தத் தேர்தல் அமையும். அந்த வகையில் இந்த ஒற்றுமை என்பது மாகாண சபைத் தேர்தல் வந்தாலும் கூட குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் மக்களுக்கு ஏற்படக்கூடிய பிரச்னை எதுவாக இருந்தாலும் ஒற்றுமையாக நாங்கள் செயல்படக்கூடிய ஒரு சூழலை மக்கள் ஆதரிக்கக்கூடிய ஒரு வாய்ப்பு உள்ளது.

உள்ளூராட்சி சபைகளில் ஒற்றுமை வெளிப்படுகின்ற போது தொடர்ச்சியாக நாங்கள் சேர்ந்து பயணிக்கக்கூடிய சில நேரங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என பயணிக்கக் கூடிய ஓர் அத்திபாரத்தை இடுகின்ற ஒரு சந்தர்ப்பத்தை நாங்கள் இதனால் ஏற்படுத்தி கொள்ள முடியும்.

என்.பி. பி. அரசாங்கத்தினர் நாட்டின் பல பிரதேசங்களில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். அவர்கள் இனவாதத்தை ஒழிப்பதாக தெரிவிக்கின்றார்கள். அதற்காக சட்டங்களை கொண்டு வருவதாகவும் கூறுகிறார்கள்.

குறிப்பாக வடக்கு - கிழக்கில் பூர்வீகத்தை கொண்ட ஒரு பிரதேசமாக இருந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில் எமது இனத்துக்கு ஏற்படுத்துகின்ற அநீதிகளை தட்டிக்கேற்கின்ற வகையில் ஜனநாயக போராட்டங்கள், ஆயுதப் போராட்டங்கள் இடம் பெற்றன.

அதற்கான தியாகங்களை எமது இளைஞர் யுவதிகள், பொதுமக்கள் எல்லோரும் செய்துள்ள வரலாறு இன்றைக்கும் உள்ளது. இந்த வரலாற்றின் தன்மைதான் ஐ. நா. சபை வரைக்கும் கதவை தட்டி உள்ளது என்பது உண்மை - என்றார். (எ)

# இறுதிச் சடங்கில் தகராறு குடும்பஸ்தர் படுகொலை

மாத்தளை, மே 04

மாத்தளை - சிகிரியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹேன்வலயகம, கிம்பிஸ்ஸ பகுதியில் இடம்பெற்ற இறுதிச் சடங்கு நிகழ்வு ஒன்றில் இரு நபர்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறில் கூரிய ஆயுதத்தால் தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக சிகிரியா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலைச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் காயமடைந்தவர் கிம்பிஸ்ஸ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை செய்யப்பட்டவர் ஹேன்வலயகம, கிம்பிஸ்ஸ பகுதியைச் சேர்ந்த 55 வயதுடையவர் ஆவார்.

கொலை செய்யப்பட்டவருக்கும் சந்தேக நபருக்கும் இடையே சிறிது காலமாக நிலவிய தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சிகிரியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

### விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை:

# போதைப்பொருட்களுடன் மேலும் 353 பேர் சிக்கினர்

கொழும்பு, மே 04

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது போதைப்பொருட்களுடன் மேலும் 353 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, ஹெரோயின் போதைப்பொருளுடன் 102 பேரும், ஐஸ் போதைப்பொருளுடன் 143 பேரும், கஞ்சா போதைப்பொருளுடன் 100 பேரும், கஞ்சா செடிகளுடன் 04 பேரும் போதை மாத்திரைகளுடன் 04 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, 186 கிராம் 353 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும், 337 கிராம் 226 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும், 10 கிலோ 470 கிராம் 380 மில்லி கிராம் கஞ்சா போதைப்பொருளும், 162 போதை மாத்திரைகள், 25,367 கஞ்சா செடிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (எ)

### க. பொ. த. உயர்தர பெறுபேறு:

# வவுனியா வடக்கு கல்வி வலயம் வடக்கு மாகாணத்தில் முதலிடம்

வவுனியா, மே 04

2024 ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்தர பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் வவுனியா வடக்கு வலயம் முதலிடம் பெற்று சாதித்துள்ளது.

வடக்கின் 12 கல்வி வலயங்களில் இருந்தும் பரீட்சைக்கு முதல் தடவை தோற்றி சித்தி பெற்றவர்களின் வீதத்தை அடிப்படையாக கொண்டு வட மாகாண கல்வித் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட பகுப்பாய்வு அறிக்கையிலேயே இந்த விடயம் வெளிப்பட்டது.

இதன்படி, வவுனியா வடக்கு வலயத்திலிருந்து முதல் தடவையாக 253 மாணவர்கள் உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய நிலையில் 189 பேர் சித்தி பெற்றுள்ளனர். அந்தவகையில் 74.7 சதவீதமானவர்கள் சித்தி பெற்று வடக்கில் முதலாவது இடத்தை பிடித்துள்ளது.

அத்துடன், 73.5 சதவீத சித்தியை பெற்று தென்மராட்சி வலயம் இரண்டாம் இடத்தையும் 70.5 சதவீத சித்தியைப் பெற்று மன்னார் வலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

70.1 சதவீத சித்தியுடன் யாழ்ப்பாணம் வலயம் நான்காம் இடத்தையும் 69.8 சதவீத சித்தியுடன் மடு வலயம் ஐந்தாம் இடத்தையும் 69.4 சதவீத சித்தியுடன் தீவக வலயம் ஆறாம் இடத்தையும் பெற்றுள்ளன.

அடுத்த இடங்களில், 68.1 சதவீத சித்தியுடன் வலிகாமம் வலயம், 67.8 வீத சித்தியுடன் வவுனியா தெற்கு வலயம், 65.2 சதவீத சித்தியுடன் வடமராட்சி வலயம், 62.3 சதவீத சித்தியுடன் துணுக்காய் கல்வி வலயம், 60.6 சதவீத சித்தியுடன் கிளிநொச்சி தெற்கு வலயம், 55.4 சதவீத சித்தியுடன் கிளிநொச்சி வடக்கு வலயம் ஆகியன உள்ளன. (எ-10)

# கைதிக்கு கைபேசி கான்ஸ்டபிள் கைது

கொழும்பு, மே 04

சிறைச்சாலையில் உள்ள பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த போதைப்பொருள் கடத்தல்காரரான "ஹரக் கட்டா" என அழைக்கப்படும் நதுன் சிந்தக விக்கிரமரத்ன என்பவருக்கு கைபேசியை கொடுத்ததாக கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

தங்காலை பழைய சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது "ஹரக் கட்டா"விடமிருந்து கைபேசி ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலுப்பைக்கடவை பொலிஸ் விசேட அதிரடிப் படை முகாமில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் தங்காலை பழைய சிறைச்சாலையில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்த போது "ஹரக் கட்டா"வுக்கு கைபேசியை கொடுத்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# உயிரிழந்த பல்கலைக்கழக மாணவனுக்கு நீதி கிடைக்கும்

## சட்டத்தரணிகள் நம்பிக்கை

கொழும்பு, மே 04

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவரின் மரணம் தொடர்பாக பாதிக்கப்பட்ட தரப்பினர் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலங்களின் அடிப்படையில், எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான உதவிகளை வழங்குவதாக பாதிக்கப்பட்ட தரப்பினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட சட்டத்தரணிகள், உயிரிழந்த மாணவனுக்கும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கும் நீதி கிடைக்கும் என்று நம்புவதாகக் கூறினர்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பொறியியல் பீடத்தில் இரண்டாம் ஆண்டு மாணவரான சரித் தில்ஷான், கடந்த 29 ஆம் திகதி தற்கொலை செய்து கொண்டார்.

மன அழுத்தம் காரணமாக தற்கொலை செய்து கொள்வதாக அவர் கடிதம் எழுதியிருந்தாலும் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பகிடிவதையை தாங்க முடியாமல் சரித் தற்கொலை செய்து கொண்டதாக அவரது உறவினர்கள் மற்றும் நண்பர்கள் குற்றஞ்சாட்டினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் உயர்கல்வி அமைச்சு நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு, இந்த விடயம் குறித்து முழுமையான விசாரணை நடத்த ஒரு விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அதன் அறிக்கை கிடைத்தவுடன் சம்பவம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சரித்துடன் பகிடிவதைக்கு உள்ளானதாக கூறப்படும், 16 மாணவர்களிடம் சமனலவெவ பொலிஸார் நேற்று முன்தினம் வாக்குமூலங்களைப் பதிவு செய்தனர்.

அந்த மாணவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பில் சட்டத்தரணிகளான ரச்சிக பலிஹவடன மற்றும் கல்ஹார விஜேசிங்க ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர். (எ)

# ஆட்பதிவு திணைக்கள சேவை நிறுத்தம்

கொழும்பு, மே 04

ஆட்பதிவுத் திணைக்களம் விசேட அறிவிப்பு எதிர்வரும் 6 ஆம் மற்றும் 7 ஆம் திகதிகளில் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் மாகாண அலுவலகங்களில் ஒருநாள் சேவை உள்ளிட்ட ஏனைய அனைத்து சேவைகளும் இடம் பெறாது என ஆட்களை பதிவுச் செய்யும் திணைக்களம் பொது மக்களுக்கு அறிவித்துள்ளது.

விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டு குறித்த திணைக்களம் இதனை அறிவித்துள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 70 ஆயிரம் வேட்பாளர்களில் 10 ஆயிரம் பேரே பிரசாரம்!

## உள்ளூராட்சி தேர்தல் மந்தகதியில் தேர்தல் ஆய்வுகள் நிறுவனம் தகவல்

கொழும்பு, மே 04

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சுமார் 70 ஆயிரம் வேட்பாளர்கள் போட்டியிடுகின்ற போதிலும், சுமார் 10 ஆயிரம் வேட்பாளர்கள் மாத்திரமே நேரடி தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளனர் என்று ஜனநாயக சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் ஆய்வுகள் நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்தார்.

கடந்த தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் இந்தத் தேர்தலில் மக்கள் மற்றும் வேட்பாளர்களின் ஆர்வம் குறைவடைந்துள்ளதோடு, பிரசாரங்களும் மந்த கதியிலேயே இடம்பெற்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேர்தல்கள் ஆணைக்குழுவால் அமைதிக்காலம் அறிவிக்கப்பட்டாலும் சிலர் இறுதி நேரத்தில் கூட சமூகவலைத்தளங்கள் உள்ளிட்டவற்றின் ஊடாக பிரசாரங்களை முன்னெடுப்பதற்கு முயற்சிப்பர்.

அரசியல் கட்சிகளாலும் இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படக்கூடும். தேர்தல் முடிவுகள் வெளியாகி வெற்றி பெறுபவர்களுக்கு இவ்வாறான சட்ட விரோத செயல்பாடுகள் பாதகமாக அமையக் கூடும். எனவே, அமைதிக் காலத்தில் எந்த வகையிலும் பிரசாரங்களை முன்னெடுக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெறும் ஏழாவது சந்தர்ப்பம் இதுவாகும். எவ்வாறிருப்பினும் கடந்த ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மந்தமான ஒரு நிலவரத்தையே காண்பிக்கிறது.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்தத் தேர்தல் அதிக நேரத்தை நீதிமன்றங்களிலேயே செலவிடப்பட்ட ஒன்றாகவும் அவதானிக்கப்பட்டுள்ளது.

மறுபுறம் பெருமளவான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதனால், சில சிக்கலான நிலைமைகளும் ஏற்பட்டன. இவை தொடர்பில் சட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமையால் அரசியல் கட்சிகளும் விளம்பிலேயே நின்று கொண்டிருந்தன.

339 உள்ளூராட்சி மன்றங்களில் 114 உள்ளூராட்சி மன்றங்களில் மாத்திரமே ஒரு வேட்புமனு கூட நிராகரிக்கப்படவில்லை. இது ஒரு வகையில் சவால் மிக்கதொரு நிலைமையாகும். இதனால் கட்சிகளும் வேட்பாளர்களும் நெருக்கடிகளை எதிர்கொண்டதால் பிரசாரங்களும் மந்தகதியிலேயே இடம்பெற்றன.

2010ஆம் ஆண்டிலிருந்து மதிப்பிடும் போது இம்முறை இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலே மிகக் குறைந்தளவான செலவில் நடத்தப்படும் தேர்தலாகவும் காணப்படுகிறது.

ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களிலும் மிகக் குறைந்தளவிலேயே விளம்பரங்களும் வெளியிடப்பட்டுள்ளன. வேட்பாளர்கள் மற்றும் மக்கள் மத்தியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மீதான ஆர்வம் மிகக் குறைவாகவே காணப்படுகிறது.

இம்முறை சுமார் 70 ஆயிரம் வேட்பாளர்கள் தேர்தலில் களமிறங்கியுள்ளனர். இவர்களில் சுமார் 10 ஆயிரம் பேர் மாத்திரமே பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்று எமது மதிப்பீட்டில் இனங்காணப்பட்டுள்ளது.

49 அரசியல் கட்சிகளும், 75 சுயேச்சை குழுக்களும் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ள போதிலும், 3 பிரதான கட்சிகள் மாத்திரமே நேரடி பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளன. ஆயிரக்கணக்கான வேட்பாளர்களுக்காக தேர்தல்கள் ஆணைக்குழு பெரும் தொகையை செலவிட்டிருக்கிறது - என்றார். (எ)

# பல்கலை. மாணவர்களுக்கு எதிரான துன்புறுத்தலை முதலில் நிறுத்துங்கள்

## ஜே.வி.பி. மாணவர் செயல்பாட்டாளர்களிடம் நாமல் ராஜபக்ஷ எம். பி. கோரிக்கை

கொழும்பு, மே 04

பல்கலைக்கழகங்களில் புதிய மாணவர்களுக்கு எதிரான துன்புறுத்தலை நிறுத்துவதற்கு ஜே.வி.பியின் மாணவர் செயல்பாட்டாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிறீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் நாவலப்பிட்டி மற்றும் கம்பளை பகுதிகளில் நடந்த பிரசார கூட்டத்திலேயே அவர் வழிவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதிவேக நெடுஞ்சாலைகள் அமைத்துக்காக எங்களை விமர்சித்த ஜே. வி. பியினர் மேதின பேரணிக்கு மக்களை அந்த அதிவேக நெடுஞ்சாலை வழியாக கொழும்புக்கு அழைத்து சென்றதோடு, அந்த ஆதரவாளர்கள் தங்கள் வாகனங்களை அதிவேக நெடுஞ்சாலையில் நிறுத்தி உணவு உட்கொண்டுள்ளனர். இது எங்களுக்கு மகிழ்ச்சியளிக்கிறது.

பல்கலைக்கழகங்களில் புதிய மாணவர்களுக்கு எதிரான துன்புறுத்தலை நிறுத்துவதற்கு ஜே. வி. பியின் மாணவர் செயல்பாட்டாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதை நிறுத்திய பிறகு, நாட்டில் கல்வியை மேம்படுத்த முடியும் என்றும் கட்சிக்குள் உள்ள பிரச்னையைத் தீர்த்த பிறகு நாட்டின் பிரச்னைகளைத் தீர்க்க முடியும் - என்றார். (எ)

# ஏப்ரலில் மட்டும் 174,608 சுற்றுலா பயணிகள் வருகை

கொழும்பு, மே 04

2025 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் மட்டும் ஓர் இலட்சத்து 74 ஆயிரத்து 608 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 8 இலட்சத்து 96,884 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

ஏப்ரல் மாதத்தில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 38,744 ஆகும்.

மேலும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 17,348 சுற்றுலாப் பயணிகளும், ரஷ்யாவிலிருந்து 13,525 சுற்றுலாப் பயணிகளும், ஜேர்மனியிலிருந்து 11,654 சுற்றுலாப் பயணிகளும், அவுஸ்திரேலியாவிலிருந்து 10,744 சுற்றுலாப் பயணிகளும், சீனாவிலிருந்து 8,667 சுற்றுலாப் பயணிகளும், பிரான்ஸிலிருந்து 8,276 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# மேலும் ஐந்து வேட்பாளர்கள் கைதாகினர்

கொழும்பு, மே 04

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் மேலும் ஐந்து வேட்பாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 06.00 மணி முதல் நேற்றுக் காலை 06.00 மணி வரை தேர்தல் விதி மீறல்கள் உள்ளிட்ட முறைப்பாடுக்கு அமைய இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 24 மணி நேரத்தில், நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து தேர்தல் தொடர்பான 08 குற்றவியல் முறைப்பாடுகளும், தேர்தல் விதிமீறல் தொடர்பான 27 முறைப்பாடுகளும் பெறப்பட்டுள்ளன.

அந்த முறைப்பாடுகள் தொடர்பாக ஐந்து வேட்பாளர்களும் 22 அரசியல் கட்சி ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி, உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக இதுவரை 43 வேட்பாளர்கள் உட்பட 233 நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 524 ஆக அதிகரித்துள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (எ)

# கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகம் முன்பு ஆர்ப்பாட்டம்



கொழும்பு, மே 04

கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்தியாவின் காஷ்மீர், பஹல்காமில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு எதிர்ப்பையும் கண்டனத்தையும் வெளிப்படுத்தும் வகையில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

முன்னாள் பிரதி அமைச்சர் பிரபா கணேசன் தலைமையிலான ஜனநாயக தேசிய கூட்டணியின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் இணைந்து "தீவிரவாதத்துக்கு எதிரான ஓர் அமைதி" என்ற தொனிப்பொருளில் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அப்பகுதியில் பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டிருந்தனர். (எ)

# பணம் திருட்டு சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ் அதிகாரி கைது

கொழும்பு, மே 04

காலி - அஹூங்கல்ல பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிளிலிருந்து 10 ஆயிரம் ரூபாய் பணம் என்பனவற்றை திருடியதாகக் கூறப்படும் முன்னாள் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் அஹூங்கல்ல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தத் திருட்டுச் சம்பவம் கடந்த 2024 மே 23 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் அஹூங்கல்ல பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் முன்னாள் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

# டான் பிரியசாத் படுகொலை; துப்பாக்கிதாரி சிக்கினார்!

கொழும்பு, மே 04

டான் பிரியசாத் படுகொலையில் பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் நேற்று முன்தினம் கொழும்பு கறுவா தோட்டத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

டான் பிரியசாத் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியவர் இவர்தான் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# மன்னாரில் வாக்காளர்களுக்கு வழங்கவிருந்த பாய்கள் மீட்பு

மன்னார், மே 04

வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்படவிருந்த பாய்கள், படுக்கை விரிப்புகளை அடம்பன் பொலிஸார் கைப்பற்றினர்.

மன்னார், அடம்பன் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே இவை மீட்கப்பட்டன.

1,400 பிளாஸ்ரிக் பாய்கள் கொண்ட 28 பொதிகளும் 1,400 படுக்கை விரிப்புகள் கொண்ட 14 பொதிகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

தேர்தலுக்காக வாக்காளர்களுக்கு விநியோகிப்பதற்காக ஸ்வர்ணபுரி கிராமத்தில் உள்ள ஒரு கைவிடப்பட்ட வீட்டில் ஏராளமான பொருட்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்று கிடைத்த தகவலை தொடர்ந்து, பொலிஸார் அந்த வீட்டை சோதனை செய்தனர்.

இந்த பொருட்கள் அனைத்தையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
04.05.2025 ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 21

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## புலிகளின் தங்கம்

2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது ராஜபக்ஷக்களின் மோசடிகளை அம்பலப்படுத்தப் போவதாக மைத்திரி - ரணில் அரசாங்கம் அறிவித்திருந்தது. அப்போது, சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசாங்கத்துடன் உறவாடியது.

குறிப்பாக, இறுதி யுத்தத்தின்போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியிலிருந்து ஏராளமான தங்க நகைகள் மற்றும் பணம் கைப்பற்றப்பட்டன என்றும் அவற்றை ராஜபக்ஷக்களும் அவர்களுக்கு நெருக்கமானவர்களும் தங்களுக்குள் பிரித்துக் கொண்டனர் என்றும் ஒரு கருத்து பரவியிருந்தது. இதேபோன்று, இறுதி யுத்தத்தின்போது, விடுதலைப் புலிகளுக்கு சொந்தமான ஏராளமான வாகனங்கள் கைப்பற்றப்பட்டன எனவும் ஒரு தகவல் பரவியிருந்தது. ஆனால், பின்னர் அவ்வாறான விடயங்கள் தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளையும் மைத்திரி அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் வழிகாட்டலில், தற்போது கைப்பற்றப்பட்ட தங்க நகைகளை தேசிய உடைமையாக்கப் போவதாகவும் அதேவேளை பொதுமக்களுக்குச் சொந்தமான நகைகள் இருப்பின் உரியவர்கள் அவற்றை பெற முடியுமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அன்றைய சூழலில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழ்ந்த மக்கள் தங்களின் நகைகளை விடுதலைப் புலிகளின் தமிழீழ வைப்பகத்தில் வைப்பிட்டிருந்தனர்.

சிலர் பணத் தேவைகளுக்காகவும் சிலர் பாதுகாப்புத் தேவைகளுக்காகவும் அவ்வாறு வைப்பிட்டிருந்தனர். அதே போன்றுதான் ஏராளமான பொது மக்கள் தங்களின் பணத்தையும் விடுதலைப் புலிகளின் வைப்பகத்தில் வைப்பிட்டிருந்தனர் - அவ்வாறான நகைகளும் பணமுமே பின்னர் புலிகளுக்குச் சொந்தமானது என்னும் அடிப்படையில் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டன. எனவே, அவற்றை உரிய மக்களிடம் ஒப்படைக்க வேண்டும். இந்த விடயத்தை முன்வைத்து அரசியல் செய்வதை விடுத்து தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தற்போது அறிவித்திருப்பது போன்று விடயங்களை நேர்மையாக முன்னெடுக்க வேண்டும்.

உள்ளூராட்சித் தேர்தலுக்கு இன்னும் சில நாட்களே இருக்கின்ற நிலையில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இவ்வாறான அறிவிப்பை வெளியிட்டிருப்பது பொது மக்கள் மத்தியில் உற்று நோக்கப்படலாம். இந்த இடத்தில் எழும் கேள்வி இந்த நடவடிக்கையை ஏன் மைத்திரி அரசாங்கத்தால் முன்னெடுக்க முடியவில்லை? ஓர் அரசாங்கக் காலத்தில் முடியாமல் இருப்பது, எவ்வாறு இன்னோர் ஆட்சிக் காலத்தில் சாத்தியப்படுகிறது?

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் கைப்பற்றப்பட்ட தங்க நகைகளை வெளிப்படுத்தியது போன்று விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான ஏனைய சொத்துகள் தொடர்பிலும் முறையான விசாரணைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். அவைகள் யாரால் பதுக்கப்பட்டிருக்கின்றன என்னும் விவரங்களையும் வெளியிட வேண்டும்.

# பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவின் பஸ் சேவைகள் வெகுவாகப் பாதிப்பு!

## போதிய பஸ் சாரதிகள் இல்லாமையால்

வடமராட்சி, மே. 04

போதிய பஸ் சாரதிகள் இன்மையால் பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவினால் நடத்தப்படும் பஸ் சேவைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக பருத்தித்துறை - யாழ்ப்பாணம், பருத்தித்துறை - கொடிகாமம் ஆகிய பிரதான பாதைகளில் மாத்திரமன்றி நீண்ட தூர சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவில் பணியிலிருந்து விலகிச் சென்ற சாரதிகள் மற்றும் இடைநடுவில் விலகிச் சென்ற சாரதிகள் உள்ளிட்ட வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது இந்த டிப்போவில் 14 சாரதிகளுக்கான வெற்றிடங்கள் இருப்பதாகவும் இவ் வெற்றிடங்கள் நிரப்பப்படாமையினாலேயே பஸ் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## சப்ரகமுவ பல்கலை மாணவன் மரணம்: 16 மாணவர்களிடம் வாக்குமூலம் பதிவு!

கொழும்பு, மே 04

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தின் 2 ஆம் ஆண்டு மாணவரான சரித் தில்ஷானின் தற்கொலை தொடர்பாக வாக்குமூலங்களைப் பதிவு செய்வதற்காக, நேற்று முன் தினம் அதே பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 16 மாணவர்கள் சமனலவெவ பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டனர்.

ஆயினும் மாணவர் சரித்தை பகிடிவதை செய்ததாகக் கூறப்படும் மாணவர்கள் குழு இது அல்ல என்று கூறப்பட்டது.

பகிடிவதைக்கு ஆளான தாகக் கூறப்படும் சம்பவத்தைக் கண்ட மாணவர்கள் குழுவிடமிருந்தே வாக்குமூலங்கள் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கம்பளையைச் சேர்ந்த சரித் தில்ஷான் என்ற இந்த இளைஞர், கடந்த 29 ஆம் திகதி இரவு தனது வீட்டின் பின்புறம் தற்கொலை செய்து கொண்டார்.

இந்த சம்பவம் தொடர்பாக சப்ரகமுவ பல்கலைக் கழக மாணவர்கள் குழு ஒன்று சமனல வெவ பொலிஸில் முறைப்பாடு அளித்திருந்தது. சரித்தின் உறவினர்கள் புஸல்லாவை பொலிஸிலும் முறைப்பாடு அளித்திருந்தனர்.

பல்கலைக்கழக மாணவரின் தற்கொலைக்கு புதிய மாணவர் கொடுமைப்படுத்துதல் காரணமாக இருந்தால், சம்பந்தப்பட்ட மாணவர்கள் கைது செய்யப்பட்டு சட்டம் அமல்படுத்தப்படும் என்றும் சமனலவெவ பொலிஸார் கூறியுள்ளனர். (அ)

## டெங்கு, சிக்குன்குனியா நோயாளர் அதிகரிப்பு

கொழும்பு, மே. 04

மேல் மாகாணத்தில் டெங்கு மற்றும் சிக்குன் குனியா நோயாளிகளின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதாக, மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் தம்மிக ஜயலத் கூறினார்.

காய்ச்சல் இருந்தால் உடனடியாக வைத்தியரை பார்க்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த இரண்டு நோய்களும் ஒரே நுளம்பால் பரவுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

இதுவரை பதிவான மொத்த டெங்கு நோயாளிகளில் 50 வீதம் மேல் மாகாணத்திலிருந்தே பதிவாகியுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# தேசபந்துக்கு கொலை மிரட்டல் உரிய விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, மே. 05

இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட தொலைபேசி அழைப்பு தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுவதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

அத்துடன் தமக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதனால் உரிய பாதுகாப்பை வழங்குமாறு கோரி, பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவுக்கு, தேசபந்து தென்னக்கோன் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திட்டமிட்ட குற்ற செயல்களில் ஈடுபடும் போதைப் பொருள் வர்த்தகரான கஞ்சிபானை இம்ரானினால், தேசபந்து தென்னக்கோனை கொலை செய்யத் திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பு... ஓய்வு... உறக்கம் !

த. ஸ்டாலின் குணசேகரன்



தமிழகத்தின் ஈரோட்டில் ஒரு மாதத்துக்கு முன்பு ஒரு தொழிலாளி தான் பணியாற்றும் தொழிற்சாலையில் ஒன்பதரை மணிக்கு வேலையைத் தொடங்கினார். பின்னிரவு சுமார் இரண்டரை மணிக்கு தொழிற்சாலையில் வேலை செய்து கொண்டிருக்கும்போது எதிர்பாராதவிதமாக மரணமடைந்தார். இரவுப் பணியில் வேலை செய்த அனைத்துத் தொழிலாளர்களும் செய்வதறியாது பதறினர்.

அகால நேரத்திலும் நிர்வாகத்துக்குத் தகவல் கிடைக்கப் பெற்று தொழிற்சாலையின் நிர்வாகி ஒருவர் அங்கு வந்து சேர்ந்தார். அதற்குள் 108 ஆம்புலன்ஸ் சேவைக்கு தகவல் அளிக்கப்பட்டது. இறப்பை உறுதிசெய்த ஆம்புலன்ஸ் ஊழியர்கள், அந்தத் தொழிலாளி இறந்த பிறகு மருத்துவமனைக்கோ, அவரது வீட்டுக்கோ நாங்கள் எடுத்துச் செல்லக் கூடாது என்றும் அதற்கென்று உள்ள வாகனத்தில் ஏற்றிச் செல்லுமாறும் கூறிவிட்டுச் சென்றுவிட்டனர்.

அதற்குள் குடும்பத்தில் உள்ளவர்களுக்குத் தகவல் கிடைத்து, அலறியடித்துக் கொண்டு தொழிற்சாலைக்கு வந்தனர். தொழிற்சாலை நிர்வாகி வாகனத்தை வரவழைத்து தனது பொறுப்பில் சடலத்தை அந்தத் தொழிலாளியின் வீட்டுக்கு அனுப்பிவைத்தார்.

இரண்டு மூன்று நாள்கள் கழித்து, அந்தத் தொழிலாளியின் மரணத்தையொட்டிச் செய்ய வேண்டிய சடங்குகளுக்கு ஏதேனும் உதவி செய்ய நிர்வாகத்திடம் குடும்பத்தினர் முறையிட்டனர். தொழில் இருக்கும் மோசமான சூழலை நிர்வாகி காரணம் காட்டி, இறந்தவுடன் செலவு செய்து சடலத்தை வீட்டுக்கு அனுப்பியதை உதவியாக எடுத்துரைத்து எதுவும் அளிக்காமல் அவர்களை அனுப்பினார்.

பின்னர் தொழிற்சங்கம் இதில் தலையிட்டு தொழிலாளரின் குடும்பச் சூழல், வறுமை என்று இருக்கிற எல்லாக் காரணங்களையும் நிர்வாகத்திடம் எடுத்துரைத்து, நிர்க்கதியாக நிற்கும் தொழிலாளியின் குடும்பத்துக்கு ஒரு தொகையை நஷ்டஈடாக வழங்குமாறு கோரிக்கை வைத்தது.

அந்தத் தொழிலாளிக்கு வயது 54 மனைவி, இரண்டு மகள்கள் உள்ளனர். சட்டம், மனிதாபிமானம், நடைமுறைப் பழக்கம் , குடும்பத்தின் நிலை, நிர்வாகத்தின் கடமை , நீதிமன்றத் தீர்ப்பு என்று அனைத்து விளக்கங்களும் அழுத்தமாகவும் முறையாகவும் சங்கத்தின் சார்பில் எடுத்துரைக்கப்பட்டது.

தொழிலாளியின் மரணம் இயற்கையாக நிகழ்ந்ததுதானே! இயந்திரப் பழுதின் காரணமாகவோ அல்லது தொழில்சார்ந்த காரணங்களோ ஏதும் இல்லையே என்பது நிர்வாகத்தின் வாதம். வேலை செய்து கொண்டிருக்கும்போது ஏற்படும் மரணத்துக்கு நஷ்டஈடு உண்டு என்பது சட்டம். அது நிர்வாகத்தின் தவறா, தொழிலாளியின் தவறா என்ற கேள்விக்கு சட்டத்தில் இடமில்லை. இறந்து கிடந்த தொழிலாளியின் சடலத்தை வீட்டுக்கு எடுத்துச் செல்ல செலவிட்ட மிக சொற்பத் தொகையை அவர்கள் அவசரத்துக்குச் செய்த உதவியாகச் சித்தரிக்கின்றனர்.

உண்மை என்ன? அந்த அகால நேரத்தில் அந்த தொழிற்சாலையின் தொழிலாளர்களும் குடும்பத்தினரும் ரூ.1 லட்சம் அல்லது ரூ. 2 லட்சம் என்று கேட்டு, அவ்வாறு நஷ்டஈடு கொடுத்தால்தான் சடலத்தை அங்கிருந்து அப்புறப்படுத்த அனுமதிப்போம் என்று கூச்சல், குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தால் நிச்சயம் அந்தத் தொகையை நிர்பந்தம் காரணமாக ஓசையின்றி நிர்வாகம் கொடுத்திருக்கும்.

நிர்வாகம் சட்டத்தையும் மதிக்கவில்லை பொது நியாயத்தையும் ஏற்கவில்லை. மனிதாபிமானம் என்ற சொல்லுக்கே அங்கு வேலையில்லை.

எல்லா வகையிலும் வலிமையான பின்புலம் உள்ள நிர்வாகமா என்று கேட்டால் அதுவுமில்லை. சாதாரண நிர்வாகமே இப்படி கெடுபிடியாக நடந்துகொண்டால், அரசியல் பின்புலம், ஆள் பலம், குண்டர் பலம் என்று இருக்கிற நிர்வாகங்கள் எப்படியெல்லாம் ஈவிரக்கமின்றி நடந்துகொள்ளும் என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை. தொழிலாளர் சங்கம் உள்ள இடத்திலேயே இப்படியென்றால், சங்கமே இல்லாத இடத்தில் கற்பனைக்கு எட்டாத 'கயமை' தாண்டவமாடுகிறது.

மேலே குறிப்பிட்ட தகவல்கள் அனைத்தும் எவரிடமோ பெறப்பட்டதல்ல. இந்தக் கட்டுரையாளரே அந்தத் தொழிற்சங்கத்தின் தலைவர் என்ற வகையில் நேரடியாக அனுபவப்பட்டது. லட்சக்கணக்கில் நஷ்டஈடு கேட்டு நிர்வாகத்தை சங்கம் நிர்பந்திக்கவில்லை. மனிதாபிமான அடிப்படையில் ஒரு தொகையைக் கொடுத்து உதவுங்கள் என்றுதான் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இவ்வாறு ஒரு தொழிலாளி எதிர்பாராமல் பணியிடத்திலேயே மரணமடைகிறபோது, அதற்காக அனுதாப உணர்வுடன் நிர்வாகம் நடந்துகொள்வதும், மனிதாபிமானத்துடன் தொகை கொடுத்து உதவுவதும் அந்தத் தொழிற்சாலையில் பணிபுரியும் மற்ற தொழிலாளிகளுக்கு நிர்வாகத்தின் மீது நம்பிக்கையையும் - செய்யும் பணியின் மீது அதிக ஈடுபாட்டையும் ஏற்படுத்தும் என்ற நிர்வாக நன்மைக்கான காரணம்கூட சங்கம் சார்பாக எடுத்துச் சொல்லப்பட்டது.

தொழிலாளி காலை 9.30 மணிக்கு தனது பணியைத் தொடங்கினால் அடுத்த நாள் காலை 9:30 மணிக்குத்தான் வேலையை முடித்து வெளியே வரவேண்டும். அந்த 24 மணி நேரத்தில் உணவு, தேநீர் இடைவேளையாக மொத்தம் 2 மணி நேரம் கிடைக்கும். அப்படியானால் 22 மணி நேரம் தொடர்ச்சியாக இடைவெளியின்றி அங்கு பணியாற்றும் ஒவ்வொரு தொழிலாளியும் உழைக்கின்றனர். அவ்வாறு பணியாற்றும் தொழிலாளிக்கு அடுத்த நாள் விடுமுறை. இந்தத் தொழிலை

(14ம் பக்கம் பார்க்க)

## இந்தவார ராசிபலன் 04.05.2025 - 10.05.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாசவசு வருடம் - சித்திரை 21
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : அஷ்டமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

அஸ்வினி - இந்த வாரம் மகிழ்ச்சி மிக்க வாரம். விருந்துகளில் கலந்து கொண்டு நண்பர்களுடன் மகிழ்ச்சியாக பொழுதை கழிப்பீர்கள். நல்ல யோக பலன்களை எதிர்பார்க்கலாம். அரசியல்வாதிகளிடம் மற்றும் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த உதவிகள் அனைத்தும் தடையின்றி கிடைக்கும். கவர்ச்சிகரமான ஆடம்பரப் பொருட்களை பரிசாக அறிவித்து வியாபாரிகள் தங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தை அதிகரித்துக் கொள்வர்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் இன்பச் சுற்றுலா போன்ற, இனிய பயணங்களால் இன்பத்தில் திளைப்பார்கள். உழைப்பு அதிகமாகி அதற்கேற்ற ஆதாயம் இருக்காது.. எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். வீண் செலவுகளை குறைத்து சேமித்து வைப்பது நல்லது. வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிக்க கடினமாக உழைத்தால் மட்டுமே ஆதாயம் கிடைக்கும். அன்னையின் அன்பு அரவணைப்பு மற்றும் உத விகளும் ஆதரவாய் இருக்கும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். உயர்ரக ஆடை ஆபரணங்கள் மற்றும் விரும்பிய பொருட்களெல்லாம் வீடு வந்து சேரும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். கல்வியில் வெற்றி பெறக் கவனமாகப் படிக்க வேண்டும். உடன் பிறப்புக்களிடையே கருத்து வேறுபாடு ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் பலவழிகளிலும் வெற்றி மேல் வெற்றி வரும். செல்வ நிலையும் உயரும். கணவன், மனைவி இடையே அன்பும் பாசமும் பெருகும். புத்திர பாக்கியம் ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும். புத்தி சாதுர்யத்தால் வாழ்க்கையில் பொருளாதார நிலை சீராகும். குழந்தைகள் படிப்பு வகையில் செலவுகள் அதிகரிக்கும். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் கையில் பணமும் மனதில் மகிழ்ச்சியும் பொங்கி வழியும். எதையும் சாதிக்கும் திறன், நினைத்ததை நினைத்தபடியே முடிக்கும் முனைப்பும் உங்களுக்கு வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தைத் தரும். நல்ல நண்பர்கள் அமைவர். மதிப்பும் மரியாதையும் கூடும். பணியில் உள்ளவர்கள் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டால், பதவி உயர்வுகள் தேடி வரும். கடன் உதவிகள் கிடைக்க, தொழில் சிறக்கும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் மனதுக்கு மிகவும் பிடித்தமான பழைய உறவுகளின் வரவு இதயக் கோட்டையில், தென்றல் வீசும். மணமேடை ஏறும் மங்கல நாளும் வந்து, மனதில் மகிழ்ச்சி மலர்கள் பூக்கும். சிலர் வீட்டில் அள்ளி அணைத்திடவே பிள்ளை செல்வம், துள்ளி விளையாடும். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் இருந்து வந்த மந்த நிலைகள் மாறி வேகம் பிறக்கும். அதன் காரணமாக லாபமும் அதிகரிக்கும். வீண் அலைச்சல்கள் ஏற்படும். பணிபுரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலத்தால் உயர் பதவிகள் கிடைக்கும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புக்கள் ஏற்படும். வியாபாரத்தில் விரிவாக்கத் திட்டங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை தரும காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். நல்லோர் சேர்க்கையால் மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. தொலைதூர செய்திகள் இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் மகான்களின் ஆசியும், புதிய தொடர்புகள் நன்மைகளும் ஏற்படும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறும் காலம் கனிந்து வரும். அரசு பணியில் உள்ளவர்களுக்கு அதிகாரிகளின் அன்பு மற்றும் ஆதரவால் பணி உயர்வு நினைத்தபடி கிடைக்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் பல வழிகளிலும் இருந்தும் பணம் கூடுதலாக வரும். சுக சௌகரியங்கள் அதிகரிக்கும். சுபசெய்திகளால் மனம் மகிழும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் ஏற்படும். வதம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

விருந்துகளில் கலந்து கொண்டு நண்பர்களுடன் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் பொழுதை கழிப்பீர்கள். சிறப்பான பலன் களை எதிர்பார்க்கலாம் புத்திர பாக்கியம் ஏற்படும். தொழில் வாய்ப்பு கள் பிரகாசமாக இருக்கும். மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நில வும். வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக் கும். மனதில் தெய்வ பக்தி மேலிடும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்குப் புதுப்புதுப் பதவிகளும் அதனால் வருவாய் பெருக்கமும் ஏற்படும். அதிகாரிகளிடம் வாக்குவாதம் செய்தால் அபராதம் கட்ட நேரலாம்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். பக்திச் சொற்பொழிவுகளைக் கேட்பதில் ஆர்வமும், மகிழ்ச்சியும் ஏற்படும். பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். சுகமான சுற்றுலாப் பயணங்களின் மூலம் மனதில் மகிழ்ச்சி பொங்கும். வேலையில் சிரத் தையும், கடின உழைப்பு தொழிலில் நல்ல முன்னேற்றங்களைத் தரும். அப்போதுதான் உங் கள் பொருளாதார நிலையும் சீராகும். ஆடம்பரச் செலவுகளை குறைத்தால் பொருளா தாரச் சிக்கல்களில் இருந்து மீளலாம். செலுத்தினால் மட்டுமே அதிக மதிப்பெண்கள் பெற இயலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகளையும் அரசியல் சுதந்திரங்களையும் மதிக்கின்ற பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஒன்றைக் கொண்டு வருவது சாத்தியமா?



வீரகத்தி தனபாலசிங்கம்

கடந்த வருடத்தைய தேசிய தேர்தல் பிரசாரங்களில் வழங்கிய பெருவாரியான வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் தடுமாறும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மீது நாட்டு மக்களுக்கு அதிருப்தி ஏற்படத் தொடங்கியிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. குறிப்பாக, பொருளாதார இடர்பாடுகளை தணிப்பதற்கு புதிய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்கும் என்று எதிர்பார்த்த மக்களுக்கு பெரும் ஏமாற்றமாகப் போய்விட்டது.

மக்களின் அந்த உணர்வுகளை புரிந்து கொண்டவராக ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க கடந்த வாரம் கொழும்பு காலிமுகத்திடலில் தேசிய மக்கள் சக்தியின் மேதினப் பேரணியில் உரையாற்றியபோது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு காலஅவகாசம் தருமாறு நாட்டு மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார். இலங்கையில் இன்று ஒரேயொரு அரசியல் சக்தியாக விளங்குவது தேசிய மக்கள் சக்தி மாத்திரமே என்று கூறியிருக்கும் ஜனாதிபதி நாட்டினதும் மக்களினதும் எதிர்காலம் தேசிய மக்கள் சக்தியிலேயே தங்கியிருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் மீது வெறுப்பு வந்தாலும், மாற்றாக திரும்பிப் பார்ப்பதற்கு உருப்படியான ஒரு எதிர்க்கட்சி இன்று இலலை என்பது உண்மையே.

பொருளாதார முனையில் வாக்குறுதிகளை அரசாங்கத்தினால் நிறைவேற்ற முடியாமல் இருக்கின்ற சூழ்நிலையை ஓரளவுக்கு விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது என்ற போதிலும், அரசியல் சீர்திருத்தங்களை பொறுத்தவரையிலும் கூட உருப்படியான முன்னோக்கிய நகர்வை அரசாங்கம் செய்யவில்லை. குறிப்பாக, நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக நடைமுறையில் இருந்துவரும் கொடிய பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கும் விடயத்தில் அரசாங்கம் கடைப்பிடிக்கும் அணுகுமுறை கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகியிருக்கிறது.

தேசிய மக்கள் சக்தி மாத்திரமல்ல, உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்த 2009 ஆண்டுக்கு பிறகு பதவிக்கு வந்த சகல இலங்கை அரசாங்கங்களும் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதாக சர்வதேச சமூகத்துகசு உறுதியளித்தன. ஆனால், அந்த உறுதிமொழிகள் ஒருபோதும் காப்பாற்றப்படவில்லை. தொடர்ந்தும் அந்த சட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. இறுதியாக வாக்குறுதி அளித்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் அதை தற்போது பயன்படுத்துவதை காணக்கூடியதாக இருக்கிறது.

இலங்கைக்கு தற்போது விஜயம் செய்திருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வர்த்தகச் சலுகை கண்காணிப்புக் குழு பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதில் அரசாங்கம் காட்டிவரும் தாமதம் குறித்து விசனம் வெளியிட்டிருக்கிறது. பயங்கரவாதத்துக்கு எதிரான புதியதொரு சட்டம் கொண்டு வரப்படும் வரை பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதை இடைநிறுத்தும் சாத்தியம் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் விசாரித்தபோது அது பற்றி ஆராய்வதில் அரசாங்கம் பெரிதாக அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை.


2004 சுனாமி இயற்கை அனர்த்தத்துக்கு பிறகு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை வழங்கியது. ஆனால், மனித உரிமைமீறல்கள் தொடர்பில் வெளிக்காட்டப்பட்ட அக்கறைகளை தொடர்ந்து 2010 ஆம் ஆண்டில் இலங்கை அந்த சலுகையை இழக்க நேரிட்டது. நல்லாட்சி அரசாங்க காலத்தில் 2017 ஆம் ஆண்டில் மீண்டும் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை இலங்கையினால் பெறக்கூடியதாக இருந்த போதிலும், 2021 ஆம் ஆண்டில் ஐரோப்பிய பாராளுமன்றம் பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் இருப்பதையும் சட்டத்தின் ஆட்சி சீர்குலைவையும் சுட்டிக்காட்டி அந்த சலுகையை தொடர்ந்து இலங்கைக்கு வழங்குவதா இல்லையா என்று பரிசீலனை செய்யுமாறு ஐரோப்பிய ஒன்றியத்தை கேட்டுக் கொண்டது.


தற்போது இலங்கை அனுபவித்துவரும் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை தொடர்பிலான ஒழுங்கு விதிகள் அடுத்த வருட இறுதியில் காலாவதியாகின்றன. 2027 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைக்கு வரவிருக்கும் திருத்தியமைக்கப்பட்ட பிரமாணங்களின் கீழ் அந்த சலுகைகளை பெறுவதற்கு இலங்கை மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும் என்பதுடன் மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் நல்லாட்சி தொடர்பிலான 27 சர்வதேச சமவாயங்களை உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டிய நிபந்தனைக்கும் உள்ளாகும்.

தொடர்ந்தும் ஜி.எஸ்.பி பிளஸ் சலுகையை வழங்குவதுடன் தொடர்புடைய நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் இலங்கையில் முன்னேற்றம் இருக்கிறதா இல்லையா என்பதை ஆராய்ந்து நிலைவரம் பற்றிய ஒரு மதிப்பீட்டைச் செய்வதற்கே தற்போது ஐரோப்பிய ஒன்றியக் குழு இலங்கை வந்திருக்கிறது. தன்னைச் சந்தித்த அந்த குழுவிடம் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் ஊழலை ஒழித்து ஜனநாயக நிறுவனங்களை பலப்படுத்துவதற்கும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கும் அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளை விளக்கிக் கூறியதாகவும் இலங்கையின் முன்னேற்றத்தை அவர்கள் மெச்சியதுடன் சீர்திருத்தங்களுக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதாக உறுதியளித்ததாகவும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

அண்மைக் காலத்தில் பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்பட்ட சம்பவங்கள் குறித்து வெளியான விமர்சனங்களுக்கு ஏற்கெனவே பதிலளித்த வெளியுறவு அமைச்சர் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கவேணடும் என்பதில் தங்களது கட்சி உறுதியாக இருக்கின்ற போதிலும், சர்வதேச நியமங்களுக்கு ஏற்புடைய புதிய சட்டம் ஒன்று கொண்டு வரப்படும் வரை தற்போதைய சட்டத்தை அரசாங்கம் பயன்படுத்தும் என்று கூறியிருந்தார் என்பது கவனிக்கத்தக்கது.

பயங்கரவாதத்தைக் கையாளுவதற்கு கொடிய பயங்கரவாத தடைச்சட்டத்தை விடவும் வேறு பல சட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன என்று தாங்கள் நெடுகவும் கூறிவந்ததை ஜே.வி.பி. தலைவர்கள் மறந்துவிட்டார்கள் போன்று தோன்றுகிறது.




இலங்கை தமிழரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் கடந்தவாரம் 'தி இந்து' பத்திரிகையில் எழுதிய கட்டுரை ஒன்றில் பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பிலான ஜே.வி.பி.யின் இந்த முரண்பாடுகள் குறித்து தெளிவாகக் கூறியிருக்கிறார்.

"தேசிய மக்கள் சக்தி எதிரணியில் இருந்தபோது பயங்கரவாத தடைச்சட்டம் முற்று முழுதாக நீக்கப்பட வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது. இன்னொரு 'மனிதாபிமானச் சட்டத்தினால்' அதை பதிலீடு செய்வது குறித்து ஆராய்வதற்கான எந்தவொரு பேச்சுவார்த்தையிலும் இணைந்து கொள்வதற்கு தேசிய மக்கள் சக்தி உறுதியாக மறுத்தது.

"ஆனால், பயங்கரவாத தடைச்சட்டத்தைப் பதிலீடு செய்வதற்கு இன்னொரு சட்டத்தைக் கொண்டு - வருவது குறித்து இந்த அரசாங்கமும் இப்போது பேசத் தொடங்கியிருக்கிறது. தற்போதைய சட்டத்தை நீக்குவதற்கான சாத்தியம் குறித்து ஆராய்வதற்கு குழு ஒன்றை நியமித்ததை தவிர, எந்தவொரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையையும் அரசாங்கம் இன்னமும் முன்னெடுக்கவில்லை. தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கத்தினால் நிறைவேற்றக்கூடியதாக இருக்குமா இல்லையா என்பதை பார்ப்பதற்கு பயங்கரவாத தடைச்சட்ட நீக்கம் ஒரு சிறந்த பரீட்சையாகும்" என்று சுமந்திரன் அந்த கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழ்த் தீவிரவாத இயக்கங்களை ஒடுக்குவதற்காக ஆரம்பத்தில் பயங்கரவாத தடைச் சட்டம் கொண்டுவரப்பட்ட போதிலும், அதை சிங்களவர்களுக்கு எதிராக பயன்படுத்துவதற்கு அரசு தயங்கவில்லை என்றும் இரண்டாவது கிளர்ச்சிக்காலத்தில் (1987 - 1990) ஜே.வி.பி. அந்த சட்டத்தினால் படுமோசமாகப் பாதிக்கப்பட்டது என்ற காரணத்தால் அதை நீக்குவது குறித்து தேசிய மக்கள் சக்தி வழங்கிய வாக்குறுதியை பலரும் நம்பிக்கையுடன் நோக்கினார்கள் என்றும் சுமந்திரன் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

முன்னைய அரசாங்கங்கள் மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்காமல் போன அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது பயங்கரவாத தடைச் சட்டத்தை பதிலீடு செய்வதற்கு புதியதொரு சட்டத்தைக் கொண்டு வரும் முயற்சியில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எந்தளவுக்கு வெற்றி பெறக்கூடியதாக இருக்கும் என்பது குறித்து சந்தேகம் எழுகிறது. பயங்கரவாத தடைச் சட்டத்தை துஷ்பிரயோகம் செய்து பழக்கப்பட்டுவிட்ட பாதுகாப்பு துறையின் இணக்கப்பாட்டை பெறாமல் அரசாங்கத்தினால் இந்த விடயத்தில் முன்னோக்கிச் செல்ல முடியுமா என்பதும் முக்கியமான ஒரு கேள்வி.

சர்வதேச சமூகத்துக்கு குறிப்பாக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் வழங்கிய உறுதிமொழிகளை அடுத்து சர்வதேச நியமங்களுக்கு இசைவான முறையில் பயங்கரவாதத்துக்கு எதிரான புதிய சட்டம் ஒன்றை கொண்டுவரும் முயற்சியில் முதலில் ரணில் விக்கிரமசிங்கவை பிரதராகவும் பிறகு ஜனாதிபதியாகவும் கொண்ட இரு அரசாங்கங்கள் இறங்கின.

நல்லாட்சி அரசாங்கம் முன்வைத்த சட்டமூல வரைவு "**Counter Terrorism Bill**" என்றும் ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் அரசாங்கம் முன்வைத்த சட்டமூலம் "**Anti - Terrorism Bill**" என்றும் ஆங்கிலத்தில் அழைக்கப்பட்டன. ஆனால், இரு சட்டமூலங்களுமே தற்போது நடைமுறையில் இருக்கும் பயங்கரவாத தடைச்சட்டத்தை விடவும் மிகவும் கொடியவையாக இருந்தன என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை உட்பட சர்வதேச மற்றும் உள்நாட்டு மனித உரிமைகள் அமைப்புக்கள் அவற்றை நிராகரித்தன.

இலங்கையில் ' சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பிரிவினரால் ' மிகவும் மோசமாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டுவந்த ஒரு சட்டம் என்றால் அது பயங்கரவாத தடைச் சட்டமேயாகும். இலங்கையின் சகல சமூகங்களுமே அதனால் படுமோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அதிகாரத்தில் இருப்பவர்கள் தங்களுக்கு வருகின்ற அரசியல் எதிர்ப்புக்களை முறியடிப்பதற்கு வசதியான ஒரு கருவியாக அந்த சட்டம் இருந்து வந்திருப்பதால், முன்னைய ஆட்சியாளர்களை விடவும் வேறுபட்ட முறையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சிந்திக்கத் தலைப்படுமா என்ற இன்னொரு கேள்வியும் இருக்கிறது.

இலங்கையில் இன்று ஒரு கொலையோ அல்லது கொலை முயற்சியோ இடம்பெறாமல் ஒரு நாள் கூட கடந்துபோவதாக இல்லை. திட்டமிட்டு குற்றச்செயல்களில் ஈடுபடும் கும்பல்கள் சட்டத்தின் ஆட்சிக்கு பெரும் சவாலாக விளங்குகின்றன. அதேவேளை, சர்வதேச நிலைவரத்தை நோக்கும்போது எல்லை கடந்த பயங்கரவாதம் இன்று ஒரு நிரந்தர தோற்றப்பாடாக மாறிவிட்டது. அதனால், பயங்கரவாதத்துக்கு எதிரான கடுமையான சட்டம் ஒன்று அவசியம் என்ற வாதத்தை முற்றாக நிராகரித்து விடவும் முடியாது. ஆனால், மனித உரிமைகளையும் அரசியல் சுதந்திரங்களையும் மதிக்கின்ற ஒரு பயங்கரவாத சட்டத்தை வரைவது என்பது ஒரு பிரமாண்டமான சவாலாகும். அது உண்மையில் சாத்தியமா? அத்தகைய ஒரு சட்டத்துக்கு உதாரணம் எங்கே இருக்கிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கம் மீதான கடப்பாட்டை உறுதிசெய்வதற்கு அரசாங்கத்துக்கு வாய்ப்பு



கலாநிதி ஜெகான் பெரேரா

இரு உலகப்போர்களின் முடிவில் கட்டியெழுப்பப்பட்ட சர்வதேச முறைமை சட்டங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு சர்வதேச ஒழுங்கின் ஊடாக உலகளாவிய சமாதானத்தை பேணுவதற்கும் நீதியை மேம்படுத்துவதற்கும் உறுதிப்பாட்டை உத்தரவாதம் செய்வதற்குமான அபிலாசைகளுடன் வடிவமைக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சமவாயங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை போன்ற நிறுவனங்கள் இந்த முறைமையின் முதுகெலும்பாக அமைந்தன. மனித உரிமைகள் நியமங்களையும் சர்வதேச சட்டத்தையும் போற்றிப் பேணுவதற்கான முக்கியமான களங்களாக இந்த நிறுவனங்கள் செயற்படுகின்றன.

இந்த முறைமையில் பல குறைபாடுகள் இருப்பதற்கு மத்தியிலும், இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்கு பெரிய வல்லரசுகளின் அரசியலின் நெருக்குதல்களுக்கு எதிராக ஓரளவு பாதுகாப்பை வழங்குவதன் மூலமாக அது முக்கியமானதாக அமைகிறது. ஆனால், இந்த சர்வதேச ஒழுங்கு விமர்சனங்களுக்கு உள்ளாகாமல் இல்லை. குறிப்பாக, பலம்பொருந்திய மேற்குலக நாடுகள் குறிப்பிட்ட சில நாடுகளை குறிவைத்து சர்வதேச நியமங்களை பிரயோகிப்பதால் நாளடைவில் இந்த ஒழுங்கு பலவீனப்பட்டிருக்கிறது.

உக்ரைய்ன் போன்ற சில மோதல்களில் துரிதமாக நடவடிக்கைகளை எடுக்கின்ற அதேவேளை, பாலஸ்தீனம் போன்ற மோதல்களில் எந்த நடவடிக்கையையும் எடுக்காமல் இரட்டைத் தன்மையை கடைப்பிடிக்கின்ற நடைமுறை காரணமாக, குறிப்பாக மேற்குலக நாடுகள் அல்லாதவற்றின் மத்தியில் சர்வதேச ஒழுங்கு மீதான நம்பகத்தன்மையில் ஒரு இடைவெளி தோன்றியிருக்கிறது. இருந்தாலும், ஐக்கிய நாடுகள் முறைமையின் அடிநாதமாக அமைகின்ற நீதி, சமத்துவம் மற்றும் சமாதானம் போன்ற மைய இலட்சியங்கள் தொடர்ந்தும் பெறு மதியுடையவையாகவே இருந்து வருகின்றன. குறிப்பாக, தேசிய நல்லிணக்கத்தையும் நிலைபேறான அபிவிருத்தி யையும் வலுப்படுத்துவதில் நாட்டம் கொண்ட இலங்கை போன்ற நாடுகளுக்கு பயனுடையவையாக விளங்குகின்றன.

போரின் முடிவுக்கு பின்னரான காலப்பகுதியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையுடனான இலங்கையின் ஊடாட்டம், இறைமைக்கும் பொறுப்புக்கூறும் கடப்பாட்டுக்கும் இடையிலான பதற்றங்களை தெளிவாக வெளிக்காட்டுகிறது.

மூன்று தசாப்தகால உள்நாட்டுப்போர் 2009 ஆம் ஆண்டில் முடிவுக்கு வந்ததை தொடர்ந்து இலங்கை நிலைமாறுகால நீதி, மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறும் கடப்பாடு மற்றும் அரசியல் சீர்திருத்தங்களை வலியுறுத்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பல தீர்மானங்களுக்கு முகங்கொடுத்தது. 2015 ஆம் ஆண்டில் இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த 30-1 தீர்மானத்தின் கீழ் உண்மையை கண்டறிதல், இழப்பீடு வழங்குதல் மற்றும் நிறுவனச் சீர்திருத்தங்கள் தொடர்பில் விரிவான கட்டமைப்புக்களை நடைமுறைப்படுத்துவதாக கொழும்பு உறுதியளித்தது.

ஆனால், இந்த உறுதிமொழிகளின் நடைமுறைப்படுத்தல் மிகவும் மெதுவானதாகவும் ஒழுங்கற்றதாகவுமே இருந்து வந்திருக்கிறது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30-1 தீர்மானத்துக்கு வழங்கிய ஆதரவை இலங்கை 2019 ஆம் ஆண்டளவில், இறைமை மற்றும் வெளித்தலையீடு ஆகியவை தொடர்பிலான அக்கறைகளை காரணமாகக்காட்டி முறைப்படி வாபஸ் பெற்றது. இதன் விளைவாக இலங்கையிடம் மேலும் பல கோரிக்கைகளை கடுமையாக வலியுறுத்தும் தீர்மானங்களை கிரமமான இடைவெளிகளில் மனித உரிமைகள் பேரவை நிறைவேற்ற வேண்டிய நிலைமை உருவானது. சிறுபானமைச் சமூகத்துக்கு திருப்தி தரக்கூடிய வகையில் சர்வதேச கண்காணிப்பின் வீச்செல்லை விரிவடைந்த அதேவேளை, பெரும்பானமைச் சமூகத்தின் மத்தியில் எதிர்ப்பு அதிகரித்தது.

மிகவும் அண்மையாக 2022 ஆம் ஆண்டில் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 51-1 தீர்மானம் இந்த போக்கை பிரதிபலித்தது. இலங்கையின் உரிமை மீறல்கள் தொடர்பில் வெளிக் கண்காணிப்பு பொறிமுறை ஒன்று ஜெனீவாவில் அமைக்கப்பட்டது உட்பட பல்வேறு விதப்புரைகள் அடங்கியதாக அந்த தீர்மானம் அமைந்தது. இலங்கை இன்று மிகவும் நெருக்கடியான ஒரு தருணத்தில் இருக்கிறது. கடந்தகால உரிமை மீறல்களுடன் நேரடி ஈடுபாடு இல்லாத - சமத்துவம், சகல சமூகங்களையும் அரவணைக்கும் கோட்பாடுகளில் பற்றுறுதிகொண்ட ஒரு புதிய அரசாங்கம் இப்போது பதவியில் இருக்கிறது. அதனால், ஜெனீவாவில் தொடர்ச்சியாக தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்ற வட்டத்தில் இருந்தும் நாட்டின் நற்பெயரைப் பாதித்த எதிர்மறையான சர்வதேச கவனத்தில் இருந்தும் விடுபடுவதற்கு முன்னென்றும் இல்லாத வகையிலான வாய்ப்பு ஒன்று கிடைத்திருக்கிறது.

இன, மத அல்லது பிராந்திய வேறுபாடு இல்லாமல் சகல குடிமக்களையும் சமத்துவமாக நடத்துவதில் தனக்கு இருக்கும் பற்றுறுதியை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இடையறாது வலியுறுத்திவருகிறது. இந்த பற்றுறுதி தண்டிப்பதில் அல்ல நேர்மறையான மாற்றத்தை மேம்ப



**சிறுபான்மை அல்லது பெரும்பான்மை என்று எதுவுமில்லை என்றும் சகல குடிமக்களும் சமத்துவமானவர்களே என்றும் அரசாங்கம் கூறுகிறது. ஆனால், இதை பல பிரச்சினைகளை மூடிமறைக்கும் ஒரு கைங்கரியமாகவே சிறுபான்மைச் சமூகங்கள் நோக்குகின்றன.**

டுத்துவதில் நாட்டம் காட்டும் ஐக்கிய நாடுகள் முறைமையின் உணர்வுக்கு இசைவானதாக இருக்கிறது. அதனால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையை ஒரு எதிரியாக அன்றி நீதியையும் நல்லிணக்கத்தையும் நோக்கிய பொதுவான ஒரு பயணத்தில் பங்காளியாக அணுகுவது இலங்கையின் தேசிய நலன்களுக்கு நன்மை தருவதாக அமையும். தற்போதைய சர்வதேச முறைமையின் குறைபாடுகளைப் பற்றிய ஒரு விளக்கப்பாட்டுடனும் இந்த ஊடாட்டத்தை இலங்கை அணுகவேண்டும்.

மனித உரிமைகள் நியமங்களை பக்கச்சார்பான முறையில் - குறிப்பிட்ட நாடுகளை இலக்கு வைத்து நடைமுறைப்படுத்தும் மேற்குலகின் அணுகுமுறை அவநம்பிக்கையை வளர்த்திருக்கிறது. இரட்டைத்தன்மை பற்றிய இலங்கையின் நியாயபூர்வமான விசனம் ஏற்றுக் கொள்ளத்தக்கதேயாகும். குறிப்பாக, உக்ரைய்ன் மீதான ரஷ்ய ஆக்கிரமிப்புக்கு மேற்குலக நாடுகள் காட்டிய எதிர்வினையுடன் பாலஸ்தீன மக்களின் அவலங்கள் அல்லது லிபியா மற்றும் ஈராக்கில் இடம்பெற்ற தலையீடுகளுக்கு அவை காட்டிய எதிர்வினையை ஒப்படும்போது இந்த இரட்டைத்தன்மை தெளிவாக விளங்கும்.

ஆனால், மேற்குலகின் பாசாங்குத்தனத்தை சுட்டிக் காட்டுவதன் மூலம் இலங்கை அதன் சொந்த கடப்பாடுகளில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியாது. உண்மையில், இலங்கை எந்தளவுக்கு கூடுதலாக உள்நாட்டில் மனித உரிமைகளை பேணிப்பாதுகாப்பதில் நம்பகத்தன்மையுடனும் உறுதிப்பாட்டுடனும் செயற்படுகிறதோ, அந்தளவுக்கு நேர்மையானதும் ஒப்புரவானதுமான சர்வதேச ஒழுங்கை வலியுறுத்துவதில் அதன் தார்மீக நிலைப்பாடு வலிமையானதாக இருக்கும். நேர்மை வாய்ந்த ஒரு நிலையில் இருந்துகொண்டு ஐக்கிய நாடுகள் முறைமையுடன் ஊடாட்டங்களைச் செய்வது இலங்கையின் சர்வதேச கூட்டுப் பங்காண்மையை வலுப்படுத்தும் என்பதுடன் ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஜி.எஸ்.பி. பிளஸ் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார பயன்களை பாதுகாக்கவும் அவசியமாக தேவைப்படுகின்ற வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் சுற்றுலாத் துறையை மேம்படுத்தவும் உதவும்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வர்த்தகச் சலுகையை இலங்கை தொடர்ந்து அனுபவிக்க வேண்டுமானால் மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் நல்லாட்சிமுறை ஆகியவற்றுடன் தொடர்புடைய 27 சரவதேச சமவாயங்களை உறுதியாக கடைப்பிடிக்க வேண்டும் என்ற நிபந்தனை இருக்கிறது. ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்புக் குழு கொழும்புக்கு மேற்கொண்டிருக்கும் விஜயம் இந்த நியமங்கள் மீதான அதன் பற்றுறுதியை வெளிக்காட்டுவதற்கு இலங்கைக்கு கிடைக்கும் ஒரு முக்கியமான சந்தர்ப்பமாகும். மனித உரிமைமீறல்கள் தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் விசனம் காரணமாகவே 2010 ஆம் ஆண்டில் இலங்கை ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகையை இழந்தது என்பதை மனதில் இருத்தவேண்டியது அவசியமாகும்.

2017 ஆம் ஆண்டில் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை இலங்கைக்கு மீண்டும் கிடைத்தது என்ற போதிலும், 2021 ஆம் ஆண்டில் மீண்டும் சந்தேகங்கள் கிளப்பப்பட்டன. பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் இருப்பதையும் சட்டத்தின் ஆட்சி தொடர்பிலான பரவலான அக்கறையையும் காரணமாகக் காட்டி இலங்கைக்கான ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகையை மீள்பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும் என்று ஐரோப்பிய பாராளுமன்றம் அந்த ஆணடில் வலியுறுத்தியது.

சரவதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை மீதான பற்றுறுதியில் வெளிக்காட்டும் அதே அக்கறையை அரசாங்கம் ஜி.எஸ்.பி.பிளஸ் கடப்பாடுகள் தொடர்பிலும் காண்பிக்க வேண்டியது அவசியமாகும். ஆட்சியதிகாரத்துக்கு வந்தால் பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச் செய்வதாக தேர்தல்களுக்கு முன்னதாக தேசிய மக்கள் சக்தி உறுதியளித்தது. வனப் பகுதிகளுக்குள் எல்லைமீறிப் பிரவேசிப்பதை குற்றச்செயலாகக் கருதி அது தொடர்பில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நீதிமன்றங்களில் வழக்குகள் தொடுக்கப்பட்ட சம்பவங்கள் குறித்து கிழக்கில் இருந்து செய்திகள் வந்திருக்கிறது. சட்டமா அதிபரிடமிருந்து அறிவுறுதல்கள் கிடைப்பதற்கு காலதாமதமாவதால் இந்த வழக்குகள் பல வருடங்களாக நீடிப்பதாக கூறப்படுகிறது. ஆனால், இந்த கொடூரமான சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள்செலுத்திய விலை தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு பாரதூரமானதாகும்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டியது அல்லது அதில் கணிசமானளவுக்கு சீர்திருத்தங்களைச் செய்வது மனித உரிமைகள் நியமங்களுடன் இசைந்துபோவதற்கு மாத்திரமல்ல, இலங்கையின் நேர்மையை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு உறுதிப்படுத்துவதற்கும் அவசியமானதாகும். புதிய சட்டம் ஒன்றை தயாரிப்பதற்கு அரசாங்கம் குழுவொன்றை அமைத்திருக்கிறது.

வெறுமனே உறுதியளிப்பதை விடுத்து உருப்படியான நடவடிக்கைகளுடன் கூடிய சீர்திருத்தங்களுக்கான நம்பகத்தன்மையுடையதும் ஒளிவுமறைவு அற்றதுமான வீதிவரைபடம் ஒன்றை வருகைதரும் ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவுக்கு அரசாங்கம் சமர்ம்பிக்க வேண்டியது அவசியமாகும். இன்றைய தருணத்தில் நல்லெண்ணத்தை வெளிக்காட்டுவது ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை காப்பாற்றுவதற்கு மாத்திமல்ல, எதிர்கால வர்த்தக பேச்சுவார்த்தைகளிலும் இராஜதந்திர ஊடாட்டங்களிலும் இலங்கையின் கரங்களை வலுப்படுத்துவதற்கும் உதவும்.

நல்லாட்சி, பொருளாதார மீட்சி மற்றும் ஊழல் எதிர்ப்பு ஆகியவற்றுக்கு அண்மைக்காலமாக அரசாங்கம் கொடுக்கும் முக்கியத்தூவம் ஒரு நேர்மறையான அத்திபாரமாகும். ஆனால், பொருளாதார சீர்திருத்தம் மாத்திரம் போதுமானதல்ல என்பதை அனுபவம் காட்டுகிறது. அரசியல் சீர்திருத்தங்கள் குறிப்பாக, சிறுபான்மைச் சமூகங்களின் மனக்குறைகளையும் மனித உரிமைகளை பேணிப் பாதுகாப்பதையும் கையாளுவதற்கான நடவடிக்கைகள் தேசிய உறுதிப்பாட்டுக்கும் சுபிட்சத்துக்கும் அதேயளவு முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இவற்றை நடைமுறையில் அலட்சியம் செய்கின்ற போக்கு ஒன்றை அரசிடம் அண்மைக்காலமாக காணக்கூடியதாக இருக்கிறது. சிறுபான்மை அல்லது பெரும்பான்மை என்று எதுவுமில்லை என்றும் சகல குடிமக்களும் சமத்துவமானவர்களே என்றும் அரசாங்கம் கூறுகிறது. ஆனால், இதை பல பிரச்சினைகளை மூடிமறைக்கும் ஒரு கைங்கரியமாகவே சிறுபான்மைச் சமூகங்கள் நோக்குகின்றன.

உதாரணமாக, சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்தவர்களே பிரதானமாக கல்வி பயில்கின்ற கிழக்கு பல்கலைக்கழகத்தின் பேரவைக்கு பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையானவர்கள் நியமனம் செய்யப்பட்டிருப்பதையும் அரசின் உயர்மட்டக் குழுக்களில் சிறுபான்மைச் சமூகங்களின் பிரதிநிதித்துவம் இல்லாததையும் சுட்டிக்காட்டுகிறார்கள். இந்த பரிமாணங்களை அலட்சியம் செய்வது உள்நாட்டுப் பிளவுகளை மேலும் ஆழமாக்கும் ஆபத்தைக் கொண்டுள்ளது என்பதுடன் வெளியாரின் விமர்சனங்களுக்கு தீனி போடுவதாகவும் அமைகிறது.

அரசாங்கத்தின் அரசியல் துணிவாற்றல் பொருளாதார முகாமைத்துவத்துக்கு அப்பால் சென்று மெய்யான தேசிய நல்லிணக்கத்துக்கு விரிவுபடுத்தப்பட வேண்டும். ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகையைப் பெறுவதற்காக உரிமைகள் தொடர்பிலான அதன் நிபந்தனைகளையும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51-1 தீர்மானத்தின் விதப்புரைகளையும் நிறைவேற்றுவதை ஒரு சுமையாக நோக்குவதற்கு பதிலாக ஒரு பாதை வரைபடமாக கருதமுடியும்.

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பி. உட்பட சிங்களக் கட்சிகளை தமிழ் மண்ணில் அடையாளப்படுத்திவிட்டு எவ்வாறு தமிழ்க் கட்சிகளுடன் இணைவது?

பனங்காட்டான்

தமிழ்த் தேசியத்துக்கான இன்னொரு பரீட்சைக்களமாக நாளைய மறுநாள் மே மாதம் ஆறாம் திகதி அமையவுள்ளது. ஏழாண்டுகளுக்குப் பின்னர் இடம்பெறவுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் நாள் இது.

தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில் ஐந்து டசின் சபைகளுக்கு இத்தேர்தல் நடைபெறுகிறது. எனினும், யாழ்ப்பாணம் மாநகர சபையையும், குடாநாட்டிலுள்ள பிரதேச சபைகளையும் யார் கைப்பற்றுவது என்பது அரசியல் போட்டி என்பதைவிட தன்மானப் பிரச்சனை மேலோங்கியுள்ளது.

கடந்த வருட நாடாளுமன்றத் தேர்தலில் முதன்முறையாக பல தமிழர்களை தங்கள் கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்தது போன்று, நாளை மறுநாள் தேர்தலில் உள்ளூராட்சிச் சபைகளின் உறுப்பினர் பதவிகளையும் கைப்பற்ற வேண்டுமென்ற முனைப்புடன் அநுர குமரவின் தேசிய மக்கள் சக்தி பரப்புரைகளை மேற்கொண்டுள்ளது.

வழமையான தேர்தல்கால காற்றில் பறக்கும் உறுதிமொழிகளுடன் காணிகள் விடுவிப்பு, மக்கள் சந்திப்பு என வெவ்வேறு வகைகளில் வாக்கு வேட்டை இடம்பெறுகிறது. வண்டிலுக்குப் பின்னால் மாட்டைக் கட்டி ஓட்டுவது போன்று சில தமிழ் கட்சிகள் வேகம் காட்டுகின்றன. நாடாளுமன்றத் தேர்தலில் கோட்டை விட்டதுபோல இத்தேர்தலிலும் முடிவுகள் ஆகிவிடக்கூடாது என்ற அங்கலாய்ப்பு இவர்களிடம் காணப்படுகிறது.

இடையிடையே இனநலன் சார்ந்த ஒற்றுமைக் கோசம் இப்போது கேட்கிறது. ஆனால், இந்த ஒற்றுமை தேர்தலுக்கு முன்னரா அல்லது தேர்தலுக்குப் பின்னரா என்ற கேள்வி இதனோடு சேர்ந்து வருகிறது.

அநுர தரப்பை தோற்கடிக்க வேண்டுமெனில் தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்றுபட்டு தேர்தலைச் சந்திக்க வேண்டுமென்பது தவிர்க்க முடியாதது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால், நீயா நானா என்ற போட்டி மனப்பான்மை அனைத்தையும் தடுக்கிறது.


இலங்கையின் முதலாவது தமிழ் அரசியல் கட்சியான தமிழ்க் காங்கிரஸ் ஸ்தாபகர் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் பேரனான தற்போதைய காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஒற்றுமை முயற்சிக்கு முன்மொழிந்து வருகிறார். இதற்காக தமிழரசின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தின் வீடு தேடிச் சென்று பேச்சு நடத்தினார். இன்றைய நெருக்கடியான தமிழ் அரசியலில் இது ஒரு முன்மாதிரியான வரவேற்கப்பட வேண்டிய செயற்பாடு.

இந்த முயற்சியை ஒரு வகையில் வரவேற்ற சி.வி.கே.சிவஞானம் இதுபற்றி ஆராய தமது கட்சியில் ஒரு குழுவை நியமித்துள்ளதாக கஜேந்திரகுமாருக்கு தெரிவிக்கப்பட்டது. அடுத்த சில நாட்களில் தமிழரசின் பதில் செயலாளர் ப.சத்தியலிங்கம் மருத்துவ காரணங்களைக் கூறி இப்பதவியிலிருந்து விலகினார். (மருத்துவரான சத்தியலிங்கம் தமது எம்.பி. பதவியை மருத்துவ காரணங்களுக்காக ராஜினாமா செய்யவில்லை என்பதை இங்கு கவனிக்க வேண்டும்.) புதிய பதில் செயலாளராக சுமந்திரன் பதவியேற்றார். அடுத்த சில நாட்களில் சி.வி.கே.சிவஞானத்திடமிருந்து கஜேந்திரகுமாருக்கு ஒரு தகவல் சென்றது. ஒற்றுமை முயற்சி பற்றி பின்னர் யோசிக்கலாம் என்பது இந்தத் தகவல். அரசியல் நோக்கர்களின் பார்வையில் சுமந்திரனின் வழிநடத்தலில் சி.வி.கே.சிவஞானம் இவ்வாறு செயற்படுகிறார் என்பது முக்கிய தகவலாக கசிந்துள்ளது.

மறுதரப்பில், உள்ளூராட்சித் தேர்தலை சந்திக்கவென கஜேந்திரகுமார் தலைமையில் உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவைக்கு கணிசமான ஆதரவு அதிகரித்து வருவதை தமிழ் ஊடகங்கள் ஊடாக அவதானிக்க முடிகிறது. உத்தியோகப்பற்றற்ற சில கருத்துக் கணிப்புகளும் இதனை உறுதிப்படுத்துகிறது. எனினும், இத்தேர்தலை தமிழரசுக் கட்சியுடன் இணைந்து முன்னெடுப்பதில் அவர் உறுதியாகவுள்ளார்.

இது தொடர்பாக சில நாட்களுக்கு முன்னரும் இவரால் ஓர் அழைப்பு விடுக்கப்பட்டது. அதிலும் தமிழரசுக் கட்சியுடன் கொள்கை ரீதியாக இணைவதற்குத் தாம் தயாராக இருப்பதாக இவர் தெரிவித்துள்ளார். தமிழரசுக் கட்சிக்கு தாங்கள் எதிரானவர்கள் அல்ல எனவும், அதன் தலைமைத்துவம் தவறாக நடப்பதால் ஒட்டுமொத்தக் கட்சியும் தவறான பாதையில் கொண்டு செல்லும் நிலைமையே இங்கு காணப்படுகிறது எனவும் கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டியுள்ளார்.

**2018ல் யாழ்ப்பாணத்தில் ஜே.வி.பி. முதன்முதலாக நடத்திய மே தின ஊர்வலத்தின் முன்வரிசையில் செஞ்சட்டையுடன் சென்றவரும், 2024ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரை எதிர்த்துப் போட்டியிட்ட சிங்களவரான சஜித் பிரேமதாசக்கு வாக்குச் சேகரிக்கும் பிரதான முகவராக செயற்பட்டவருமான சுமந்திரன், உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசிய கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவதற்கு எவ்வாறு ஆதரவளிக்க முடியும்?**



தமிழரசுக் கட்சியை தோற்கடித்து முற்றுமுழுதாக ஓரங்கட்டும் செயற்பாடு அல்லவென்றும், அப்படிச் செய்ய முடியாது - செய்யவும் கூடாது எனவும் தெரிவித்திருக்கும் இவரது அறிக்கை ஊடாக தேசிய உணர்வு என்பது நன்கு பகிரப்பட்டுள்ளது. ஆனால், தமிழரசுக் கட்சியைப் பொறுத்தளவில் அது தமிழ்த் தேசிய கட்சிகளின் ஒற்றுமை என்ற விடயத்தில் நேர்கோட்டில் நிற்பதாகத் தெரியவில்லை.

இத்தேர்தலை ஒட்டி வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கம் காலத்தோடு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது. எமது மக்களுக்காக ஏதோவொரு வழியில் உழைத்த தமிழ்த் தேசிய பரப்பிலுள்ள கட்சிகளுக்கு வாக்களித்து அவர்களுக்கு கரம் கொடுக்க வேண்டுமென இதில் கேட்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி என்பது எமக்கான அதிகாரங்களைக் கொண்ட கட்டமைப்பு என்பதால் தமிழ்த் தேசியத்திலிருக்கும் ஒரு தரப்பினரே இதனை ஆளுகை செய்ய வேண்டுமென இவர்கள் வலியுறுத்தியுள்ளனர். இதனூடாக தமிழ்த் தேசியத்தின் வலிமை காண்பிக்கப்பட வேண்டுமென்பது இவர்களின் கோரிக்கையாக அமைந்துள்ளது.

இந்தக் கருத்து மிக முக்கியமாக இறுதி நேரத்திலாவது வாக்காளர்களால் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டியது. பொது எதிரியை அடையாளம் கண்டு, அந்த எதிரியை தமிழ் மண்ணில் காலூன்ற விடாது தடுக்க வேண்டுமெனில் தமிழ் வாக்குகள் தமிழ்த் தேசிய கட்சிகளுக்கே இடப்பட வேண்டுமென்பது காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தினரின் உரிமை சார்ந்த கோரிக்கை.

யார் என்னதான் சொன்னாலும் தமிழரசுக் கட்சிக்குள்ளிருக்கும் போட்டியையும் பிளவையும் எவராலும் தீர்க்க முடியாதுள்ளது. கட்சியின் தலைவராகத் தெரிவான சிறீதரனையும், இப்போட்டியில் தோல்வியடைந்த சுமந்திரனையும் தேர்தல் பரப்புரைக்காக ஒரே மேடையில் ஏற்றுவதற்கு சி.வி.கே.சிவஞானம் எடுத்த முயற்சி இதுவரை பயனளிக்கவில்லை. 2020ம் ஆண்டுத் தேர்தலில் படுதோல்வியடையவிருந்த சுமந்திரனை தமது ஆதரவாளர்களின் வாக்குகளால் காப்பாற்றிய சிறீதரனை கட்சியிலிருந்து நீக்கவும், அரசியலிலிருந்து துரத்தவும் முயற்சிக்கும் சுமந்திரனுடன் எவ்வாறு இணைந்து அவரால் செயற்பட முடியுமென கிளிநொச்சி மக்கள் கேட்கின்றனர்.

இந்த நெருக்கடிக்குள்ளும் தம்மையே கட்சியின் முக்கியஸ்தராகக் காட்டும் சுமந்திரன், அநுர குமர தரப்பினருக்கு சவால் விடும் அறிக்கைகளையும், உரைகளையும் மேற்கொண்டு வருகிறார். இது காலத்தின் தேவை என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், முள்ளவாய்க்கால் மௌனத்துக்குப் பின்னர், தென்னிலங்கைக் கட்சிகளையும் அதன் தலைவர்களையும் தமிழர் தாயகத்தில் அறிமுகப்படுத்துபவராகவும் - ஒருவகையில் அவர்களின் முகவராகவும் இருந்தவர் யார் என்ற கேள்வி வரும்போது அங்கு் சுமந்திரனே முன்னால் நிற்கிறார்.

2024 ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் அரியநேத்திரனை, அவர் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் என்றும் கருதாது ஓர் எதிரியாகப் பார்த்தது மட்டுமல்லாது, சிங்களக் கட்சியொன்றின் தலைவரான சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவாக தமிழ் வாக்குகளைப் பெற்று கொடுப்பதில் தலைமையாளராக இயங்கியவர் சுமந்திரன் என்பதை இலகுவாக மறந்துவிட முடியாது.

2018ம் ஆண்டு மே தின விழாவை முதன்முறையாக ஜே.வி.பி. யாழ்ப்பாணத்தில் நடத்தியது. இந்த மே தின பேரணியில் செங்கொடிகளை ஏந்தியவாறு செஞ்சட்டையுடன் ஜே.வி.பி.யினர் பல நூற்றுக்கணக்கில் பங்கேற்றனர். கடந்த வருடம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவற்றுக்கான அறிமுக நிகழ்வாக ஜே.வி.பி. அந்த மே தினத்தை யாழ்ப்பாணத்தில் நடத்தியது. இந்தப் பேரணியில் ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா மற்றும் அநுர குமர திஸ்ஸநாயக்க ஆகியோரோடு முன்வரிசையில் கைகோர்த்துச் சென்ற ஒரேயொரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மட்டுமே. தமிழரசுக் கட்சியின் முடிவுக்கு இணங்கவே தாம் ஜே.வி.பி. பேரணியில் பங்கேற்பதாக ஊடகச் செவ்வியொன்றில் இவர் தெரிவித்திருந்ததும் கவனத்துக்குரியது.

கடந்த காலங்களில் இனவாதமும், மதவாதமும் கொண்ட சிங்களக் கட்சிகளுடன் இணைந்து அவர்களை தமிழ் மண்ணில் காலுன்ற முக்கிய காரணியாக இருந்த சுமந்திரனும் அவரது தமிழரசுக் கட்சியும் எவ்வாறு தமிழ்த் தேசிய கட்சிகளோடு இணைந்து உள்ளூராட்சித் தேர்தலை சந்திக்க முடியும்? இதுதான் இன்றைய ஒற்றுமை முடியாமைக்கான காரணமெனில் அதில் நியாயமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய - மாநில உறவுகளை ஆராய்வதற்கான தமிழ்நாட்டின் முன்னைய முயற்சி எவ்வாறு நோக்கப்பட்டது?



ரி. இராமகிருஷ்ணன்

மத்திய - மாநில உறவுகள் தொடர்பான அரசியலமைப்பு ஏற்பாடுகள், சட்டங்கள் மற்றும் கொள்கைகள் குறித்து ஆராய்வதற்கும் மாநிலங்களின் சுயாட்சி மற்றும் சமஷ்டி முறையை வலுப்படுத்துவதற்கு தேவையான விதப்புரைகளை செய்வதற்கும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட முன்னேற்ற கழக அரசாங்கம் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்றை நியமிப்பதற்கு மேற்கொண்ட தீர்மானம் எதிர்பார்க்கப்பட்டதை போன்று பாரதிய ஜனதா கட்சியினதும் அதன் நேச அணியான தமிழ் மாநில காங்கிரஸ் (மூப்பனார்) கட்சியினதும் எதிர்ப்புக்கு உள்ளாகியிருக்கிறது.

முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி நீதியரசர் குரியன் யோசப் தலைமையிலான குழுவில் ஓய்வுபெற்ற இந்திய நிருவாக சேவை அதிகாரியும் இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உப வேந்தருமான கே. அஷோக் வர்தன் செட்டி, அரச திட்டமிடல் ஆணைக்குழுவின் முன்னாள் துணைத் தலைவர் எம். நாகநாதன் ஆகியோர் ஏனைய உறுப்பினர்களாவர். இந்த நியமனங்களை தமிழ்நாடு சட்டசபையில் முதலமைச்சர் ஸ்டாலின் கடந்த வாரம் அறிவித்தார்.

இதே விடயதானங்களை ஆராய்வதற்காக 50 வருடங்களுக்கும் அதிகமான காலத்துக்கு முன்னர் 1969 செப்டெம்பரில் தி.மு.க. அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ராஜமன்னார் குழுவின் விதப்புரைகள் 1971 மே மாதத்தில் வெளியிடப்பட்டன. அன்று பல்வேறு கட்சிகள் (அவற்றில் சில தற்போது தி.மு.க.வின் கூட்டணிக் கட்சிகள்) அந்த விதப்புரைகளை கடுமையாக விமர்சித்தன.

அவ்வாறு விமர்சனம் செய்த கட்சிகளில் இரு காங்கிரஸ் கட்சிகள் (பிரதமர் இந்திரா காந்தி தலைமையிலான காங்கிரஸ், மற்றையது மொரார்ஜி தேசாய், கே. காமராஜ் மற்றும் வேறு சில தலைவர்கள் தலைமையிலான காங்கிரஸ்), இரு கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் பாரதிய ஜனதா கட்சியின் முன்னோடியான பாரதிய ஜன சங் ஆகியவை அடங்கும்.


மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின முன்னாள் தலைமை நீதிபதி பி.வி. ராஜமன்னார் தலைமையிலான அந்த குழுவில் மெட்ராஸ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் ஏ. லக்சுமணசுவாமி முதலியார், இன்னொரு முன்னாள் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி பி.சந்திரா ரெட்டி ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர்.

மாநிலங்களுக்கான வருவாய் பரவலாக்கத் தளம் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று ராஜமன்னார் குழு விதந்துரைத்தது. பல்வேறு விடயதானங்கள் (உதாரணமாக, பங்குப்பரிவர்த்தனை, எதிர்காலச் சந்தைகள், எண்ணெய் வயல்களின் ஒழுங்கமைப்பு மற்றும் அபிவிருத்தி) மத்திய அரசின் பட்டியலில் இருந்து மாநிலங்களுக்கு மாற்றப்பட வேண்டும் என்று குழு விதந்துரைத்தது. பொதுப்பட்டியலில் இருந்தும் பல்வேறு விடயதானங்கள் மாநிலங்களுக்கு மாற்றப்பட வேண்டும் என்றும் அது கேட்டுக் கொண்டது.

தொழிறசங்கங்கள், கைத்தொழில் மற்றும் தொழில் தகராறுகள், உள்நாட்டு நீர்நிலைகளில் கப்பல் போக்குவரத்து, தொழிற்சாலைகள், மின்சாரம், செய்திப்பத்திரிகைகள், புத்தகங்கள் மற்றும் அச்சுச் செயன்முறைகள் ஆகியவை மாநிலங்களுக்கு மாற்றப்பட வேண்டியவை என்று ராஜமன்னார் குழு விதந்துரைத்த விடயதானங்களில் அடங்கும்.

பிரதமரை தலைவராகவும் சகல மாநிலங்களின் முதலமைச்சர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு மாநிலங்களுக்கு இடையிலான பேரவை ஒன்று (Inter - State Council) அமைக்கப்பட வேண்டும் என்பது ராஜமன்னார் குழு செய்த இன்னொரு முக்கியமான விதப்புரையாகும். அரசியலமைப்பின் பொதுப்பட்டியலில் உள்ள விடயதானங்களை மறுபங்கீடு செய்வதற்கு குழுவொன்று அமைக்கப்பட வேண்டும் என்றும் ராஜமன்னார் குழு கூறியது என்று 'தி இந்து' வின் ஆவணக் காப்பகத்தில் பெறக்கூடியதாக இருந்த ஆவணங்கள் முலம் அறியக்கூடியதாக இருக்கிறது.

மாநிலங்களுக்கு முற்றுமுழுதான சுயாட்சிக்கான கோரிக்கை நாட்டைப் பலவீனப்படுத்தும் என்று பாரதிய ஜனதாவின் தமிழ்நாடு மாநில தலைவராக புதிதாக தெரிவு செய்யப்பட்ட நைனார் நாகேந்திரன் தெரிவித்த விமர்சனத்தைப் போன்று பிரிவினைவாதப் போராட்டம் ஒன்றை தொடங்குவதற்கு முன்னோடியாகவே ராஜமன்னார் குழு அமைக்கப்பட்டதாக அந்த நேரத்தில் அச்சம் வெளியிடப்பட்டது. 1971 ஏப்ரிலில் ஆளுநர் உரை மீது சட்டசபையில் நடைபெற்ற நான்கு நாள் விவாதத்துக்கு பதிலளித்துப் பேசிய முதலமைச்சர் மு. கருணாநிதி மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் தேவை என்ற தனது அரசாங்கத்தின் கோரிக்கையை பிரிவினைக்கான ஒரு கோரிக்கையாக தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்று வலியுறுத்தினார்.



மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரங்களை மாற்றுவது சமஷ்டி கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் என்றும் அதிகாரங்கள் பன்முகப்படுத்தப்பட்டால் மத்திய அரசு மேலும் கூடுதலான அளவுக்கு செயல் திறனுடன் இயங்கக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் கூறினார். பிறகு ராஜமன்னார் குழுவின் அறிக்கை மத்திக்கு எதிரான எந்தவொரு போராட்டத்துக்கும் ஒரு முன்னோடி அல்ல என்று தெளிவுபடுத்திய முதலமைச்சர் கருணாநிதி அந்த அறிக்கை வெளியான மறுநாள் (1971 மே 28) வேலூரில் பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றியபோது தங்களது நோக்கம் மத்திய அரசுடன் எந்த வகையிலும் மோதலுக்கு செல்வது அல்ல, அபிவிருத்திச் செயற்திட்டங்களை துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படுவதை உறுதிசெய்வதே என்று விளக்கமளித்தார்.

### இந்திரா காந்தியின் பதில்

சென்னையில் ராஜமன்னார் குழுவின் அறிக்கை வெளியிடப்பட்ட தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் இந்திரா காந்தி, மத்திக்கும் மாநிலங்களுக்கும் இடையிலான உறவுகள் தொடர்பாக 1960 களின் பிற்பகுதியில் ஆராய்ந்த நிருவாக சீர்திருத்தங்கள் ஆணைக்குழு உறவு முறையை ஒழுங்கமைப்பதற்கும் தகராறுகளை தீர்த்து வைப்பதற்கும் அரசியலமைப்பில் தற்போது இருக்கும் ஏற்பாடுகளே போதுமானவை என்ற முடிவுக்கு வந்தது என்று குறிப்பிட்டார்.

### வாஜ்பாயின் நிலைப்பாடு

ராஜமன்னார் குழு அறிக்கையின் விதப்புரைகள் 'பிராந்தியவாதத்தை பயங்கரமான அளவுக்கு' ஊக்குவிக்கும் என்று பாரதிய ஜன சங்கின் தலைவரான அடல் பிஹாரி வாஜ்பாய் எச்சரிக்கை செய்தார். 1971 ஜூன் 3 ஆம் திகதி உதய்ப்பூரில் பாரதிய ஜன சங்கின் பொதுச்சபை கூட்டத்தொடரில் தலைமையுரை நிகழ்த்திய வாஜ்பாய், ராஜமன்னார் குழுவின் அறிக்கையை ஏற்றுக்கொள்வது ஒரு தேசம் என்ற வகையில் இந்தியாவின் முடிவின் தொடக்கமாக அமையும் என்று குறிப்பிட்டார்.

ஆனால், பலம்பொருந்திய மத்திய அரசு பலவீனமான மாநிலங்கள் என்று அர்த்தப்படாது. நிதித்துறை மற்றும் கைத்தொழில் அபிவிருத்தியில் மாநிலங்கள் எதிர்நோக்கும் மெய்யான சிக்கல்களுக்கு தீர்வைக் காண்பதற்காக அதிகாரப் பன்முகப்படுத்தலின் அவசியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதேவேளை, பன்முகப்படுத்தல் என்ற பெயரில் இந்தியாவைச் சீர்குலைப்பதற்கான எந்தவொரு முயற்சியும் முறியடிக்கப்பட வேண்டும் என்று வாஜ்பாய் கூறினார்.

### கம்யூனிஸ்ட் தலைவர் நம்பூதிரிபாத்

ராஜமன்னார் குழுவின் முக்கியமான விதப்புரைகள் 'சுயாட்சிக்கும் இந்தியாவின் ஐக்கியத்துக்கும் சமூக முன்னேற்றத்துக்கும் எதிரானவை' என்று 1972 ஜூலையில் சென்னையில் செய்தியாளர்களிடம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாத் கூறினார். மாநில சுயாட்சிக்கான அதன் கோரிக்கையில் தெளிவாக இல்லாதமைக்காக ஆளும் தி மு.க.வை கண்டனம் செய்த கேரளா மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சருமான முதுபெரும் கம்யூனிஸ்ட் தலைவர் 'மாநிலங்களுக்கு இடையிலான வேறுபாடுகளை தீர்த்துவைக்கும் பொறுப்பு மாநி லங்க ளுக்கு இடையிலான உத்தேச பேர வையிடம் விடப்பட வேண்டும் என்ற ராஜமன்னார் குழுவின் முக்கியமான ஒரு விதப்புரை மாநிலங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உதவப் போவதில்லை' என்று நினைத்தார்.

### காமராஜ் கருத்து

திருச்சியில் 1972 மே மாதத்தில் செய்தியாளர்கள் சந்திப்பொன்றில் கருத்து தெரிவித்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (சி.பி.ஐ.) பொதுச் செயலாளர் சி. ராஜேஸ்வரராவ், ராஜமன்னார் குழுவின் விதப்புரைகள் ஒருமைப்பாடு என்ற கோட்பாட்டை தொலை செய்துவிடும் என்று எச்சரிக்கை செய்தார். அடுத்த மாதம் சேலத்தில் பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய காமராஜ், சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் மாநில அரசாங்கத்தின் தோல்வியை மூடி மறைப்பதற்காகவே மாநில சுயாட்சி என்ற 'பூச்சாண்டி' கிளப்பப்படுகிறது என்று கூறினார்.

நல்வாழ்வு மற்றும் அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் இருக்கும் இயலாமைக்கு மாநில அரசாங்கம், மத்திய அரசாங்கம் போதுமான அதிகாரங்களை அல்லது பணத்தை தரவில்லை என்ற காரணத்தை அடிக்கடி கூறுகிறது, ஆனால், கூடுதல் அதிகாரங்கள் தேவை என்ற கோரிக்கையை முன்வைக்கும்போது மாநில அரசாங்கம் எந்தெந்த துறைகளில் கூடுதல் அதிகாரங்கள் தேவை என்பதையோ அல்லது எந்தெந்த திட்டங்களுக்கு நிதி அல்லது அதிகாரம் தேவை என்பதையே தெளிவாக முன்வைப்பதில்லை. வெறுமனே தெளிவற்ற முறையில் கூடுதல் அதிகாரங்களுக்கு மாநில அரசாங்கம் கோரிக்கை விடுக்கிறது என்றும் காமராஜ் கூறினார்.

ஆனால், தனது குழுவின் விதப்புரைகள் அரசியலமைப்பை சீர்குலைப்பதற்கான முயற்சியோ அல்லது புரட்சிகரமான மாற்றங்களை அறிமுகப்படுத்துவதற்கான முயற்சியோ அல்ல என்று ராஜமன்னார் திட்டவட்டமாக நிராகரித்தார். மாநிலங்களின் வளங்களை வலுப்படுத்துவதும் அரசியலமைப்பின் கட்டமைப்புக்குள் மாநிலங்கள் கூடுதல் அதிகாரங்களை பெற்றுக்கொள்வதற்கு வகைசெய்வதுமே தனது குழுவின் நோக்கம் என்று அவர் கூறினார்.

தற்போதைய அரசியலமைப்பின் கீழ் மாநிலங்கள் ஒரு குறிப்பிட்ட அளவு சுயாட்சியை அனுபவிக்கின்றன என்பதை ஏற்றுக்கொண்ட ராஜமன்னார் அந்த அளவு எவ்வளவு என்ற ஒரு கேள்வி இருக்கிறது என்றும் கூடுதலான வளங்களை மாநிலங்கள் பெறுவதற்கு வகை செய்வதற்காக கூடுதலான அதிகாரங்களைப் பெறுவதற்கான முயற்சி ஒன்று தனது குழுவினால் மேற் கொள்ளப்பட்டது என்றும் ராஜமன்னார் விளக்கமளித்தார்.

1971 மே மாதம் இந்த குழுவின் அறிக்கை வெளியிடப்பட்ட தினம் கருத்து தெரிவித்த அன்றைய பஞ்சாப் மாநில முதலமைச்சர் பிரகாஷ் சிங் பாதல் மாநிலங்களுக்கு கூடுதல் நிதி அதிகாரங்கள் தேவை என்ற கோரிக்கையை தான் ஆதரிப்பதாகக் கூறினார். அதற்கு பிறகு பத்தொன்பது வருடங்கள் கழித்து மத்தியில் அதிகாரத்தில் இருந்த தேசிய முன்னணி அரசாங்கம் (அதில் தி.மு.க.வும் அங்கம் வகித்தது) மாநிலங்களுக்கு இடையிலான பேரவை உருவாக்கப்பட வேண்டும் என்ற ராஜமன்னார் குழுவின் விதப்புரையை ஏற்றுக்கொண்டது.

மத்திக்கும் மாநிலங்களுக்கும் இடையிலான உறவுகள் குறித்து ஆராய்வதற்கு தற்போதைய தி மு க. அரசாங்கம் இன்னொரு குழுவை நியமித்திருக்கும் இன்றைய தருணத்தில் ராஜமன்னார் குழுவின் மீது கவனம் திரும்பியிருக்கிறது.

(தி இந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘வாக்குறுதிகளை நிறைவேற்றும் விடயத்தில் பயங்கரவாத தடைச்சட்ட ஒழிப்பு அரசாங்கத்துக்கு சிறந்த ஒரு பரீட்சை’



எம்.ஏ. சுமந்திரன்

குழப்பகரமான இலங்கையின் வரலாற்றில் பல வன்முறைச் சுழற்சிகளில் ‘பயங்கரம்’ என்பது இடையறாத பேசுபொருளாக இருந்து வருகிறது. திரும்பத் திரும்ப பெரும்பான்மையினவாத போக்கு ஒன்றை வெளிக்காட்டி வந்திருக்கும் அரசு தன்னால் குடிமக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்செயல்களை ஏற்றுக்கொண்டு ஒருபோதுமே சுயபரிசோதனையைச் செய்ததில்லை என்கிற அதேவேளை அது ‘பயங்கரம்’ என்று தான் கருதுகின்ற எதையும் ‘எதிர்ப்பதற்கு’ அல்லது ‘நசுக்குவதற்கு’ கொடூரமான வழிமுறைகளை பயன்படுத்துவதை பெரும்பாலும் நியாயப்படுத்தியே வந்திருக்கிறது.

இது விடயத்தில் இலங்கையில் தொடர்ச்சியாக கவனத்தைப் பெற்றிருக்கும் ஒரு சட்டம் என்றால் அது ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவின் ஆட்சிக் காலத்தில் 1979 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டமேயாகும். அந்த சட்டம் தென்னாபிரிக்காவில் வெள்ளையரின் இனஒதுக்கல் ஆட்சிக்காலத்தின் சட்டம் மற்றும் ஐரிஷ் தீவிரவாதத்துக்கு எதிரான பிரிட்டிஷ் சட்டங்களின் பாணியில் அமைந்ததுடன் 1978 ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தையும் அதேபோன்ற வேறு இயக்கங்களையும் தடைசெய்வதற்காக கொண்டுவரப்பட்ட இன்னொரு சட்டத்தை பதிலீடு செய்தது.

அதன் நோக்கம் தெளிவானது, இலங்கைத் தீவில் தனித்தமிழ் நாடு ஒன்றை உருவாக்குவதில் நாட்டம்கொண்ட தமீழீழ விடுதலை புலிகளையும் ஏனைய இயக்கங்களையும் ஒழிப்பதேயாகும். பயங்கரவாத தடைச்சட்டம் ஆரம்பத்தில் மூன்று வருட காலத்துகான ஒரு தற்காலிக ஏற்பாடாகவே கொண்டுவரப்பட்டது. பிறகு 1982 ஆம் ஆண்டில் இலங்கையின் சட்டப் புத்தகத்தில் நிரந்தரமானதாக பொறிக்கப்பட்டுவிட்டது.

**தண்டனையின்மையுடன் பிரயோகம்**


இந்த சட்டத்தில் நீதித்துறையின் மேற்பார்வையின்றி ஆட்களை நீண்டகாலத்துக்கு தடுப்புக்காவலில் வைப்பதற்கும் பொலிசாருக்கு அளிக்கின்ற ஒப்புதல் வாக்குமூலங்களை சாட்சியங்களாக ஏற்றுக்கொள்வதற்கும் பொலிசாருக்கு தகவல் கொடுக்கத் தவறுவதை ஒரு குற்றமாக்குவதற்கும் ஏற்பாடுகள் இருக்கின்றன. வெளிப்படையான தணடனையின்மையுடன் இந்த ஏற்பாடுகள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன என்பதை சொல்லித்தான் எவரும் தெரிந்துகொள்ள வேண்டுமென்று இல்லை.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழான வழக்கு ஒன்றில், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் பொய்யான அல்லது புனைந்து கட்டப்பட்ட சாட்சியங்களை சமர்ப்பித்திருப்பதாக நிரூபிக்கப்பட்டால் கூட அவர்கள் எந்தவிதமான விளைவுக்கும் முகங்கொடுக்கத் தேவையில்லாத அளவுக்கு இந்த தண்டனையின்மை இருக்கிறது. வழக்குகள் தோல்வியடைகின்றன. ஆனால், சாட்சியங்களை புனைந்துகட்டிய அல்லது அதையும் விட மோசமாக, சித்திரவதையைச் செய்து ஒப்புதல் வாக்கு மூலங்களைப் பெற்ற பொலிஸ் அதிகாரிகள் எந்தப் பிரச்னையும் இல்லாமல் சுதந்திரமாகத் திரிகிறார்கள்.

இந்த சட்டத்தின் இன்னொரு விளைவு ஓயாது தொல்லை தரும் ஒரு பாதுகாப்பு அனர்த்தமாகும். ‘பயங்கரவாத குற்றங்களை தீர்த்துக் கொள்வதற்கு’ சுலபமான வழியொன்றை பொலிஸ் அதிகாரிகள் கண்டபோது அவர்கள் உண்மையான குற்றவாளியை கண்டறிய விசாரணையை நடத்தவில்லை. அந்த குற்றச்செயலில் உண்மையில் சம்பந்தப்படாதவர்களிடம் இருந்து கூட ஒப்புதல் வாக்குமூலங்கள் பெறப்பட்டன. உண்மையான குற்றவாளி வெளியில் இருந்த அதேவேளை அவ்வாறு ஒப்புதல் வாக்குமூலங்களை கொடுத்தவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டார்கள்.

பொலிசாருக்கு ‘தகவல் கொடுக்கவில்லை’ என்பதற்காக பல அப்பாவிகள் மீது குற்றஞ்சாட்டப்பட்ட பல வழக்குகளை நாம் கண்டிருக்கிறோம். அவர்களிடம் இருந்து பலவந்தமாக பெறப்படும் ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றே போதும். அவர்களுக்கு தண்டனை வழங்கப்படும்.

உரிமைகளை பாதுகாப்பதற்காக போராடுகின்ற செயற்பாட்டாளர்கள் பல தசாப்தங்களாக பயங்கரவாத தடைச்சட்டத்தை கடுமையாக எதிர்த்துக் குரல் கொடுத்து வருகிறார்கள். நாட்டின் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் பாரதூரமான அச்சுறுத்தலாக அமையும் குற்றச் செயல்களை கையாளுவதற்கு சாதாரண சட்டத்தில் ஏற்பாடுகள் இருக்கின்றன என்பதை சட்டத்தரணிகள் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வந்திருக்கிறார்கள். பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பாகவும் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக சுதந்திரங்கள் மீதான அதன் தாக்கங்கள் தொடர்பாகவும் ஜனநாயகத்தை மதிக்கும் பல நாடுகள் விசனத்தை வெளிக்காட்டியிருக்கின்றன. உறுதியளித்ததன் பிரகாரம் பயங்கரவாத தடைச்சட்டத்தை இலங்கை இரத்துச் செய்யாததை காரணம் காட்டி ஐரோப்பிய ஒன்றியம் அதன் ஜி.எஸ.பி. பிளஸ் வரிச்சலுகையை 2010 ஆம் ஆண்டில் இடைநிறுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.




பொதுவாக உலகின் வேறு நாடுகளிலும் கொடூரமான சட்டங்கள் பயன்படுத்தப்படுவதில் ஒரு பொதுவான அம்சத்தை அவதானிக்க முடியும். இலங்கையின் பயங்கரவாத தடைச்சட்டமும் அரசாங்கத்தின் எதிரிகள், அதிருப்தியாளர்கள் மற்றும் சிறுபான்மை இனக்குழுக்களுக்கு எதிரான தெரிந்தெடுத்த முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பல மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களும் ஊடகவியலாளர்களும் இலக்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள். போரின்போது தமிழ் மக்களை அரசாங்கம் பட்டினிபோட்டதாக குற்றஞ்சாட்டி பிரபல்யமான பத்திரிகையாளரான ஜே.எஸ். திஸ்ஸநாயகம் பெரிதாக அறியப்படாத சஞ்சிகை ஒன்றில் கட்டுரை ஒன்றை எழுதியதற்காக அவருக்கு 2009 ஆம் ஆண்டில் 20 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (கடுமையான சர்வதேச நெருக்குதல்களை தொடர்ந்து அவர் மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலையானார்) திஸ்ஸநாயகத்தின் கட்டுரை இனங்களுக்கு இடையில் அமைதியின்மையை ஏற்படுத்தக்கூடியது என்பதே அவருக்கு எதிரான குற்றச்சாட்டாகும்.

**சிறிய திருத்தங்களுடன் தொடருகிறது**

கொழும்பில் அடுத்தடுத்து பதவியில் இருந்த அரசாங்கங்கள், குறைந்தபட்சம் 2009 ஆம் ஆண்டில் போர் முடிவுக்கு வந்த பின்னராவது, பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்வதாக உறுதியளித்தன. ஆனால், சில மேலோட்டமான திருத்தங்களுடன் அந்த சட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கிறது. பயங்கரவாத தடைச்சட்டத்தின் பயன்பாடு மீது இடைக்கால நிறுத்தம் ஒன்று அறிவிக்கப்பட்டது. ஆனால், ஒரு சில வாரங்களுக்குள்ளாகவே அதன் கீழ் கைதுகள் இடம்பெற்றன.

இலங்கை ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்கவின் ஆளும் தேசிய மக்கள் சக்தி அதன் தேர்தல் பிரசாரங்களின் போதும் அதிகாரத்துக்கு வந்த பின்னரும் பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச் செய்வதாக திரும்பத் திரும்ப உறுதியளித்தது. தேசிய மக்கள் சக்தியின் பிரதான அங்கத்துவக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) அதன் இரண்டாவது ஆயுதக்கிளர்ச்சிக் காலத்தில் (1987 -- 1990 ) பயங்கரவாத தடைச் சட்டத்தினால் பெருமளவுக்கு பாதிக்கப்பட்ட காரணத்தால், அந்த சட்டத்தை இரத்துச் செய்வது என்ற அதன் உறுதிமொழி பெரும்பாலும் நிறைவேற்றப்படும் என்று நம்பப்பட்டது. தமிழ்ப் போராளிகளை ஒடுக்குவதற்காக முதலில் அந்த சட்டம் கொண்டுவரப்பட்ட போதிலும், சிங்களவர்களுக்கு எதிராகவும் குறிப்பாக, ஜே.வி.பி. உறுப்பானர்களுக்கு எதிராக அதைப் பயன்படுத்துவதற்கு அரசு தயக்கம் காட்டவில்லை. மிகவும் அண்மைக்காலத்தில் 2019 ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்கு பிறகு முஸ்லிம்களை இலக்கு வைக்கவும் அது பயன்படுத்தப்பட்டது.

**இரத்துச் செய்யக் கோரும் இயக்கம்**

2021 ஆம் ஆண்டில் இந்த கட்டுரையாளர் பாராளுமன்றத்தில் உள்ள சகாக்களுடனும் உரிமைகள் செயற்பாட்டாளர்களுடனும் சேர்ந்து பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்யக்கோரி நாடு தழுவியதாக கையெழுத்து இயக்கம் ஒன்றை முன்னெடுத்தார். அந்த கோரிக்கைக்கு சகல இனத்துவ சமூகங்களிடம் இருந்தும் மக்களின் பேராதரவு கிடைத்தது பெரும் நம்பிக்கையை தந்தது. அந்த இயக்கத்தில் சகல மாவட்டங்களிலும் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களும் கூட ஆர்வத்துடன் பங்கேற்றனர். என்றாலும், அந்த சட்டத்தை இரத்துச் செய்கின்ற பொறுப்பு அதன் கைகளில் வந்து வீழ்ந்தபோது தேசிய மக்கள் சக்தியும் தயக்கம் காட்டுகின்றது போன்றே தெரிகிறது. பயங்கரவாத தடைச்சட்டத்தை நீண்டகாலமாக (துஷ்) பிரயோகம் செய்து பழக்கப்பட்டுவிட்ட பாதுகாப்பு துறை அதை கைவிடுவதற்கு விரும்பாமல் இருப்பது அதற்கு பெரும்பாலும் காரணமாக இருக்கலாம்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச் செய்வதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டதற்கு புறம்பாக, அது விடயத்தில் முக்கியமான எந்தவொரு நடவடிக்கையையும் அரசாங்கம் இன்னமும் எடுக்கவில்லை.

பயங்கரவாத தடைச்சட்டம் முற்று முழுதாக இரத்துச் செய்யப்பட வேண்டும் என்ற அடிப்படையில் அதை இன்னொரு ‘மனிதாபிமானம் வாய்ந்த சட்டத்தினால்’ பதிலீடு செய்வது தொடர்பான எந்தவொரு பேச்சுவார்த்தையிலும் பங்கேற்பதற்கு, எதிர்க்கட்சியில் இருந்த போது தேசிய மக்கள் சக்தி உறுதியாக மறுத்தது. ஆனால், இப்போது அதிகாரத்தில் இருந்துகொண்டு அது பயங்கரவாத தடைச்சட்டத்தை பதிலீடு செய்வதற்கு வரையப்பட வேண்டிய இன்னொரு சட்டம் குறித்து பேசுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

அந்த பதிலீட்டுக்காக அடுத்தடுத்து முன்னைய இரு அரசாங்கங்களினால் இரு வரைவுகள் முன்வைக்கப்பட்டன. ஆனால், அந்த இரு வரைவுகளும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களின் மிகவும் கடுமையான கண்டனங்களுக்கு உள்ளாகின. அந்த வரைவுகள் உண்மையில் பயங்கரவாத தடைச்சட்டத்தை விடவும் மோசமானவையாக இருந்ததாக அவர்கள் சுட்டிக்காட்டினர்.

எந்தவிதமான சந்தேகத்துக்கும் இடமின்றி இல்லாமல் செய்யப்பட வேண்டிய பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்வதாக வழங்கிய அதன் சொந்த வாக்குறுதி விடயத்தில் தேசிய மக்கள் சக்தி எவ்வாறு நகர்வுகளை முன்னெடுக்கிறது என்பதை நாம் அவதானித்துக் கொண்டிருக்கிறோம். தேர்தல் காலத்தில் மக்களுக்கு அள்ளிவீசிய வாக்குறுதிகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்துமா இல்லையா என்பதை பார்ப்பதற்கு பயங்கரவாத தடைச்சட்ட இரத்து விவகாரம் ஒரு சிறந்த பரீட்சையாக இருக்க முடியும்.

(தி இந்து,30, ஏப்ரல் 2025 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வியுக்தியார் பதில்கள்

**இரா. ஜெயருபன்,**
**பூந்தோட்டம், வவுனியா.**

**கேள்வி:** தமிழ் அரசுக் கட்சி தவறான கொள்கையைக் கைவிட்டு - அந்தக் கட்சியை நிறுவிய தந்தை செல்வநாயகத்தின் கொள்கையின்படி நேர்மையாக பயணிக்க முன்வந்தால் - நாம் நிச்சயமாக அவர்களுடன் பேச்சு நடத்தி பொது இணக்கப் பாட்டுக்கு வந்து இணைந்து பயணிப்போம் - என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளாரே. அது என்ன தவறான கொள்கை? அவர்களும் தந்தை செல்வாவின் சமஷ்டிதான் தமது கொள்கை என்றுதானே கூறிக்கொண்டிருக்கிறார்கள்.




**வியுக்தியார்:** அவர் விளக்கமாகத்தானே சொல்லியிருக்கிறார். அவர்களின் தவறான கொள்கைகளால்தான் தாங்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியதாகவும், தவறான தலைவர்களை எதிர்த்துத்தான் தாங்கள் 2010 தேர்தலில் திருகோணமலையிலும் யாழ்ப் பாணத்திலும் போட்டியிட்டதாகவும் கூறியிருக்கிறாரே. அவர் சொல்வதைத் பார்த்தால் சம்பந்தரை எதிர்த்து (அவர்கள் பார்வையில் தவறான தலைவர்?) திருகோணமலையில் போட்டியிட்டார்கள் சரி. யாழ்ப்பாணத்தில் யாரை எதிர்த்து போட்டியிட்டார்கள் என்றுதான் தெரியவில்லை. ஐந்து ஆண்டுகள் தமிழ் அரசு முழுமையாக செலவிட்டு தயாரித்த 'எக்க ராஜ்ய' தீர்வுத் திட்டத்தை நிராகரிக்கும் கஜேந்திரகுமார், அதனைத்தான் தவறான கொள்கை என்கிறாரோ தெரியவில்லை. ஆனால், அதனைத்தான் தமிழ் அரசும் ஏற்றுக்கொள்ளாது என்று புதிய பதில் தலைவர் சிவஞானம் ஐயா திட்டவட்டமாக சொல்லிவிட்டாரே. அது எல்லாம் இருக்கட்டும், கஜேந்திரகுமார் இன்றும் பொதுச் செயலாளராக இருக்கும் தமிழ் காங்கிரஸ் கட்சியின் கொள்கை தவறு என்றுதானே தந்தை செல்வா அந்தக் கட்சியிலிருந்து வெளியேறி தமிழ் அரசு கட்சியைத் தொடங்கினார். தந்தை செல்வாவின் கொள்கைப்படி நேர்மையாக பயணித்தால் இணைந்து பயணிப்போம் என்கிறாரே? அப்படியெனில், அவர் தனது கட்சியான காங்கிரஸின் கொள்கைகளை கைவிட்டுவிட்டாரா என்பதையும் அல்லவா சொல்லவேண்டும்.

---

**எம். அகிலேஸ்வரன்**
**சித்தன்கேணி.**

**கேள்வி:** வழங்கிய வாக்குறுதிக்கு மாறாக வடக்கில் காணிகளை சுவீகரிப்பதை உடனடியாக அரசாங்கம் நிறுத்த வேண்டும். காணி சுவீகரிக் கும் வர்த்தமானியை உடனடியாக மீளப்பெற வேண்டும் - என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளதுடன், தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்று ஜே. வி. பி. தலைவர் றோகண விஜயவீர கூறியுள்ளார் என்றும், 'நீங்கள் உண்மையான இடதுசாரிகள் என்றால் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்று சொல்லுங்கள். இல்லாவிட்டால் சிவப்பு சட்டை அணிவதில் அர்த்தமில்லை' எனவும் அவர் ஜே.வி.பியினரைப் பார்த்து கூறியிருக்கிறாரே.



**வியுக்தியார்:** அதே விஜயவீரதான் ஒரு நாட்டின் அதிகாரங்கள் ஓரிடத்தில் அதாவது மத்தியில் இருக்க வேண்டும் என்றும் கூறியிருக்கிறார். அவர் என்ன கூறினார், அப்போது எதற்காக கூறினார் என்பதெல்லாம் இருக்கட்டும், நாம் ஆட்சிக்கு கொண்டு வந்த மைத்திரி பால சிறிசேன ஆட்சியில் புதிய அரசியலமைப்பு சட்டத்தை தயாரிக்கும் பணியை அப்போதைய அரசு சுமந்திரனிடமும், மூத்த இடதுசாரித் தலைவர்களில் ஒருவரான கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ண இடமும் தான் கையளித்தது. அந்த இடதுசாரித் தலைவரும் கூட தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை இருக்கின்றது என்று சொல்லிக்கொண்டிருந்த தலைவர்தான். ஆனால், அந்த இருவரும் முன்னின்று தயாரித்த 'எக்க ராஜ்ய' தீர்வுப்பொதியை தமிழ் அரசு கட்சியே இப்போது நிராகரித்து விட்டது. சுயநிர்ணய உரிமையை மாத்திரமல்ல, சமஷ்டியையே அது கைவிட்டிருந்ததே. அதைவிடக் கொடுமை, வடக்கு கிழக்கு இணைப்பு பற்றியே எதுவும் சொல்லப்படவில்லை. தன்னை தயாரிக்கச்சொன்ன பொதியிலேயே இவற்றை வலியுறுத்த முடியாத ஒருவர், அவ்வாறு வலியுறுத்தினால் அதனை அமுல்படுத்த முடியாது என்பதால் அவர் தவிர்த்திருந்தால் கூட, இப்போது ஆட்சியிலிருப்பவர்களிடம் அவர் எப்படி இதனை எதிர்பார்க்கிறார் என்பதுதான் புரியவில்லை.

---

**எம். விஸ்வா**
**பார் வீதி, மட்டக்களப்பு**

**கேள்வி:** முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 4 தொலைபேசிகளில் 3 குறைக்கப் பட்டுள்ளன என்று தகவல்கள் வெளி யாகியுள்ளன. இதன்படி, ஒரு முன்னாள் ஜனாதிபதிக்கு தற்போது ஒரு தொலைபேசி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே ஊழியர்களின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதிகாரபூர்வ வாகனங்களின் எண்ணிக்கையும் இரண்டாகக் குறைக்கப்பட்டுள்ளதே. இது போன்ற சிறிய சிறிய சேமிப்புகளை செய்வதன்மூலம் இந்த அரசாங்கம் எதைச் சாதிக்கும் என்று நினைக்கின்றீர்கள்?

**வியுக்தியார்:** இந்த அரசியலமைப்பு சட்டத்தை தயாரித்தவர், முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியாக இருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்கள்தான். அப்போது அவர் இந்தப் பதவியிலிருந்து ஓய்வுபெறுகின்ற ஒருவர், இறக்கும்வரை ஜனாதிபதி என்றே அழைக்கப்பட வேண்டும் என்று கூட விரும்பியிருந்தார். ஒரு நீதியரசர் ஓய்வு பெற்ற பின்னரும் நீதியரசர் என்று அழைக்கப்படுவது போல. அவரது விருப்பம் நியாயமானதுதான். அந்த கதிரையில் அமர்ந்த ஒருவருக்கு அப்படியொரு கௌரவத்தையும் பெருமையையும் வழங்கவேண்டும் என்று அவர் விரும்பினார். விரும்பியது மாத்திரமல்ல, தான் ஓய்வுபெற்ற பின்னர் அதற்குரிய கௌரவத்துடன் எந்த அரசியல் நடவடிக்கையிலும் ஈடுபடாமல் வாழ்ந்து மறைந்தார். அப்போது அவருக்கு வழங்கப்பட்ட சலுகைகள் பற்றி யாரும் பேசியதில்லை. ஆனால், இப்போது அப்படியில்லையே. அந்தக் கதிரையிலிருந்து மக்கள் அவர்களை வெளியேற்றினாலும் அவர்கள் தொடர்ந்து எம்.பியாகவோ அதுவும் முடியாவிட்டால் கட்சித் தலைவராகவோ தொடர்ந்து அரசியல் செய்து கொண்டுதானே இருக்கிறார்கள். அவர்கள் இப்படி அரசியல் செய்வதற்கு எதற்காக மக்கள் பணத்தை அரசாங்கம் செலவிடவேண்டும் என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததுதான்.

---

**சபா. சிவநாதன்,**
**குரும்பசிட்டி, தெல்லிப்பழை.**

**கேள்வி:** உயர்தர பரீட்சை பெறுபேறுகளை சமூக வலைத்தளங்களில் பகிர்வதைத் தவிர்க்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க அறிவித்துள்ளார். சமூக வலைத்தளங்களில் பெறுபேறுகளை வெளியிடும் போது உரிய நபரின் சுட்டெண் வேறு நபர்களிடம் சென்றடைவதால் அதனைக் கொண்டு வேறு நபர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு சந்தர்ப்பங்கள் ஏற்படும் என்றும் அதனைக் கணனி முறைமையிலிருந்து அகற்றி உரிய நபர்கள் விண்ணப்பிப்பதற்கு மீள ஏற்பாடுகள் செய்வதற்கு நீண்ட நாட்கள் எடுக்கும் என்றும் அவர் எச்சரிக்கை செய்திருக்கிறாரே.



**வியுக்தியார்:** உண்மைதான். நானும் சமூக வலைத்தளங்களில் இதுபோன்ற பதிவுகளைப் பார்த்தபோது எதற்காக இவர்கள் இப்படி பதிவிடுகிறார்கள் என்று எண்ணியதுண்டு. சிலர் தமது அடையாள அட்டைகளைக் கூட அப்படியே பதிவிடுகின்றார்கள். ஒருவர் தனக்கு வேண்டிய ஒருவர் பரீட்சையில் சித்தியடைந்தால், அது அவருக்கு மகிழ்ச்சிக்குரியதுதான். அதனை நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வதில் தவறும் இருக்கருத... ஆனால் அதனை பகிர்கின்றபோது பெறுபேறு வெளிவந்த படிவத்தை அப்படியே பகிரவேண்டுமா? அவர் அதனை எழுத்திலேயே பகிரலாமே என்று நானும் நினைத்ததுண்டு. இதுபற்றி ஓர் ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராக பணியாற்றும் ஒருவரிடம் பேசியபோதும் அவருக்கு சொன்னேன். அதற்கு அவர் சொன்னதுதான், யோசிக்க வைத்தது. 'இவர்கள் பெறுபேற்றை அப்படியே போடாவிட்டால் தங்கள் நண்பர்கள் நம்பமாட்டார்கள் என்று நினைக்கிறார்கள் போலும்' என்றார் அவர். அட அவர்களுக்கே சந்தேகம் இருக்கின்றபோது மற்றவர்களுக்கு ஏற்படாதா என்ன?

---

**எஸ். செந்துஜன்,**
**ராசவீதி, கோப்பாய்.**

**கேள்வி:** 'பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு பதவிசார் கடமைகளை மேற்கொள்ளத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், பாதாள உலகக் குழு தலைவர் கஞ்சிபான இம்ரானிடமிருந்து அவருக்கு அச்சுறுத்தல் உள்ளதாகக் கூறப்படுகிறது. இவ்வாறான சூழலில் தனது பாதுகாப்பு முற்றிலுமாக நீக்கப்பட்டுள்ளது என்றும், தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதால், தகுந்த பாதுகாப்பு வழங்குமாறும் தேசபந்து தென்னக்கோன் கோரிக்கை விடுத்துள்ளாராமே?.



**வியுக்தியார்:**
இவ்வாறு அவருக்கு மட்டுமல்ல பலருக்கும் அச்சுறுத்தல்கள் இருப்பதாகத்தான் கூறப்படுகின்றது. நாட்டில் தினமும் நடக்கின்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களைப் பார்க்கின்றபோது அச்சுறுத்தல் இருப்பவர்கள் பாதுகாப்பு கோருவதும் நியாயமானதுதான். ஆனால் அண்மையில் இதுபற்றி கருத்துத் தெரிவித்திருந்த முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய, பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் இருப்பவர்கள் உடனடியாக நாட்டைவிட்டு வெளியேறுங்கள் அல்லது வீடுகளைவிட்டு வெளியே வராதீர்கள் என்று ஆலோசனை வழங்கியிருந்ததுதான் ஞாபகத்துக்கு வருகின்றது. தென்னக்கோனைப் பொறுத்தவரை அவரால் வெளிநாடு போகமுடியாது. அவர் நீதிமன்ற பிணையில் இருப்பவர். அவர் வீட்டிலேயே இருக்கவும் முடியாது, நீதிமன்றத்திற்கு போகின்றபோதும், அதிகம் ஏன் நீதிமன்றத்திற்குள் வைத்தும் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவங்கள் நடந்திருக்கின்றன. எனவே அவரது பாதுகாப்பு கோரிக்கை நியாயமானதாகவும் இருக்கலாம் அல்லவா?

---

**எம். அசோக்குமார்**
**சுவாமியார் வீதி, சுண்டிக்குழி.**

**கேள்வி:** 'வடக்கில் ஏழு பாராளுமன்ற உறுப்பினர்கள் தேசிய மக்கள் சக்திக்கு கிடைப்பதற்கு தமிழ் அரசுக் கட்சியே காரணம் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குற்றஞ்சாட்டியுள்ளாரே. இன்று வட மாகாணத்தில் 7 பாராளுமன்ற உறுப்பினர்கள் தேசிய மக்கள் சக்தியில் வருவதற்கு காரணம் தமிழ் அரசுக் கட்சியே ஆகும். அவர்களின் செயல்பாடுகள்தான் இன்று ஏழு பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டு வந்துள்ளது என்று அவர் சொல்வது சரியானது என்று நீங்களும் நினைக்கின்றீர்களா?



**வியுக்தியார்:** சிவசக்தி ஆனந்தன் நீண்டகாலம் அரசியலில் இருப்பவர். பாராளுமன்றத்திலும் உறுப்பினராக இருந்தவர். அவருக்கு தெரியாததல்ல. தமிழ் அரசு கட்சியின் செயல்பாடுகளால்தான் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தார்கள் என்றால், அது சரியானதாக இருக்கமுடியாது. அவர் சொல்வதுபோல தமிழ் அரசு கட்சியின் செய்பாடுகளால் மக்கள் விரத்தியடைந்தது உண்மைதான். அதனால்தான் அவர்கள் அந்தக் கட்சிக்கு வாக்களிக்கவில்லை. ஆனால், அவர்களின் செயல்பாடுகளினால் ஏற்பட்ட விரக்தியில்தான் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தார்கள் என்றால், அவரே இன்னுமொரு விடயத்தை ஏற்றுக்கொள்கின்றார் என்றாகிறதே. தமிழ் அரசுக்கு வாக்களிக்காதவர்கள் ஏன் ஒரு தேசிய கட்சிக்கு வாக்களிக்கவேண்டும், அவரது தமிழ் தேசியக் கட்சியான ஜனநாயக் தமிழ் தேசியக் கூட்டணிக்கே வாக்களித்திருக்கலாமே?. இதுபோன்ற கருத்துகள் தமது குறைபாடுகளை மூடிமறைக்க மற்றவர் குறைகளைச் சொல்வது போன்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலிய தேர்தலில் டிரம்ப் எதிர்ப்பலை!

# ட்ரம்புக்கு பதிலடி கொடுத்த கனடா!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

உலகளாவிய ரீதியில் டொனால்ட் ட்ரம்ப் அரசின் வர்த்தக வரிச் சுமைகளால் பாதிப்புக்குள்ளான நாடுகளில் தற்போது தேர்தல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. குறிப்பாக கனடாவில் நடந்த தேர்தல் முடிவுகள் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்பின் அடாவடித்தனத்துக்கு எதிரான பலத்த அடியாக கணிப்பிடப்படுகிறது.

இவ்வாரம் அவுஸ்திரேலியாவில் மே 3 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெற உள்ளது. பிரதமர் அந்தோணி அல்பானீஸ் தேர்தலை அறிவித்த பின்னர் கடந்த ஐந்து வாரங்களாக தீவிர பிரசாரம் நடைபெற்று வருகிறது.

இந்த இரு நாட்டு தேர்தல்களில் ஆளும் கட்சிகளுக்கான ஆதரவே அதிகரித்து வந்துள்ளது. நடந்து முடிந்த கனடாத் தேர்தலும், நடக்கப் போகும் அவுஸ்திரேலிய தேர்தலும் ட்ரம்ப் அரசின் வரிச்சுமை காரணமாக பாதிக்கப்பட்ட நாடுகளின் எதிர்ப்புக் குரலாகவே கருத இடமுண்டு.

2022ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தொழிலாளர் கட்சி அவுஸ்திரேலியாவில் பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைத்தது. தற்போதைய நிலவரப்படி அந்தக் கட்சியின் செல்வாக்கு சிலகாலம் சரிந்திருந்தாலும், மீண்டும் முன்னிலையில் உள்ளது.

கோவிட் தொற்றுக் காலத்தின் பின்னர் அவுஸ்திரேலியாவில் வாழ்க்கைச் செலவு அழுத்தங்கள், அதிக பணவீக்கம் மற்றும் அதிக வட்டி விகிதங்கள் மற்றும் வீட்டுவசதி மற்றும் வாடகை போன்ற காரணங்களில் மக்கள் விரக்தியடைந்துள்ள சூழலில் இந்த பொதுத் தேர்தல் நடைபெறுகிறது.


இரண்டாவது தடவையாக மூன்று ஆண்டு பதவிக் காலத்தை எதிர்பார்க்கும் அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானீஸ் தொழிலாளர் கட்சி, தற்போது பிரதிநிதிகள் சபையில் உள்ள 151 இடங்களில் 77 இடங்களைக் கொண்டுள்ளது.

அதேவேளை பெரும்பான்மையான வாக்காளர்கள் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் பீட்டர் டட்டன் மீது சந்தேகம் கொண்டிருப்பதாக கருத்துக் கணிப்புகள் காட்டுகின்றன.

எதிர்கட்சியான லிபரல் கட்சியின் தலைவர் பீட்டர் டட்டனின் சில திட்டங்கள், அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நிர்வாகத்தில் இடம்பெற்றிருக்கும் எலான் மாஸ்க்கின் அரசாங்க திறன் துறையின் செயல்பாடுகளோடு ஒத்துப் போவது போன்று இருப்பதாக மக்களிடையே எதிர்ப்பு கிளம்பியது. இதனால் இத் தேர்தலில் அவருக்கான ஆதரவு குறைந்துள்ளது என்று கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

அதாவது, அரசு ஊழியர்கள் முழு நேர வேலைக்கு அலுவலகத்திற்கு திரும்ப வேண்டும். பொதுத்துறை ஊழியர்கள் 10 ஆயிரம் பேர் வேலையிழக்கும் திட்டம் ஆகியவை கடும் விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்பட்டதால், அதனை டட்டன் கைவிடும் நிலைக்கு தள்ளப்பட்டார்.

கடந்த ஜனவரியில் டட்டனின் லிபரல் கட்சி கூட்



டணி ஆறு வீதம் முன்னிலையில் இருந்தது. தற்போது ஏப்ரல் மாத தொடக்கத்தில் பிரதமரின் ஆளும் கட்சி ஒன்பது வீதம் அதிகரித்து கருத்துக்கணிப்பில் முன்னிலை பெற்றுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் அவுஸ்திரேலிய தேர்தல் முடிவுகள் பெரும்பாலும் ஆளும் தொழிட்கட்சிக்கே சாதகமாக அமையும் என கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

ஆயினும் இத்தேர்தலில் எதிர்க்கட்சியும் கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்டாலும் இறுதிக்கட்ட நாட்களில் பெரும் போட்டி நிலவும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ட்ரம்ப் அரசின் அடாவடித்தனமான வர்த்தக வரிச் சுமைகளை எதிர்த்து போராட எதிர்க்கட்சிகள் முன்வர வேண்டுமெனவும் பொது மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

கனடா தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு பிரதமர் மார்க் கார்னி, கனடா மக்களுக்கு நன்றி தெரிவித்தோடு, அமெரிக்காவையும் கடுமையாக சாடியுள்ளார். கனடாவை சொந்தமாக்கும் நோக்கத்துடன் நம்மை உடைக்க ட்ரம்ப் முயற்சிக்கிறார். அது ஒருபோதும் நடக்காது என்று காரசாரமாக பேசியுள்ளார்.

கனடா நாடாளுமன்ற தேர்தல் நடந்து உடனடியாக வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது. பிரதமருக்கான போட்டியில் லிப்ரல் கட்சியைச் சேர்ந்த மார்க் கார்னி, கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த பியர் பொய்லிவ்ரே ஆகியோர் இடையே கடும் போட்டி நிலவியது. ஆனால் துவக்கம் முதலே மார்க் கார்னி கட்சி முன்னிலை வகித்தது.

கனடாவில் ஆட்சியைப் பிடிக்க மொத்தமுள்ள 343 இடங்களில் 172 இடங்களைப் பெற வேண்டும். ஆனால் ஆளும் லிபரல் கட்சி 169 இடங்களில் முன்னணியில் இருக்கும் நிலையில், கன்சர்வேடிவ் கட்சியினர் 144 இடங்களில் வென்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

கடும் போட்டிக்கு இடையே, தோல்வியை கன்சர்வேட்டிவ் கட்சி ஒப்புக்கொண்டுள்ளது. இதன்படி கனடா பிரதமராக மார்க் கார்னி மீண்டும் பதவியேற்பது உறுதியாகியுள்ளது. கனடா பிரதமர் தனது வெற்றியை அடுத்து நிகழ்த்திய உரையில், கனடாவிற்கு சவாலான நாட்கள் காத்திருப்பதாக கூறினார்.

நாம் சில தியாகங்களை செய்ய வேண்டியிருக்கும். அதேவேளையில், நமது தொழிலாளர்கள் மற்றும் வணிகங்களை ஆதரிப்பதன் மூலம் இந்த தியாகங்களை நம் பகிர்ந்து கொள்வோம். அமெரிக்கா செய்த துரோகத்தின் பாடங்களை ஒருபோதும் கனடா மறக்க கூடாது. இந்த வர்த்தக போரில் நாம் வெற்றி பெறுவோம் என்றும் தெரிவித்தார்.

இதே வேளை டிரம்பிற்கு எதிராக உலகமெங்கும் பல்வேறு காலகட்டங்களில் பல நாடுகளில் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. வாசிங்டனில் அதிபராக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற நாளில் இருந்து அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளிலும் அவருக்கு எதிராக பல்வேறு கண்டன போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

ட்ரம்ப் அரசு புலம் பெயர்ந்தோரை கையாள மிகப்பெரிய நாடு கடத்தல் திட்டத்தை தொடங்கியது. இது அமெரிக்காவில் மட்டுமன்றி, உலகின் பல்வேறு நாடுகளிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ட்ரம்பின் நிலைப்பாட்டை எதிர்த்து ஐரோப்பிய நாடுகளிலும் மக்கள் பதாகைகளுடன் பேரணி நடத்தினர். ட்ரம்பின் குடியேற்ற கொள்கைகளை எதிர்த்து பாரி சில் பதாகைகளுடன் பேரணி நடத்தினர்.

அத்துடன் பாரிஸ் காலநிலை ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறும் உத்தரவில் ட்ரம்ப் கையெழுத்திட்டதற்கு இங்கிலாந்து தலைநகர் லண்டனில் ஏராளமானோர் போராட்டத்தில் ஈடுபட்டனர். குடியேற்று வாசிகள், பிறப்புரிமை, குடியுரிமை போன்றவற்றின் டிரம்பின் கொள்கைகளுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்.

மெக்சிகோவில் டொனால்ட் ட்ரம்பின் குடியேற்ற நடவடிக்கைக்கு எதிராக எல்லை வெளியில் பாரிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதன் போது மெக்சிகோ வளைகுடாவின் பெயரை அமெரிக்க வளைகுடா என்று மாற்றியதற்கு அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

# ட்ரம்பின் வர்த்தகத் தடைகளை உடைத்து சாமர்த்தியமாக முன்னேறும் சீன வணிகர்கள்

'அமெரிக்காவுக்கான விற்பனைகள் குறித்து நாங்கள் கவலைப்படுவதில்லை' என்கிறார் ஹூடியான்கியாங். அவருடைய ஃபைட்டர் ஜெட் பொம்மை ஒன்று, எங்கள் தலைக்கு மேலே பறந்து கொண்டிருந்த போது அவர் இதைத் தெரிவித்தார்.

பொம்மை விமானங்கள், சிறிய ட்ரோன்கள் என, வாங்குபவர்களை ஈர்க்கும் வகையில், அவரைச் சுற்றியுள்ள பொம்மைகளின் இரைச்சலுக்கு நடுவே அவர் பேசுவதைக் கேட்பது கடினமானது.

உலகிலேயே மிகப்பெரிய மொத்த விற்பனை சந்தைகளுள் ஒன்றான, சீனாவின் யிவூ எனும் சிறுநகரில் அமைந்துள்ள சந்தையில் ஹூடியான்கியாங்கின் ஸோங்ஸியாங் டாய்ஸ் எனும் கடை உள்ளது.

இந்தப் பகுதியில் 75,000க்கும் அதிகமான கடைகள் உள்ளன. மின்னும் கிறிஸ்துமஸ் விளக்குகள், குடைகள் முதல் மசாஜ் உபகரணங்கள் வரை பலவற்றை வாங்க மக்கள் இங்கே வருகின்றனர். இந்தச் சந்தையின் ஒரு பிரிவைச் சுற்றிப் பார்ப்பதற்கே ஒருநாளின் பாதி நேரம் செலவாகி விடும். ஏனெனில் ஒவ்வொரு பிரிவிலும் பரந்த அளவிலான கடைகளில் ஏராளமான பொருட்கள் காட்சிக்கு உள்ளன.

ஸேஜியாங் எனும் மாகாணத்தில், சீனாவின் கிழக்குக் கடற்கரையில் யிவூ நகரம் உள்ளது. உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மையமாக விளங்கும் இங்கு 30க்கும் மேற்பட்ட துறைமுகங்கள் உள்ளன. கடந்த ஆண்டு அமெரிக்காவுக்கு சீனாவில் இருந்து விற்பனையானதில் 17 வீதம் விற்பனை இங்கிருந்துதான் நடைபெற்றது.

அதனால்தான், யிவூ நகரமும் இந்தப் பிராந்தியமும் அமெரிக்கா- சீனா வர்த்தகப் போரில் முன்னணியில்



உள்ளன.

வரிசையாக வைக்கப்பட்டுள்ள கவர்ச்சிகரமான பொம்மை விமானங்கள், ஒல யெழுப்பும் நாய்கள், பஞ்சு பொதிக்கப்பட்ட பொம்மைகள், பார்பிக்கள் மற்றும் மோட்டார் சைக்கிளில் வலம்வரும் ஸ்பைடர்மேன் பொம்மைகளுடன் ஹூடியான்கியாங்கும் அமர்ந்திருக்கிறார். இவற்றில், 2024ஆம் ஆண்டில் 34 பில்லியன் டாலர் மதிப்பிலான பொம்மைகள் சீனாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன.

இதில், 10 பில்லியன் டாலர் மதிப்பிலான பொம்மைகள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகின. ஆனால், தற்போது அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகும் இவை 245 வீதம் வரை இறக்குமதி வரியை எதிர்கொள்கின்றன. உலக சந்தையில் ஆதிக்கம் செலுத்துவதாக சீனா மீது அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் குற்றம் சாட்டியுள்ளார்.

ஆனால், 2018ஆம் ஆண்டில் சீனாவுக்கு எதிரான ட்ரம்பின் முதல் வர்த்தகப் போரில் இருந்ததைவிட இப்போது இங்கு நிலைமை மாறியுள்ளது. அந்த வர்த்தகப் போர் யிவூ நகருக்குப் படிப்பிணையை கொடுத்துள்ளது.

'மற்ற நாடுகளிடமும் பணம் இருக்கிறது' என்று அந்தப் படிப்பிணையைச் சுருக்கமாகக் கூறுகிறார் ஹூ.

மற்றுமொரு கொந்தளிப்பான ட்ரம்ப் நிர்வாகத்துக்குத் தயாராகியுள்ள உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார நாட்டில், இந்த வர்த்தகப் போருக்கு நிலையான எதிர்ப்பு உள்ளது.

அமெரிக்கா, உலக நாடுகளை வர்த்தகப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட அச்சுறுத்துவதாகத் தொடர்ந்து கூறி வரும் சீன அரசு, வர்த்தகப் போரில் இருந்து இன்னும் பின்வாங்கவில்லை.

ட்ரம்பின் நடவடிக்கையால் ஏற்பட்ட நிச்சயமற்ற தன்மைக்கு மாற்றாக, சீனாவின் புதுமையான, ராஜதந்திர நடவடிக்கைகளுக்கு இணையத்தில் எழுந்துள்ள பாராட்டுகள் அதிகரித்து வருகின்றன.

சீனாவில் அதிகளவில் கட்டுப்பாடுகள் இருக்கக்கூடிய சமூக ஊடகங்களில், சீனா தொடர்ந்து போராடும் என்ற நாட்டின் தலைமையின் உறுதிமொழியைப் பிரதிபலிக்கும் பதிவுகள் அதிகம் உள்ளன.

ட்ரம்புடைய அமெரிக்காவை தாண்டி தங்களுக்கு மாற்று வழிகள் இருப்பதாக தொழிற்சாலைகள், சந்தைகள், தொழிலதிபர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் கூறுகின்றனர். தனது வியாபாரத்தில் சுமார் 20-30 வீதம் அமெரிக்காவில் இருந்து வந்ததாக ஹூ கூறுகிறார். ஆனால், இப்போது அப்படியல்ல.

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கம் மீதான கடப்பாட்டை...

(08ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய அரசியல் மற்றும் நிறுவன ரீதியான பின்புலத்திற்குள் உருப்படியான முன்னேற்றத்தை அடையக்கூடிய துறைகளைத் தெரிவுசெய்து, நல்லெண்ணத்தை வெளிக்காட்டி சர்வதேச நம்பிக்கையை கட்டியெழுப்புவதே அரசாங்கத்தின் முன்னால் உள்ள பணியாகும். 51-1 தீர்மானத்தின் பல்வேறு விதப்புரைகளை தேசிய சுயாதிபத்தியத்தை சமரசம் செய்யாமல் யதார்த்த பூர்வமாக நடைமுறைப்படுத்த முடியும்.

உண்மையைக் கண்டறிவதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பது, மோதல்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடுகளை வழங்குவது, பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்வது, மக்களால் தெரிவு செய்யப்படும் மாகாணசபைக்கு அதிகாரமளித்து வலுவூட்டுவதன் மூலமாக அதிகாரப் பரவலாக்கத்துக்கு புத்துயிர் அளிப்பது, ஆளுநர்களின் எதேச்சையான அதிகாரங்களை குறைப்பது மற்றும் நீண்டகாலமாக தாமதிக்கப்படும் மாகாணசபை தேர்தல்களை நடத்துவது எல்லாம் நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகளாக இருக்கும் என்பதுடன் அவை பெரும் தாக்கத்தையும் ஏற்படுத்தும்.

ஆக்கிரமிக்கப்பட்ட குடிமக்களின் காணிகளை திருப்பிக் கையளித்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டை வழங்குதல், ஆட்சிமுறையின் சகல மட்டங்களிலும் சிறுபான்மைச் சமூகங்களை உள்வாங்குதல் போன்ற நடவடிக்கைகள் இலங்கையின் அரசியலமைப்பு வரையறைக்குள்ளும் அரசியல் யதார்த்தத்திற்குள்ளும் சாதிக்கக்கூடிய நடவடிக்கைகளாகும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் விதப்புரைகளை கையாளுகின்ற அதே வேளை, நல்லிணக்கம் மற்றும் நீதி தொடர்பில் அரசாங்கம் அதன் சொந்த நோக்கையும் முன்வைக்க வேண்டியதும் அவசியமாகும்.

வெளியில் இருந்துவரும் நெருக்குதல்களுக்கு பிரதிபலிப்புக்களை வெளிப்படுத்துவதை விடுத்து அரசாங்கம் புதிய தேசிய தொடக்கத்துக்காக உள்நாட்டில் வடிவமைக்கப்படக்கூடிய நிகழ்ச்சிநிரல் ஒன்றின் அங்கமாக அதன் முயற்சிகளை தன்முனைப்புடன் முன்னெடுக்க வேணடும். அவ்வாறு செய்வது தேசிய கௌரவத்தை பேணிப் பாதுகாக்கின்ற அதேவேளை, சர்வதேச பொறுப்புணர்வை வெளிக்காட்டுவதாகவும் அமையும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைப் பொறுத்தவரை, கடந்தகாலத் துஷ்பிரயோகங்களுக்கு உடந்தையாக செயற்பட்டதாக குற்றச்சாட்டுகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய சுமை இல்லை. மாற்றத்துக்கான ஆணையொன்றின் மூலமாகவே அது ஆட்சியதிகாரத்துக்கு கொண்டு வரப்பட்டது. ஜி. எஸ். பி. பிளஸ் சலுகையை பாதுகாப்பதற்காக கடந்தகாலத்தில் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதற்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையுடன் ஊடாட்டங்களைச் செய்வதற்கும் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமாக இலங்கை இறுதியில் சர்வதேச கண்டனங்களில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ளவும் நல்லிணக்கம் மற்றும் சர்வதேச சமூகத்துடனான கூட்டுப்பங்காண்மையின் அடிப்படையில் புதிய பாதையை வகுக்கவும் இயலும்.

சட்டங்களை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச ஒழுங்கின் சீர்குலைவு தொடருவதுடன் பெரிய வல்லரசுகளுக்கு இடையிலான போட்டாபோட்டியும் தீவிரமடைந்துகொண்டிருக்கும் நிலையில், இலங்கை போன்ற சிறிய அரசுகள் கூட்டுப்பங்காண்மை மற்றும் பல்தரப்பு ஊடாட்டங்களின் ஊடாக தங்களுக்குரிய அந்தஸ்து நிலையைப் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

எதுவுமே இலவசமாகக் கொடுக்கப்படாமல் சகலதுமே பரஸ்பர நலன்களின் அடிப்படையில் கையாளப்படுகின்ற - வாணிப கொடுக்கல் வாங்கல்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு உலகில் முன்னரைப் போலன்றி இப்போது வேறு எதையும் விட நம்பிக்கையே முக்கியமானது. சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்துவதற்காக மாத்திரமல்ல, சிறப்பான ஆட்சிமுறைக்காகவும் உள்நாட்டில் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்காகவும் கூட மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் சகல சமூகங்களையும் அரவணைக்கின்ற ஆட்சிமுறை மீதான பற்றுறுதியை வெளிக்காட்டுவதன் மூலமாக இலங்கை சர்வதேச ரீதியில் அதன் கரங்களை வலுப்படுத்தவும் பெருமளவுக்கு நிலையுறுதியும் சுபிட்சமும் கொண்ட ஒரு எதிர்காலத்தை பெற்றுக் கொள்ளவும் கூடியதாக இருக்கும். ●

# ட்ரம்பின் வர்த்தகத்...

(13ம் பக்கத் தொடர்ச்சி)

'அந்த 20-30 வீதம் குறித்து நாங்கள் கவலைப்படுவதில்லை' என்கிறார் ஹூ. 'இப்போது நாங்கள் பெரும்பாலும் தென் அமெரிக்கா மற்றும் மத்திய கிழக்குக்கு விற்பனை செய்கிறோம். எங்களுக்கு வருமானத்தில் பற்றாக்குறை இல்லை, நாங்கள் பணக்காரர்களாக உள்ளோம்."

ட்ரம்ப் குறித்துக் கேட்டபோது ஹூவின் சகாவான சென் லேங் பதில் கூறுகிறார். 'அவர் சர்வதேச நகைச்சுவைகளைக் கூறுகிறார். ஒவ்வொரு நாள் ஒவ்வொரு நகைச்சுவையைக் கூறுகிறார். வரியை உயர்த்துவதும் அவருக்கு ஒரு நகைச்சுவையைப் போன்றதுதான்."

அந்தக் கடைக்கு அருகில், ஒலிப்பானுடன் கூடிய கார்களாக மாறக்கூடிய 100க்கும் அதிகமான ரோபோட்டுகளை வாங்குவதற்கு, இந்தச் சந்தைக்கு தினமும் வரக்கூடிய ஆயிரக்கணக்கானவர்களுள் ஒருவர் பேரம் பேசிக் கொண்டிருந்தார். கால்குலேட்டரில் பல எண்களைத் தட்டிப் பார்த்த பிறகு, இறுதி விலை சாக்பீஸ் கொண்டு தரையில் எழுதப்பட்டது.

தான் துபையில் இருந்து வந்ததாக அவர் கூறினார். ஆப்பிரிக்கா மற்றும் தென் அமெரிக்கா முழுவதிலும் இருந்து அங்கு வந்திருந்த பலரையும் கணமுடிந்தது.

லின் ஸியுபெங் கூறுகையில், கடந்த 10 ஆண்டுகளில் இங்கு பொம்மை விற்பனை அமெரிக்க வாங்குநர்களைச் சார்ந்திருப்பதில் இருந்து விலகி வந்துவிட்டதைத் தாம் கவனித்திருப்பதாகக் கூறுகிறார்.

'எங்களுக்குப் பக்கத்தில் உள்ள கடை ஒன்றுக்கு சில தினங்களுக்கு முன்பு, அமெரிக்க வாடிக்கையாளர் ஒருவரிடம் இருந்து ஆர்டர் வந்தது. அதன் மதிப்பு, 10 லட்சம் யுவானைவிட அதிகம். ஆனால், இறக்குமதி வரி காரணமாக, அந்த ஆர்டரை ரத்து செய்ய அந்த உரிமையாளர் முடிவெடுத்தார்,' என்று எங்களுக்குப் பருக தேநீர் கொடுத்துக் கொண்டே கூறினார்.

'அவர்களுக்கு (அமெரிக்கா) சீனா நிச்சயமாக தேவை,' எனக் கூறும் அவர் அமெரிக்க பொம்மைகள் சீனாவில் அதிகம் விற்பனை செய்யப்படுவதாகக் கூறினார்.

'சமீப நாட்களாக அமெரிக்காவில் விற்பனையாளர்கள் பலரும் இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக நினைக்கிறேன்.'

லின் சொல்வது சரிதான். இந்த வரி விதிப்பு தங்களுடைய தொழில்களுக்கு 'பேரழிவை ஏற்படுத்துவதாக," அமெரிக்க பொம்மைக் கடை உரிமையாளர்கள் பலரும் வெள்ளை மாளிகைக்குக் கடிதம் எழுதினர்.

'இந்த வரிவிதிப்பு காரணமாக அமெரிக்கா முழுவதும் உள்ள சிறு தொழில்கள் பாதிப்புகளைச் சந்தித்து வருவதாக," லாஸ் ஏஞ்சலீஸில் பொம்மை நிறுவனம் ஒன்றை நடத்தி வரும் ஜொனாதன் கேத்தீயிடம் பேசிய போது கூறினார்.

கடந்த 2009ஆம் ஆண்டில் லாயல் சப்ஜெக்ட்ஸ் எனப்படும் தனது நிறுவனத்தில் தன்னுடைய கடைசி 500 டாலர்களை முதலீடு செய்திருந்தார் அவர்.

வெஸ்ட் ஹாலிவுட்டில் உள்ள இரண்டு அறைகளைக் கொண்ட பங்களாவில் இருந்து தனது நிறுவனத்தை நடத்திவந்தார். தற்போது அது பல லட்சக்கணக்கான டாலர் வணிகமாக உயர்ந்துள்ளதாகவும் ஆனால் வரிவிதிப்பு தமது திட்டங்களை அழித்துவிடும் என்றும் அவர் கூறினார்.

'ஒட்டுமொத்த பொம்மை தொழிலும் சரிவைச் சந்திக்கும். விநியோகச் சங்கிலியில் ஏற்பட்டுள்ள ஒட்டுமொத்த சேதங்களைக் கவனித்து வருகிறோம். இன்னும் இது மோசமாகும்' என அவர் எச்சரிக்கிறார்.

விற்பனையாளர்களை மாற்றுவது கடினமான பணி என அவர் கூறுகிறார். 'ஒரு பொம்மையை உற்பத்தி செய்ய களத்தில் நிறைய வளங்கள் தேவை. சீன வணிகர்கள் இந்தத் தொழிலை சுமார் 40 ஆண்டுகளாக நேர்த்தியாகக் கட்டமைத்துள்ளனர்.'

ட்ரம்ப் ஆட்சி பொறுப்பேற்ற முதல் 100 நாட்களில் சீனா முக்கியப் பங்கு வகித்தது, ட்ரம்ப் நிர்வாகமும் சீனாவும் நேரடியாக எதிர்கொண்டது.

'ஒட்டுமொத்த உலகுக்கும் எதிராக அவர் (ட்ரம்ப்) போர் தொடங்கியிருப்பதாகத் தெரிகிறது,' என (சீனாவின்) மக்கள் விடுதலை ராணுவத்தின் முன்னாள் கர்னல் ஸேராவ் போ கூறுகிறார். 'நிச்சயமாக, சீனாவை கடுமையாகத் தாக்குவதற்கு அவர் முயல்கிறார்," என்றார் அவர்.

ஹாங்காங்கில் செயல்பட்டு வரும் நிறுவனத்தால் இயக்கப்படும் பனாமா கால்வாயை சீனா இயக்கி வருவதாகக் குற்றம்சாட்டும் ட்ரம்ப், அதை மீண்டும் கைப்பற்ற உறுதிபூண்டுள்ளார். சீனா ஏகபோகமாக அனுபவித்து வரும் அங்குள்ள அரிதான கனிமங்களை வெட்டி எடுப்பதற்கான வழிகளை அவர் யோசித்து வருகிறார்.

உக்ரேனுடனான எந்தவொரு ஒப்பந்தம் ஏற்படுவதற்கும் முக்கியமான அம்சமாக பனாமா கால்வாய் உள்ளது. ஆர்டிக் பகுதியில் சீனாவின் நோக்கங்களை முறியடிக்கும் நோக்கிலேயே கிரீன்லாந்தை கைப்பற்றுவதற்கான எச்சரிக்கையையும் ட்ரம்ப் விடுத்ததாகக் கருதப்பட்டது.

மேலும் மற்றொரு வர்த்தகப் போரையும் ட்ரம்ப் தொடங்கியுள்ளார். சீனாவின் வளர்ந்து வரும் விநியோகச் சங்கிலிக்கு முக்கியமாக உள்ள, அதன் அண்டை நாடுகளான வியட்நாம் மற்றும் காம்போடியாவை இந்த வர்த்தகப் போர் இலக்காக வைத்துள்ளது.

சீன பொருட்கள் மீதான இறக்குமதி வரி பாதியாகக் குறைக்கப்படும் என ட்ரம்ப் கடந்த வாரம் கூறியிருந்தார். 'சீனாவுடன் நியாயமான ஒப்பந்தத்தை' ஏற்படுத்துவது தொடர்பாகத் தனது நிர்வாகம் முனைப்பாக பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

ஆனால், இந்தக் கூற்றை சீனாவின் வர்த்தக துறை அமைச்சர் 'அடிப்படையற்றது, உண்மைக்கு மாறானது' என மறுத்தார். சீன அரசு ஊடகமும் அதையே தெரிவித்திருந்தது. 'அமெரிக்க வரலாற்றிலேயே ட்ரம்ப் மிக மோசமான ஓர் அதிபர்,' என அரசுத் தொலைக்காட்சியில் கூறப்பட்டது.

இதுதொடர்பாக சீன அதிபர் ஷி ஜின்பிங்கே நேரடியாகப் பேச வேண்டும் என அமெரிக்க அதிபர் காத்திருப்பதாகத் தெரிகிறது.

'சீனாவில் ஏதேனும் நிச்சயமற்ற சூழல்களில் சிறிது காத்திருக்க வேண்டும் எனக் கூறுவோம்,' என்கிறார் கோல் ஸோவ். 'அதாவது, நிச்சயமற்ற சூழல்களில் அடுத்து என்ன நடக்கும் என்பது நமக்குத் தெரியாது. இத்தகைய பழிக்குப் பழி நடவடிக்கைகள் ஓரிரு மாதங்களுக்கு நீடிக்கலாம், மூன்று மாதங்களுக்கு மேல் அவை நீடிக்காது என நம்பலாம்.'

தொடர்ந்து நிலைமை அப்படியே இருக்காது எனக் கூறும் அவர் அப்படி தொடர்ந்தால் நன்றாக இருக்காது என்றும் கூறினார்.

நிச்சயமாக அது சீனாவுக்கு நல்லதல்ல. ட்ரம்பின் வரிவிதிப்பு மட்டும் அந்நாடு எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால் அல்ல, உள்நாட்டிலும் அந்நாடு பொருளாதார நெருக்கடி, நுகர்வு விகிதம் குறைதல் முதல் வீட்டு நெருக்கடி வரை பல பிரச்னைகளை எதிர்கொண்டு வருகிறது. இந்தப் பிரச்னைகள் மக்களின் சேமிப்புகளையும் வருங்காலத்துக்கான நம்பிக்கையையும் சிதைத்துள்ளது.

இந்த மோசமான காலகட்டத்தில் ட்ரம்பின் வரிவிதிப்பும் சீன தொழில்கள் மீது தாக்குதலை ஏற்படுத்தி வருகிறது. கோல்ட்மேன் சச்ஸ் எனும் முதலீட்டு வங்கி நிறுவனம் இந்த ஆண்டு சீனாவின் பொருளாதாரம் 4.5 வீதம் எனும் அளவில் உயரும் என்று கணித்துள்ளது, இது அரசின் இலக்கான 5 வீதத்தை விடக் குறைவு. (பிபிசி)

# உழைப்பு...

(06ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறுதான் நடத்த முடியும் என்கிறது நிர்வாகம்.

பணி செய்யும் 22 மணி நேரமும் நின்றுகொண்டேதான் வேலை செய்ய வேண்டும். கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாததுமான பஞ்சுத் துகள்கள் தொழிற்சாலை முழுக்க மிதந்த வண்ணமே இருக்கும். அத்தனை மணி நேரம் தொடர்ந்து வேலை செய்வதால் முகக்கவசம் அணிய முடியாது. பஞ்சுத் துகள்கள் மூக்குக்குள் சாதாரணமாக நுழையும். 62 கிலோ நூல் சரக்கு மூட்டையை முதுகில் 40 , 50 அடி தொலைவு 'மெஷின் மேன்' கள்தான் முதுகில் தூக்கிவைத்து இயந்திரத்தின் அருகில் கொண்டுவந்து வைக்க வேண்டும். முதுகில் சரக்கை ஏற்றிவிட மட்டும் ஒரு உதவியாளர் இருப்பார். சில இயந்திரங்களில் இரட்டையர் வேலை பார்ப்பர். ஒருவர் வேலை செய்யும்போது இன்னொருவர் சிறிது நேரம் ஓய்வெடுப்பார். பல மெஷின்களில் ஒருவர் மட்டுமே வேலை செய்வார்.

பணி செய்யும்போது இறந்த குறிப்பிட்ட தொழிலாளி, அவரது இயந்திரத்தில் அவர் மட்டுமே வேலை செய்துள்ளார். அவர் அன்று வேலைசெய்த 18-ஆவது மணி நேரத்தில் இறந்துள்ளார். நின்றுகொண்டே வேலை செய்து கொண்டிருந்தவர், இயந்திரம் ஓடிக்கொண்டிருக்கும் போதே தேநீர் குடிப்பதற்கு சற்று நேரம் அங்கேயே நாற்காலியில் அமர்ந்தபோதுதான் உயிர்பிரிந்துள்ளது.

எட்டு மணி நேர உழைப்பு , எட்டு மணி நேர ஓய்வு, எட்டு மணி நேர உறக்கம் என்று 1886 மே 1-ஆம் தேதி அமெரிக்கா சிகாகோவில் நடைபெற்ற தொழிலாளர் உரிமைப் போராட்டத்தின் மூலம் உலகத் தொழிலாளர்களுக்கு ஒரு விடிவு கிடைத்தது.

உலக நாடுகள் அனைத்தும் எட்டு மணி நேர வேலையைச் சட்டமாக்கின. இந்தியாவின் முதல் மே தினம் 1923-ஆம் ஆண்டு சென்னை மாநகரில் அன்றைய பொதுவுடமைச் சிற்பி ம. சிங்காரவேலரால் கொண்டாடப்பட்டது. அதுதான் இந்தியாவிலேயே முதன்முதலாகக் கொண்டாடப்பட்ட மே தினம். 1949- இல் கவிஞர் தமிழ் ஒளி எழுதிய 'மே தினமே வருக' என்ற 143 வரிகளைக் கொண்ட கவிதை காவியப் பெருமை கொண்டதாகும்.

தமிழக முதல்வராக அண்ணா பொறுப்பேற்ற பிறகு, மே 1-ஆம் தேதியை 'உழைப்பாளர் தினம்' என்ற வகையில் அரசு விடுமுறையாக அறிவித்தார். இந்தியாவிலும் எட்டு மணி நேர உழைப்பு என்பதுதான் சட்டம். பல அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் இந்த சட்டத்தைப் பின்பற்றுகின்றன.

தொழிலாளர் நலச் சட்டங்கள் எவையும் ஆட்சியாளர்களின் மனிதாபிமான நடவடிக்கைகளால் நிறைவேற்றப்படவில்லை. மாறாக, தொழிலாளர்களின் ஒன்றுபட்ட போராட்டங்களாலும் தொழிற்சங்கங்களின் தொடர் முயற்சியின் விளைவாகவும் கிடைக்கப்பெற்றவை.

'தொழிலை வளர்ப்போம்! தொழிலாளர் உரிமை காப்போம்' என்பதுதான் தொழிற்சங்கங்களின் அடிப்படை முழக்கமும் அணுகுமுறையுமாகும். தொழில் வளராமல் தொழிலாளர்களுக்கான உரிமைகள் கிடைக்க வாய்ப்பு ஏற்படாது. அதே சமயத்தில் அதற்குச் சமமாக, தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் காக்கப்பட வேண்டும் நிலைநாட்டப்பட வேண்டும். சாதாரண தொழிற்சாலைகளில் மட்டுமல்ல, பெரு நிறுவனங்கள் (கார்ப்பரேட் நிறுவனங்கள்) பலவற்றிலும் மனிதாபிமான அணுகுமுறை அற்றுப்போய் கிடக்கிறது.

இங்கு சட்டம் அமலாக்கப்படவில்லை. அங்கு அதற்கான சட்டமே இல்லை. கார்ப்பரேட் நிறுவனங்கள் ஊதியம் அதிகம் கொடுத்து உரிமைகளை முடக்குகின்றன.

மே தினம் ... இதுவரை கிடைத்துள்ள சட்ட உரிமைகளைப் பெற்றுத்தந்த முன்னோடிப் போராளிகளுக்கு முறைப்படி நன்றி செலுத்தும் நன்னாள்.

அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசு உள்பட அனைத்துத் தரப்பினரும் ஆழ்ந்து சிந்தித்துச் செயல்பட உறுதியேற்க வேண்டிய உரிமைத் திருநாள். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஹல்காம்...

பிறகு விமானம் விடுவிக்கப்பட்டதை விமான நிறுவனம் உறுதிப்படுத்தியது. ஆனால் சிங்கப்பூருக்குச் செல்லும் அடுத்த விமானமான யு.எல். 308, பாதுகாப்பு நடைமுறைகள் காரணமாக தாமதமாகிவிட்டதாகக் குறிப்பிட்டது.

"சிறீலங்கன் எயார்லைன்ஸ் அனைத்து பயணிகள் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கிறது மற்றும் மிக உயர்ந்த பாதுகாப்பு தரங்களைப் பராமரிப்பதில் உறுதியாக உள்ளது" என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## 6 மாதங்களில்...

- என்று தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் இலங்கை வரலாற்றில் மிக பெரும் பலத்துடன் ஆட்சிக்கு வந்தது. ஆனாலும், ஆறே மாதத்துக்குள், பொருளாதார துறையில் திக்கு முக்காடி நிற்கிறது என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் முதல் முக்கியத்துவம் பொருளாதாரத்துக்கு வழங்கப்பட்டே ஆகவேண்டும். இல்லாவிட்டால் வர்த்தகம், தொழில்துறை கடுமையாக பாதிக்கப்படும். வேலையில்லா திண்டாட்டம் தலை விரித்து ஆடும். பணப் புழக்கம் கணிசமாக குறையும்.

இந்திய பொருளாரத்துடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தி, விசேட வர்த்தகச் சலுகைகளை கோரி பெற்று முன்னேறுவோம் என்றால், அதை செய்ய அநுர அரசுக்கு பொருளாதார தூர நோக்கு இல்லை. ஆகவே, அடுத்த வருட முதல் காலாண்டில், பொருளாதார நெருக்கடிக்கான வாய்ப்புகள் மிக அதிகம். அதை எதிர்கொள்ள நாம் கூட்டாக தயாராவோம்.

இந்த அரசாங்கம் இலங்கை வரலாற்றில் மிக பெரும் பலத்துடன் ஆட்சிக்கு வந்தது. ஆனாலும், ஆறே மாதத்துக்குள், பொருளாதார துறையில் திக்கு முக்காடி நிற்கிறது. "அரசாங்க செலவை குறைக்கிறோம், ஊழலை ஒழிக்கிறோம், ஊழல் செய்தவர்களை வழக்கு போட்டு சிறையில் அடைக்கிறோம்" என்று நண்பர் அநுரவின் அரசு சொல்வதை நான் நூற்றுக்கு நூறு வரவேற்கிறேன். இவை எனது கொள்கைகளும் தான்.

ஏற்றுமதியில் வீழ்ச்சி, வெளிநாட்டு மூலதனம் அறவே இன்மை, வேலை இழப்பு, பண புழக்கம் குறைவு என்பவற்றை தவிர்க்க இந்திய பொருளாரத்துடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தி விசேட வர்த்தக சலுகைகளை கோரி பெற்று முன்னேறுவோம் என்றால், அவை அரசாங்க செவிகளில் ஏறவில்லை.

**2024**ஆம் ஆண்டு 5 விகிதமாக இருந்த பொருளாதார வளர்ச்சி, **2025**ஆம் ஆண்டில் 3.5 விகிதமாக குறையலாம் என உலக வங்கி ஆரூடம் கூறியுள்ளது. ஜனாதிபதி ட்ரம்பின் வரி கொள்கை நிலைமையை மேலும் மோசமாக்கி உள்ளது.

ஏற்கனவே இந்தியாவில் இருந்து இலங்கைக்கு முதலீடுகள் வருவது நின்று போய், இன்று கணிசமான இலங்கை ஆடை உற்பத்தியாளர்கள் தங்கள் தொழிலகங்களை இந்தியாவை நோக்கி கொண்டு செல்லும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

ஆகவே, இவை எல்லாம் சேர்ந்து, அடுத்த வருட முதல் காலாண்டில், பொருளாதார நெருக்கடிக்கான வாய்ப்புகள் மிக அதிகம். இந்நிலையில், இன்று நாம் இடம்பெறும் அரசியல் கூட்டணியை மேலும் விரிவு படுத்தி ஊழல் இல்லாத, ஆனால், "அனுபவம், ஆற்றல்" கொண்ட மிகப்பெரிய அரசியல் கூட்டணியை கட்டி எழுப்பும் முயற்சிகளை நாம் ஏற்கனவே ஆரம்பித்து விட்டோம்.

மக்கள் ஆணையுடன் வந்துள்ள அரசாங்கத்தை வீழ்த்தும் நோக்கம் எமக்கு கிஞ்சித்தும் கிடையாது. ஆனால், எமக்கான தேசிய பொறுப்புகளை நாம் நிறைவேற்ற தயங்க மாட்டோம்- என்றார்.(அ)

## ஜனாதிபதி...

இந்த வியட்நாம் அரச விஜயம், இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான உறவுகளை மேலும் உறுதிப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அரச விஜயத்தின் போது ஜனாதிபதி, வியட்நாம் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் உத்தியோகபூர்வ கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளதுடன், கம்யூனிஸ கட்சியின் பொதுச் செயலாளர் உட்பட சிரேஷ்ட அதிகாரிகள் பலரையும் சந்திக்கவுள்ளார்.

மேலும், ஹோ சி மின் நகரில் நடைபெறும் ஐக்கிய நாடுகளின் வெசாக் தின கொண்டாட்டங்களில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, அதன்போது சிறப்புரை ஒன்றையும் நிகழ்த்தவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது இரு தரப்பினருக்கும் இடையில் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடவும், வர்த்தக சமூகத்தினரைச் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிநாட்லுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் சிரேஷ்ட அரச அதிகாரிகள் குழு ஒன்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுடன் இந்த அரச விஜயத்தில் பங்கேற்கவுள்ளனர். (அ)

## ரணிலுடன்...

அமைச்சர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் அமைச்சராக இருந்தாலும் எவ்வித பாதுகாப்பும் இல்லாமல் மக்கள் மத்தியில் செல்கின்றேன். ஆனால் அவர் எஸ். ரி. எவ். பாதுகாப்புடன் வலம் வருகின்றார். இது வெட்கம். இவர் மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதி. அநுரவை கால் வைக்க இடமளிக்கமாட்டாராம்.

தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாநகர சபை முதல்வர் வேட்பாளர் கபிலனுக்கு எதிராக வழக்கு தொடுக்கப்படுமாம். வழக்கு தொடுப்பதைத் தவிர அவருக்கு வேறு என்ன தெரியும்?

கபிலன் சுந்தரமூர்த்தி எமது கட்சியின் முதன்மை வேட்பாளர். அவர் தனி நபர் அல்லர். அவருக்கு பின்னால் எமது கட்சி, அரசாங்கம் உள்ளது. கபிலனுடன் விளையாட முற்படுவது எம்முடன் விளையாட முற்படுவதாகும். சாக்கடை அரசியலின் வெளிப்பாடாகவே அவரை இலக்கு வைத்து தாக்கி வருகின்றனர்.

யாழ்ப்பாணத்து மக்களால் விரட்டியடிக்கப்பட்டவர்கள் தமக்கான அரசியல் இருப்பைத் தேடுகின்றனர். அதனால்தான் போராட்டத்துக்கான அறைகூவல் விடுக்கின்றது. ஆனால் உண்மை என்னவென்பது மக்களுக்கு தெரியும்.

அதேவேளை, இந்நாட்டின் முன்னாள் போராளிகள் கனவு கண்டிருப்பார்கள். அது புலிகளாக இருக்கலாம், ஈ.பி.டி.பியாக இருக்கலாம், ஈ.பி.ஆர்.எல்.எவ்வாக இருக்கலாம். தமிழ் மக்கள் நிம்மதியாக, தன்மானத்துடன் வாழ வேண்டும் என்பது அவர்களின் கனவு. அந்த கனவை தற்போதைய தமிழ் அரசியல்வாதிகளால் நிறைவேற்ற முடியுமா? போராளிகளின் அர்ப்பணிப்புக்கு அவர்களால் அருகில்கூட வரமுடியாது.

அவர்கள் கனவு கண்டிருந்தாலும்கூட அந்த கனவை நனவாக்குவதற்குரிய வேலையை நாம் செய்கின்றோம். இயக்கங்கள் மீது உண்மையான பற்றுள்ளவர்கள் தேசிய மக்கள் சக்தியையே ஆரத் தழுவிக்கொள்ளவேண்டும்.

அதேவேளை, புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்கத்தை, உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. உண்மையான உரிமையாளர்கள் இல்லாதபோதுதான் அடுத்தக்கட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் - என்றார். (அ)

# இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் விரைவில் பாராளுமன்றுக்கு!

## ஜனாதிபதி அநுர குமார தெரிவிப்பு

கொழும்பு, மே 04

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட பாதுகாப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஒரு சில விடயங்கள் இரு தரப்பு இணக்கப்பாட்டுடன் எட்டப்பட்டுள்ளன. இந்தியாவுடன் இவ்விடயம் குறித்து கலந்துரையாடி வெகுவிரைவில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை பாராளுமன்றத்துக்கு சமர்பிப்பிபேன் என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.



கொழும்பு ஊடக ஒன்றுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்தியாவுடன் அண்மையில் கைச்சாத்திடப்பட்ட பாதுகாப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் கிடையாது. வலுசக்தி துறையின் சுயாதீனத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் வலுசக்திதுறை அச்சுறுத்தலுக்குள்ளானால் தேசிய பாதுகாப்பு பலவீனமடையும்.

இலங்கைக்கு மின்சாரத்தை விநியோகிக்கும் பொறுப்பை அரசாங்கம் இந்தியாவுக்கு வழங்கியுள்ளதாக எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை.

மின்சாரத்துறையின் சுயாதீனம் பற்றி தற்போது பேசுபவர்கள் தான் கடந்த ஆண்டு மின்சார சபையின் சுயாதீனத்தை அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் புதிய மின்சார சபை சட்டத்தை இயற்றினார்கள். இந்த சட்டத்தை வெகுவிரைவில் திருத்தம் செய்வோம்.

முப்படைகளின் எண்ணிக்கை குறைக்கப்படும். இதனை பகிரங்கமாகவே குறிப்பிடுகிறேன். இராணுவப் படையின் எண்ணிக்கை ஒரு இலட்சமாகவும், கடற்படையின் எண்ணிக்கை 40 ஆயிரமாகவும், விமானப் படையின் எண்ணிக்கை 18 ஆயிரமாகவும் வரையறுக்கப்படும்.

முப்படைகளின் எண்ணிக்கையை குறைத்து பாதுகாப்பு துறைக்கு புதிய நவீன தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் ஆயுதங்களை பெற்றுக்கொள்வதற்காகவே நிதி நெருக்கடிக்கு மத்தியில் இம்முறை பாதுகாப்பு அமைச்சுக்கு அதிகளவான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட பாதுகாப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் பற்றி மாறுபட்ட பல விடயங்கள் குறிப்பிடப்படுகின்றன. இராணுவப் பயிற்சி, புலனாய்வுத் தகவல் பரிமாற்றம் உட்பட பொதுவான விடயங்கள் மாத்திரமே இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இலங்கையின் தேசிய பாதுகாப்பு குறித்த தீர்மானங்களை எடுக்கும் உரிமை இலங்கை அரசுக்கு உண்டு என்று இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. குற்றச்சாட்டுக்களை முன்வைப்பவர்கள் இதனை அறியாமல் இருப்பது ஆச்சரியத்துக்குரியது.

பாதுகாப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏன் பகிரங்கப்படுத்தவில்லை என்று கேள்வியெழுப்பப்படுகிறது. பாதுகாப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஒரு சில விடயங்கள் இருதரப்பு இணக்கப்பாட்டுக்கு எட்டப்பட்டுள்ளது.

ஆகவே இந்தியாவுடன் இவ்விடயம் குறித்து கலந்துரையாடி அடுத்த வாரமல்ல வெகுவிரைவில் இந்தியாவுடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை பாராளுமன்றத்துக்கு சமர்பிப்பிபேன்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் அமைதியற்ற நிலை காணப்படுகின்ற சூழலில் கொழும்பில் குண்டுத் தாக்குதல் நடத்தப்படும் என்றும் ஒருசிலர் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறானவர்களின் கருத்துக்கள் குறித்து அவதானம் செலுத்தப் போவதில்லை. நாட்டின் தேசிய பாதுகாப்பை சகல துறைகளிலும் உறுதிப்படுத்தியுள்ளோம்-என்றார். (அ)

## இலங்கை...

நேற்று ஊடக சந்திப்பை நடத்திய வேளை அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொறுப்புக்களை பகிர்ந்து ஏற்க அனைவரும் ஒற்றுமையாக ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.(அ)

## படுகொலை...

சனிக்கிழமை மாலை 3 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதன்போது படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரியும், தாக்குதலுக்கு இலக்கான ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு நீதி கோரியும் ஊடகவியலாளர்கள் கோஷங்களை எழுப்பினர். (அ)

## இம்முறை...

நாயகம் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் ஆகியவற்றுக்கு ஐரோப்பிய ஒன்றியம், ஆசிய கண்காணிப்பு அமைப்பு உட்படக் கண்காணிப்புக்குழுக்கள் நாட்டுக்கு வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஐ.தே.க., பெரமுன...

கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கத்தை நிர்வகிக்க முடியாவிட்டாலும் தேசிய மக்கள் சக்திக்கு நன்றாக அரசியல் செய்ய தெரியும். இவர்களால் ஆட்சியை கொண்டுநடத்த முடியாது என்பது மக்களுக்கு தெரியும்.

வீழ்ந்த கட்டத்திலும் பார்க்க தற்போது ஐக்கிய தேசியக் கட்சி சிறந்த நிலையில் உள்ளது. ரணிலால் மட்டுமே நாட்டை மீட்க முடியும் என கிராம பகுதி மக்கள் நம்ப ஆரம்பித்துள்ளனர். ரணிலின் முக்கியத்துவம் உணரப்பட்டுவருகின்றது.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சி யானைச் சின்னத்தில் போட்டியிடுகின்றமையும் விசேட அம்சமாகும். எனவே, உள்ளூராட்சிசபைத் தேர்தலில் சிறந்த பெறுபேறு கிட்டும் என நம்புகின்றோம்.

பொதுஜன பெரமுன கட்சிக்கும் வரவேற்பு உள்ளது. ஏனெனில் மொட்டு கட்சி வாக்குகளே தேசிய மக்கள் சக்தியை சென்றடைந்தது. அந்த வாக்கு தற்போது மொட்டுக் கட்சி பக்கம் திரும்பி வருகின்றது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் தொழிற்சங்கப் போராட்டம் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், மே 04

**தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் முன்னெடுக்கப்படும் தொழிற்சங்க நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. எனினும், தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் உள்ளூராட்சி தேர்தலின் பின்னர் தொழிற்சங்க நடவடிக்கை மீள ஆரம்பிக்கப்படும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.**

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிவித்தலில்-

மே 2ஆம் திகதி காலை 8.00 மணி முதல் மே 3 ஆம் திகதி காலை 8.00 மணி வரை, நாம் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு இருக்கிறோம்.

தொழிற்சங்கப் போராட்டத்திற்கான அறிவிப்பு விடுக்கப்பட்ட பின்னர் , அவசர அவசரமாக வட மாகாண சுகாதார சேவைகள் செயலாளர் பணிமனையினால் ஒழுங்கமைக்கப்பட்ட கலந்துரையாடலின் இறுதியில் அடையப்பட்ட முடிவுகளின் பிரகாரம், வைத்தியசாலை நிர்வாகியின் மீது சுமத்தப்பட்ட குற்றங்களுக்கான ஒழுக்காற்று விசாரணையை ஆரம்பிப்பதற்குரிய உத்தியோகபூர்வ கடிதம் மாகாண சுகாதார சேவைகள் செயலாளரினால் வழங்கப்படுவதாக இருந்த போதிலும், உத்தியோகபூர்வக் கடிதத்தில் தீர்க்கமான விடயங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இருப்பினும் இந்த வேலைநிறுத்தத்தின் மூலம், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் நிலவும் நிர்வாகக் குறைபாடுகள் மற்றும் அக் குறைபாடுகளால் மருத்துவ சேவைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள், மருத்துவர்களுக்கான பாதுகாப்பற்ற பணிபுரியும் சூழ்நிலை ஆகியவற்றைப் பற்றிய விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்த முடிந்துள்ளது.

இது ஒரு நாள் வேலைநிறுத்தம் என்பதால் மே 3ஆம் திகதி காலை 8.00 மணியளவில் எங்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்த உள்ளோம். எனினும், எங்கள் போராட்டக் கோரிக்கைகளில் உறுதியாக இருந்து, உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர் தொழிற்சங்க நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்போம்.

எங்கள் சக ஊழியர்கள், பொது மக்கள் மற்றும் ஊடகங்கள் எம்மீது காட்டும் பேராதரவுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்- எனன்றுள்ளது. (அ)

## அமைதிக்காலம் ஆரம்பம்

கொழும்பு, மே 04

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அமைதிக் காலம நள்ளிரவு 12 மணி தொடக்கம் அமுலாகியுள்ளதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சி தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நேரம் வழங்கப்பட்டிருந்தது. குறித்த காலப்பகுதி நேற்று நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைந்தது. இந்த மௌனகாலப்பகுதியில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது.

339 உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடைபெறவுள்ளது. 72 ஆயிரம் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.13 ஆயிரத்து 759 வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. 5 ஆயிரத்து 783 வாக்கு எண்ணும் மையங்களில் வாக்கெண்ணும் பணிகள் இடம்பெறவுள்ளன.

48 மணிநேர அமைதிக் காலமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாத பட்சத்தில் அஞ்சல் அலுவலகங்களில் அதனைப் பெற்றுக்கொள்ள முடியும். செல்லுபடியாகும் அடையாள அட்டையை எடுத்துச் செல்லுமாறு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம். அங்கவீனமான வாக்காளர்களுக்கான போக்குவரத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன-என்றார். (அ)

## இளங்கோவனுக்கு பிரியாவிடை



யாழ்ப்பாணம், மே. 04

வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் ஏற்பாடு செய்த வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவனின் பிரிவுபசார வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவன் மற்றும் அவர் தம் பாரியார் ஆகியோர் ஆளுநர் செயலக ஊழியர்களால் வரவேற்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், ஆளுநரின் செயலாளர் மு. நந்தகோபாலன், ஆளுநர் செயலக கணக்காளர் சோ. பிரபு, ஆளுநரின் இணைப்புச் செயலாளர்களான எந்திரி அ. எ. சு. ராஜேந்திரா மற்றும் சர்வானந்தா, ஆளுநரின் ஊடகச் செயலர் கு. டிலீப் அமுதன் ஆகியோர் வடக்கு மாகாண பிரதம செயலரின் சேவையைப் பாராட்டி உரையாற்றினர்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவன் தனது 34 ஆண்டுகால அரச சேவையில் பல்வேறு ஆளுநர்களின் கீழ் ஆளுநரின் செயலாளராக 7 ஆண்டுகள் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-40)

## டெங்கு மற்றும் சிக்குன்குனியாவை கட்டுப்படுத்த செயலணி நியமனம்

கொழும்பு, மே 04

டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோய்களின் பரவலை கட்டுப்படுத்துவதற்காக செயலணி ஒன்றை நியமித்துள்ளதாக மேல் மாகாண சபை சுகாதார அமைச்சின் செயலாளர் ஏ. கலுகபுஆராச்சி தெரிவித்தார்.

நாட்டில் பதிவாகும் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கையில் 50 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் மேல் மாகாணத்திலிருந்து பதிவாகியுள்ளதாக அவர் கூறினார்.

இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் 17,000 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளதாக கொழும்பு மாநகர சபை தெரிவித்துள்ளது. இந்த எண்ணிக்கையில் 1,800 பேர் கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் இருந்து பதிவாகியுள்ளனர்.

மேலும், டெங்கு நோய் அபாயம் உள்ள 70,000 வீடுகள் பரிசோதிக்கப்பட்டுள்ளதாகவும் 471 வீடுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (எ)

## விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கு யாழ்.பதில் அரச அதிபர் விஜயம்

யாழ்ப்பாணம், மே. 04

தெல்லிப்பழை மற்றும் பருத்தித்துறை பிரதேசத்தின் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள 40 ஏக்கர் காணி இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட நிலையில் தெல்லிப்பழை பிரதேசத்துக்கு பதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன் நேற்று மு.ப. 11.30 மணிக்கு நேரடியாக விஜயம் செய்தார்.

வயாவிளான் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள ஒட்டகப்புலம் புனித அமலோற்பவ மாதா தேவாலயத்தில் பங்குத்தந்தை ஜே. ஏ. அருள்தாஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்ற பிரார்த்தனையில் பங்குகொண்டு, அங்கு கூடியிருந்த மக்களுடன் கலந்துரையாடினார். அதனைத் தொடர்ந்து விடுவிக்கப்பட்ட 20 ஏக்கர் காணியினை பொதுமக்களுடன் சென்று பார்வையிட்டார்.

இதன் போது அப் பிரதேசத்தில் கண்ணிவெடி தொடர்பான பரிசீலனையில் ஈடுபட்டு வரும் ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்துடன் கலந்துரையாடிய அரசாங்க அதிபர், கண்ணிவெடி பரிசீலனை எதிர்வரும் 07 ஆம் திகதியே நிறைவடைவதாக ஹலோ ட்ரஸ்ட் நிறுவனம் தெரிவித்துள்ளதாகவும், அதனை அடுத்து 08 ஆம் திகதி தடுப்பு வேலிகள் அகற்றப்பட்ட பின்னர் 09 ஆம் திகதி பொது மக்கள் தமது காணிகளுக்கச் சென்று காணிகளை அடையாளப்படுத்தி தொடர் செயற்பாடுகளை மேற்கொள்ளலாம் எனவும் பதில் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து காங்கேசன்துறை மேற்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள மாங்கொல்லை கிராமத்திற்கு பதில் அரசாங்க அதிபர் விஜயம் செய்தார். (அ-02)

## கலாசாலையில் கருத்தரங்கு



யாழ்ப்பாணம், மே. 04

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் வருமான வரி தொடர்பான கருத்தரங்கு அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்றது.

வருமான வரி பற்றிய அறிமுகமாகவும், வரி செலுத்துநர் அடையாள இலக்கம் (ரின் இலக்கம்) பெற்றுக் கொள்வதற்கான வழிமுறை தொடர்பான விழிப்புணர்வை வழங்குவதாகவும் இக்கருத்தரங்கு இடம்பெற்றது.

இதன் வளவாளர்களாக யாழ்ப்பாணத்தில் உள்ள வரி செலுத்துதல் தொடர்பான தனியார் ஆலோசனை நிறுவனத்தின் இயக்குநர்களான பட்டயக் கணக்காளர் கே.கேந்திரன், கணக்காளர் சி. சிவதர்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரசின் வரிக்கொள்கை தொடர்பாகவும் தனிநபர் ஒருவர் செலுத்த வேண்டிய வருமான வரி தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டதுடன். ரின் இலக்கம் ஒன்றைப் பெறுவது தொடர்பான செயல்முறை அறிவும் வளவாளர்களால் வழங்கப்பட்டது

இதேவேளை வளவாளர்கள் இருவரும் கலாசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டனர். (அ)

# சுதந்திர கட்சியை ஒன்றிணைக்க மைத்திரிபாலவிடம் கோரிக்கை

கொழும்பு, மே 04

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் குழு, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கட்சியை ஒன்றிணைப்பதற்கான திட்டத்துக்கு தலைமை தாங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

தலைமைப் பதவியை ஏற்க விருப்பமில்லை என்றால் அதை ஏற்காமல் இருந்தாலும், கட்சியை ஒன்றிணைப்பதற்கான திட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறு அமைப்பாளர்கள் கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இரு தடவைகள் இந்தக் கோரிக்கையை முன்னாள் ஜனாதிபதியிடம் அமைப்பாளர்கள் முன்வைத்துள்ளனர்.

"நாம் சிறீ லங்கா" என்ற சிறீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்த மற்றோர் அமைப்பும் இதே கோரிக்கையை முன்வைத்துள்ளது.

எனினும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தக் கோரிக்கைக்கு நேரடியாக பதிலளிக்கவில்லை.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குப் பின்னர் இது குறித்து கவனம் செலுத்துவதாக அவர் கூறியுள்ளார்.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் தற்போது பல நெருக்கடிகள் எழுந்துள்ளன. பல தரப்பினரால் எடுக்கப்பட்ட நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் கட்சியின் அரசியல் நிலைமை சிக்கலானதாக உள்ளது.

ஆனால், முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் தொடுத்திருந்த நீதிமன்ற வழக்குகளிலிருந்து விலகுவதற்கு முடிவு செய்துள்ளனர்.

எனினும், துமிந்த திஸநாயக்க, விஜயதாஸ ராஜபக்ஷ, தயாசிறி ஜயசேகர ஆகிய கட்சி உறுப்பினர்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் இன்னும் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சிறீ லங்கா சுதந்திரக் கட்சி "நாற்காலி" சின்னத்தில் போட்டியிட முடிவு செய்துள்ளது.

தேர்தலுக்குப் பின்னர், சிறீ லங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் புனரமைப்பு செய்யப்படும் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.